பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

## செப்டம்பர் – 2019



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

## ISSN : 2278-7550

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

மலர் : 7 செப்டம்பர்-2019 இதழ் : 9



**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gamil.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, C.Mutlur, Chidambaram.*

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனைக் குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.*

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. தனி இதழ் விலை ரூ.300/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 2400/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3000/- |
| வாழ்நாள் கட்டணம் | - | ரூ. 25,000/- |
| புரவலர் கட்டணம் | - | ரூ. 50,000/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**Mobile Banking**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. புறநானூறு சுட்டும் ஆட்சியறம்

***முனைவர் இரா.அறிவழகன் - 1**

2. நெடுநல்வாடையில் உள்ள கலைகள்

***முனைவர் சி.சுஜாதாப்பீத் - 4**

3. தற்காலத் தமிழ் இலக்கணமும் அமைப்பியலும்

***ரா.பிரேம்குமார் - 7**

4. சிலப்பதிகாரம் காட்டும் நாடகக்கலை

***மை.ரோஜா லிபோரியா - 10**

5. சங்க இலக்கியத்தில் வழிபாடுகள்

***முனைவர் சீ.பாத்திமா - 12**

6. மறத்தமிழனின் அறவியல் கோட்பாடு

***ஜெ.கவிதா - 15**

7. பட்டினப்பாலையில் அழகியல்

***முனைவர் மு.லோகநாயகி - 19**

8. பாவண்ணன் சிறுகதைகளில் அறச் செயல்கள்

***மு.சாதிக் அலி - 22**

9. மூவேந்தரின் முருகியல் படைப்பு

***முனைவர் இரா.விஜயசாமுண்டிஸ்வரி - 25**

10. புறநானூற்றில் அறவியல்

***முனைவர் பா.ஈஸ்வரன் - 28**

11. பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் அறம்

***க.நர்கீஸ் - 32**

12. சித்தர் பாடல்களில் அறநெறிக் கலைச்சொற்கள்

***அ.ஜெய எபினி - 35**

13. கடுவெளிச்சித்தரின் அறச்சிந்தனைகள்

***க.விமலா - 38**

14. புறநானூறு சுட்டும் கடிமரம் - ஓர் அறவியல் பார்வை

***பா.செங்கேணி - 41**

15. திருக்குறள் அறவியல் உணர்த்தும் மனநலம்

***ஆ.அடிசன் - 44**

# புறநானூறு சுட்டும் ஆட்சியறம்

***முனைவர் இரா.அறிவழகன்**, துணை முதல்வர், தமிழ்த் துறைத் தலைவர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மகளிர் கலைக் கல்லூரி, சேந்தமங்கலம், திருவாரூர்.

தமிழ் இலக்கியங்கள் வழியான தமிழர் வாழ்வை அகம்புறம் என்கிற இரு கண்களின் வாயிலாக நோக்க முடியும். அகம் பேசுகிற காதல், இல்லறம் போன்றே புறம் பேசுகிற வீரம், கொடை, அறம் போன்றவையும் சிறப்பு வாய்ந்ததே. இதுவும் தமிழர்களின் நலன் பேசுவதாகவே உள்ளது.

இதை "வாழ்வின் உண்மைகளை ஆழ்ந்து சிந்திக்கவும் இளமை, பொருள், யாக்கை என்பன நிலையாது கழியும் நிலையில் நிலைத்தப் பொருள் குறித்த எண்ணத்தைத் தூண்டவும் புறத்திணை இலக்கியமே வழி வகுத்தது. பண்டைத் தமிழக வரலாற்றையும் சமூக நிலையையும் இன்று நம்முன் காட்டும் ஆடியாகப் பொலிவது புறத்திணை இலக்கியம்" என்று புகழ்கிறார் கு.வெ.பா. (இரா.மோகன், 2010:51). புற இலக்கியங்கள் கூறும் கொடை, வீரம், ஆட்சி, அறம், நிலையாமை, விழுமியம் போன்றவற்றின் வாயிலாகப் பண்டைய தமிழ் மக்களின் புற ஒழுகலாறுகளைக் காண முடிகிறது. குறிப்பாக சுமார் 500 ஆண்டு கால தமிழ் அரசியல் வரலாற்றை அதன் மாற்றங்களை அறிந்து கொள்ள சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன.

**அரசன்**

அரசன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னோடியாகப் பண்டைய தமிழ் மன்னர்கள் இருந்துள்ளனர் என்பதைப் பல பாடல்களின் வழி விளக்கலாம். அரசன் தன்னுடைய நன்மைக்காக வாழ்பவன் அல்ல. நாட்டின் நன்மைக்காக வாழ்பவன். ஆவன் ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் குறைகளைப் போக்குபவன். அப்படி இருக்கிற மன்னனை மக்கள் தங்களின் உயிராகக் கருதியுள்ளனர். அப்படி உயிராகக் கருதுவதற்குத் தகுதியான மன்னர்களும் இருந்துள்ளனர்.

**"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிரென்ப தறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"**

எனும் புறநானூறு (186) பாடலில் எங்களுக்கு உள்ள எல்லாத் துன்பங்களையும் காத்து வருவதைக் கடமையாகக் கொண்ட அரசன் இங்குள்ள மக்களுக்கெல்லாம் உயிராக மதிக்கப்படுவான் என்கிறார் மோசிகீரனார். மன்னனின் பண்பாட்டையும் மக்களின் பண்பாட்டையும் விளக்குவதாக உள்ளது. அதே சமயம் ஒரு மன்னன் எப்படியெல்லாம் நடக்க வேண்டும் எனக் கூறி நெறிப்படுத்தும் பாடல்களும் உள்ளன.

**"வழிபடுவோரை வல் அறிதீயே**
**பிறர்பழி கூறுவோள் மொழிதே றலையே**
**நீமெய் கண்ட தீயை காணின்**
**ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி;**
**வந்து அடி பொருந்தி முந்தை நிற்பின்**
**தண்டமும் தணிதி நீ பண்டையின் வெரிதே**
**அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அழகில்**
**வருநர்க்கு வரையா விசைஇல் வாழ்க்கை**
**மகளிர் மலைத்தல் அல்லது மன்னர்**
**மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப!**
**செய்து இரங் சாவினைச் சேண்விளங்கும்புகழ்**

செய்தலங் கானல் நெடியோய்!

எய்தவந் தனம்யாம், ஏத்துகம் பலவே!"

எனும் புறநானூறு 370 ஆம் பாடலில் ஊன் பொதி பசுங்குடையார் எனும் புலவரின் பாராட்டு மொழிகளைக் கொண்டதாக உள்ளது. இப்பாடலுக்கு உரை எழுதிய ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் "இப்பாட்டின் கண் இளஞ்சேட் சென்னி நெய்தலங்கானலிடத்தே இருக்குங்கால் தன்னை வழிபடுவோரைத் தழுவிக் கோடலும், பிறர் பழி மேற்கொள்ளாமையும் குற்றம் செய்தாரை நன்காராய்ந்து சீறுத்தலும் அடியடைந்தாரை ஏற்றலும் மனை வடிவில் இன்புறுதலும் உடையனாய் முன் செய்து பின்னிரங்கா விளையும் நாடு முழுவதும் பரந்த நல்லரையும் கொண்டு சிறப்புற்றது கண்டு மகிழ்கிறார்" (இரா.மோகன், 2010;53)

அரசனின் கடமையாகச் சிலவற்றைக் கூறுகிறார் குடபுலவியனார் எனும் புலவர். பல செய்திகளைக் கூறும் இவர் மக்கள் அனைவருக்கும் உணவு கொடுத்தல் அவசியமான ஒன்று என்பதை புறநானூறு 18 ஆம் பாடலில்

"உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத்தோரே

உண்டி முதற்றே யுணவின் பிண்டம்

உணவென்படுவது நிலத்தொடு நீரே

நீரு நிலனும் புணரி யோரின்

உடம்பும் உயிரும் படைத்திச் னோரே"

உணவு என்பது நீர் வளமுடைய நிலம் எனக் கூறி அவற்றைக் கிடைக்க ஏற்பாடு செய்வது அவசியம் என்கிறார். இதன் மூலம் மக்களின் உணவுத் தேவையை தீர்க்க வேண்டியது மன்னனின் முதற்கடமை என்கிறார்.

**ஆட்சி**

அரசன் செய்கிற ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதையும் புறப்பாடல்களே விளக்குகின்றன. அரசின் அடிப்படையாக அறநெறியே இருக்க வேண்டும் எனக் காட்டுகின்றனர் சங்கச் சான்றோர்.

"கடுஞ்சினத்த கொல்களிலும்

கதழ்பரிய கலிமாவும்

நெடும் கொடிய நிமிர் தேரும்

நெஞ்சுடைய புகழ் மறவரும் என

நான்குடன் மாண்ட தாயினுமாண்ட

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

எனும் புறநானூறு 55 – ம் பாடல் அரசாட்சியின் வெற்றி என்பது படைபலத்தில் மட்டும் இல்லை. வீரமான யானைப்படை. ஆற்றல்சார் குதிரைப்படை, உயர்ந்த வலிய தேர்ப்படை, கலங்காத காலாட்படை இவை நான்கும் அரசுக்கு அடிப்படை இல்லை. சிறந்த அறநெறிகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்வதே சிறப்பு எனும் புலவர் மருதனிள நாகனார் வேந்தனின் வெற்றி என்பது மாட்சியமைப்பட்ட அறநெறியை முதலாகக் கொண்டதாகும் என அரசு முறையை நெறிப்படுத்துகிறார்.

அரசன் மக்களிடம் வரி வசூலிப்பது எப்படி இருக்க வேண்டும் என்று கூறி வழி காட்டுகிறார் பிசிராந்தையார். மக்களின் திறம் அறிந்து வரி கொள்ளுதல் என்பதும் சிறப்பிற்குரியதே என்பதாக அமைகிறது. புாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுரைக் கூறும் இப்பாடல் அன்றைய அரசியல் சூழலையும் புலவர்கள் பெற்றிருந்த நிலையையும் உணர்த்துகின்றது.

"காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே

மாநிறைவு இல்லதும் பன்னாட்டு ஆகும்.

நூறு செறுவாயினும் தமித்துப் புக்கு உணினே

வாய்புகவேதினினும் கால் பெரிது கெடுக்கும்

அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே

கோடியாத்து நாடு பெரிது நந்தும்

மெல்லியன் கிழவனாகி வைகலும்

வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு

பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்

யானை புக்க புலம் போலத்

தானு முண்ணா னுலகமுங் கெடுமே" (புறம் 184)

செவியறிஉ எனும் துறையலமைந்த இப்பாடல் விளைந்த நெல்லை நாம் அறுத்து சமைத்து உணவாக்கிக் கொடுத்தால் சிறிய அளவானாலும் அது பல நாட்களுக்கு வரும். யானை தானே சென்று உண்ண முற்பட்டால் நூறு வயல்களில் உள்ள நெல்லாயினும் அது வீணாய்ப் போய்விடும். வாயினுள் போவதைவிட காலினுள் போவது அதிகமாகிவிடும் என்பதை உணர்ந்து அறிவுடைய மன்னன் வரி வசூலிக்க வேண்டும் எனச் சொல்கிறது.

**போர் அறம்**

சங்க இலக்கியப் போர் வீரர்களின் வீரம் பற்றி பல பாடல்கள் உள்ளன. அவ்வாறான வீரம் செறிந்த சூழலிலும் அக்காலத்தவர்கள் அறம் போற்றினர். நாட்டு மக்களைப் பகைவர்களிடமிருந்து காத்தல் பொருட்டு போர் தேவையாய் இருந்துள்ளது. நாடு பரந்து விரிந்து இருந்தால் தனக்குப் புகழும் நாட்டு மக்களுக்கு நலமும் விளையும் எனவும் எண்ணினர். போர் காலத்தில் போருக்குத் தொடர்பு இல்லாதவர்களை அகற்றிவிட்டுப் போர் செய்துள்ளனர்.

**"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**

**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**

**பொன்போற் புதல்வர் பெறாற்கும்**

**எம்மம்பு கடி விடுதூஉம் உம்மரண் சேர்மின்" (புறம் 9)**

மறம் எனப்படுகிற வீரத்தால் வரும் புகழ் சுவர்க்கம் எய்துவிக்கும் என்கிற நம்பிக்கை இருந்தும் கூட அவர்கள் அறம் மாறாதவர்களாக இருந்ததை இப்பாடல் விளக்குகிறது. நெட்டியமையார் எனும் புலவர் அரசன் அம்பு விடுவதற்கு முன் செய்த எச்சரிக்கையினைக் காட்டி பண்டைத் தமிழரின் போர்ப் பண்பாட்டையும் மனிதாபிமானத்தையும் விளக்குகிறார்.

**முடிவுரை**

இனக்குழு சமூகம் முதல் பேரரசு உருவாக்கம் வரையிலான பல்வேறு அரசியல் மற்றும் ஆட்சியியல் செய்திகள் சங்க காலப் பனுவல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மன்னர்கள் அதிகாரம் மிக்கவர்களாக மாறிய சூழலைப் பதிவு செய்யும் பாடல்களோடு மன்னர்கள் மக்களுக்கு நெருக்கமானவர்களாக இருக்க செய்ய வேண்டியவற்றையும் பாடியுள்ளனர். மன்னர்களைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறும் புலவர்கள் அம்மன்னர்களை நெறிபடுத்தும் நிலையிலும் இருந்துள்ளனர். ஆட்சியும் மன்னனும் மக்களுக்கானது எனும் பண்டைய ஆட்சி மரபு என்றும் பின்பற்றத்தக்க ஆட்சியறம் என்றால் மிகையாகாது.

**துணை நூற்பட்டியல்**


1. ஔவை. துரைசாமி பிள்ளை 2007, புறநானூறு, 11, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. மாதையன் பெ. 2004, சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை.
3. மோகன் இரா. 2010, சங்க இலக்கியச் செவ்வி, வானதி பதிப்பகம், சென்னை.
4. வரதராசன் மு. 1994 தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாடமி, டெல்லி.

# நெடுநல்வாடையில் உள்ள கலைகள்

***முனைவர் சி.சுஜாதாப்ரீத்,** உதவிப் பேராசிரியர், ஸ்ரீ நாராயணகுரு கல்லூரி, கோவை.

**முன்னுரை**

உலகில் உள்ள கலைகளுக்கெல்லாம் தமிழர்களுடைய கலைகளே முன்னோடிகளாகும். உலகத்தில் நாகரிகம் பெற்ற மக்கள் அனைவரும் அழகுக் கலைகளை வளர்த்துள்ளனர். ஒரு சமுதாயத்தில் கலைகள் சிறப்புற்று விளங்குகின்றது எனில் அந்தக் கலைகளுக்குரிய சமுதாய மக்கள் மிகச் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ளலாம். நெடுநல்வாடையில் உள்ள கலைகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**கலைகள்**

சொல்லுகின்ற செய்திகளை அழகும், நேர்த்தியும்படச் சொல்லுவது கலையாகும். காண்போர், கேட்போர், படிப்போர்க்குச் சுவைபடவும் அவர்கள் மனங்கொள்ளுமாறும் அமைவதாகும். மேலும் மேலும் காணுமாறும், கேட்குமாறும் ஓர் ஆர்வத்தைத் தூண்டுவது இதன் அடிப்படைப் பண்பாகும்.

**“ஆய கலை களறுபத்து நான்கினையும்**
**ஏய வுணர்விக்கு மென்னம்மை தூய**
**உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே**
**இருப்பளிங்கு வாரா திடர்”**

என்ற செய்யுளின் மூலம் கலைகள் அறுபத்தி நான்கு உள்ளதை அறியலாம். கலைகளைப் பல வகையாக பகுப்பார்கள். நுண்கலை, பயன்கலை, பருண்மைக் கலை, கவின் கலை, நிகழ்த்து கலை என்பன இவற்றுள் முக்கியமானவையாகும்.

நுண்மையான உறுப்புக்களையும், திறன்களையும், உணர்வுகளையும் கொண்டது நுண்கலை. கவிதை, இசை, ஆடல், ஓவியம் முதலியன இதனுள் அடங்கும்.

பயன்களை முக்கிய நோக்கமாகக் கொண்டது பயன்கலை. கட்டடக் கலை, திரைப்படக் கலை முதலியன பயன்கலைகள் ஆகும்.

பருண்மைக்கலை என்பது பருப்பொருளாலான ஊடுபொருள்களைக் கொண்டு அமைவது. கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை இவற்றுள் அடங்கும்.

கவின்கலை என்பது அழகான தோற்றத்தை நோக்கமாகக் கொண்டு அமைவது. ஓவியன், ஒப்பனை முதலிய கலைகள் கவின் கலைகளாகும்.

நிகழ்த்து கலை என்பது பார்வையாளர் மத்தியிலிருந்து நிகழ்த்திக் காட்டப்படும் கலையாகும். ஆடல், கூத்து ஆகியவை நிகழ்த்து கலையேயாகும்.

**நெடுநல்வாடை**

பத்துப்பாட்டுகளுள் ஒன்று நெடுநல்வாடையாகும். தலைவனை விட்டுப் பிரிந்து இருந்த தலைவிக்கு நெடுவாடையாகவும், போருக்குச் சென்ற தலைவனுக்கு வெற்றித் தரக் கூடிய நல்வாடையாக அமைந்தததால் நெடுநல்வாடை என்ற பெயர் வந்தது. இந்நூலை அகப்பாடல் என்றும், அகம், புறம் சார்ந்தது என்றும் கூறுவர். இப்பாடலைப் பாடியவர் நக்கீரராவார்.

**நெடுநல்வாடையில் உள்ள அரண்மனையின் அமைப்பு**

அனைத்து திசைகளிலும் சூரியன் தன் கதிர்களைப் பரப்பி ஒளிவீசிக் கொண்டிருந்தது. அத்தகைய சூரியக் கதிர்களின் நிழல் வடக்கிலும் தெற்கிலும் சாயாமல் இருக்கின்ற சித்திரைமாதம் பத்தாம் நாள் தொடங்கி இருபது நாளுக்குள், சிற்ப நூல் கற்றறிந்த தச்சர்கள் நூலைப் பிடித்து திசைகளை அளந்தனர்.

**“….. மாதிரம்**
**விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்**

**இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்**
**பொருதிறற் சாரா அரைநாள் அமையத்து**
**நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்**
**தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்**
**பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து" (நெடுநல்வாடை 72-78)**

அந்தத் திசைகளுக்குரிய தெய்வங்களை வணங்கி அரசர்கள் வாழ்வதற்கு ஏற்ற மனைகளையும் அதற்குரிய வாசல்களையும், மண்டபங்களையும் அமைக்க வேண்டிய இடங்களையும் தேர்வு செய்தனர். மேலும் அவற்றைச் சுற்றி அமைக்க வேண்டிய மதில் சுவற்றின் அமைப்பையும், அளவையும் தச்சர்கள் அறிந்து கொண்டனர்.

**தச்சனின் வேலைப்பாடு**

ஆணிகளும், இரும்புச் சட்டங்களும் கொண்டு இரும்பினால் கட்டப்பட்ட சாதிலிங்கம் பூசப்பட்ட மரத்தில் இரண்டு கதவுகள் அமைத்திருந்தனர். அவற்றின் மேல்பகுதியில் குவளை மலர் உருவங்களையும், யானையின் உருவத்தையும் செதுக்கியிருந்தனர். இரண்டு கதவுகளையும் சார்த்தும்பொழுது இரண்டல்ல ஒன்றே என எண்ணுமளவிற்கு தச்சனின் நுட்பமான வேலைப்பாடு அமைந்திருந்தது.

**"கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து**
**ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை" (நெடு.85-86)**

அந்த நிலைக்கதவில் உறையும் தெய்வத்திற்காக சிறுகடுகும், நெய்யும் பூசப்பட்டது.

**அரண்மனையின் முன்றில்**

அரண்மனையின் வாசல்கள், மன்னனின் போர் வெற்றியை அறிவிக்கும் படியாக, யானையின் மீது அமர்ந்து உயர்த்திப் பிடித்த கொடிகளுடன் உள்ளே செல்லும்படி உயரமானதாக இருந்தன. மலையைப் பிளந்து வழி அமைத்தது போல கோபுர வாசல்களைக் கொண்டு விளங்கின. அரண்மனை முன்றிலில் வெண்மையான மணல் பரப்பியிருந்தது. அதன்மேல் கவரிமான்களும் அன்னப்பறவைகளும் விளையாடிக் கொண்டிருந்தன.

**"நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்**
**கிம்புரிப் பகுவாய் அம்பண நிறையக்**
**கவிழ்ந்து வீழ் அருவிப்பாடு விறந் தயல்" (நெடு.95-97)**

நிலவின் ஒளியை மன்னன் அனுபவிக்கும் விதமாக நிலா முற்றம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த முற்றத்தில் மகர வாயிலிருந்து நீர் கொட்டுவது போல் அமைத்திருந்தனர். மயில்களின் அகவலும், மற்றும் பல்வேறு பறவைகளின் சத்தமும் சேர்ந்து மலையில் கேட்கும் ஆரவாரம் போல அரண்மனையின் முன்றில் கலைநயத்துடன் அமைத்திருந்தனர்.

**சுதைச் சிற்பங்கள்**

அரண்மனையின் அந்தப்புரம் மலைபோல உயர்ந்து விளங்கியது. மலைகளில் வானவில் தோன்றியது போல பல்வேறு வண்ணக் கொடிகளுடன் காணப்பட்டது.

**"வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ**
**மணிகண்டன்ன மாத்திரள் திண்காழ்ச்**
**செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்" (நெடு.110-112)**

நீலநிற வைரக்கல் போன்ற மிகப்பெரிய நீண்ட தூண்கள் அமைத்திருந்தனர். அத்தூண்களில் உள்ள சுதைச் சிற்பங்களுக்கு வெள்ளியின் நிறத்தில் வர்ணம் தீட்டப் பெற்றிருந்தன. அச்சிற்பங்கள் வெள்ளியின் நிறத்தில் உயிர் பெற்றதைப் போல ஒளி வீசிக் கொண்டிருந்தன. உறுதியாகக் கட்டப்பட்ட சுவர்களில்,

**"உருவப் பல்பூ ஒரு கொடி வளைஇக்**
**கருவொடு பெயரிய காண்பி னல்லில்" (நெடு.113-114)**

அழகிய பூங்கொடிகள் ஓவியமாக வரையப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டிருந்தன.

**கட்டிலின் அமைப்பு**

40 ஆண்டுகாலம் வயதை உடையதும், முரசு போன்ற கால்களை உடையதும், போரில் புகழ்ந்துரைக்கப்பட்டதும், உயர்வான அழகை உடைய ஆண்யானை போரில் விழுப்புண்பட்டு இறந்தது. சிதைவுபடாத அதன் கொம்புகளைக் கொண்டு தொழில் வல்லமை வாய்ந்த கலைஞன் மிக அழகான கட்டிலை அமைத்திருந்தான். அதில் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்திருந்தன.

**“புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்டு**
**உள்ளிநோன் முதல் பொருத்தி அடியமைத்துப்**
**பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்”** **(நெடு. 121-123)**

கட்டிலின் கால்கள் உறுதியாகவும், அழகாகவும் காணப்பட்டன. இது ‘பாண்டில்’ என்னும் பெயர் பெற்று விளங்கியது.

**கட்டிலின் வேலைப்பாடு**

கட்டிலின் இணைப்பிடங்களில், மென்மையான நூலினைக் கொண்டு முத்துகளைக் கோர்த்து தொங்க விடப்பட்டிருந்தது.

**“புலிப் பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்**
**தகடுகண் புதையக் கொளீஇத் துகள் தீர்ந்து**
**ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்**
**வேட்டம் பொறித்து வியன்கட் கானகத்து**
**முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து**
**மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்”** **(நெடு.126-131)**

சிறந்த ஓவியக் கலைஞர்கள் அழகிய தட்டுகளில் புலியின் ஓவியத்தை வரைந்து அத்தட்டுகள் வெளியில் தெரியாதபடியும், புலியின் உருவம் மட்டும் தெரியும்படியும் கட்டிலில் பதித்திருந்தனர். பல்வேறு வண்ண மலர்கள் மலர்ந்திருக்கும் காட்டில் சிங்கம் வேட்டையாடுவதைப் போல ஓவியம் வரையப்பட்ட போர்வையினை கட்டிலின் மேல் விரித்திருந்தனர். இவற்றின் மூலம் மக்களின் கலை உணர்வை அறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் அகப்புறச் செய்திகளைக் கூறுவதோடு மட்டுமின்றி அக்காலத்து மக்களின் கலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை கூறும் கருவூலங்களாக திகழ்கின்றன. கலைகள் பண்டைய நாளிலிருந்து வளர்ச்சி அடைந்துள்ளது. நெடுநல்வாடையில் உள்ள அரண்மனையின் அமைப்பு, தச்சனின் வேலைப்பாடு, சுதைச் சிற்பங்கள், கட்டிலின் அமைப்பு, வேலைப்பாடுகள் மூலம் கலைகள் சிறந்து விளங்கியதை அறிந்து கொள்ள முடிகிறது.

# தற்காலத் தமிழ் இலக்கணமும் அமைப்பியலும்

***ரா.பிரேம்குமார்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை - 46.

தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் நோக்கிலான இலக்கண விளக்க ஏடுகள் எண்ணிக்கையில் பெருகி வருகின்றன. ஆனால், நடைமுறைப் பயன்பாட்டிற்கேற்ப மொழியறிவை, மொழித்திறனை மேம்படுத்தும் அளவில் தரத்தில் மேம்பட்டிருக்கின்றனவா என்பது கேள்விக்குறியே. தற்காலத் தமிழ் இலக்கணம் என்பது இங்கு எழுத்துத் தமிழை முதல்நிலை மொழியாகக் கற்பிக்கும் இலக்கணத்தைக் குறிக்கும். செய்யுட்கூறுகளைத் தவிர்த்துத் தொடரியல் கூறுகளுக்கே முக்கியத்துவம் தரப்படுகின்றன. பெரும்பாலும் இவ்விலக்கணம் கட்டுரை இலக்கியத்திற்குப் பயன்படும். மொழி கற்றல், கற்பித்தல் என்ற துறை இன்று பெருமளவில் வளர்ந்து வரும் ஒரு துறை. இத்துறை இலக்கணப் பாட ஏடுகளை உருவாக்கத் துணை நிற்கின்றன. செயல்முறை அடிப்படையில் சிக்கல்களுக்கு உரிய தீர்வுகளைத் தருகின்றன. இதன்மூலம் இலக்கண உருவாக்க நெறிகளை, கொள்கைகளை வகுக்க முடியும். மேலும், இலக்கண உருவாக்கத்தில், எளிமையாக்கம், செம்மையாக்கம், தரப்படுத்துதல், நிலைபேறாக்கம் செய்தல், சீர்மை பயன்பாட்டுப் பரவல் ஆகியவை கருத்தில் கொள்ளப் பெறுகின்றன. இலக்கணம் என்பது மொழியின் அமைப்பை அதன் கூறுகளை, கூறுகளுக்கிடையிலான உறவுகளை, இயங்கு முறைகளை நுட்பமாகப் பகுத்தறிவதற்குத் துணை நிற்கும் வகையில் அமைய வேண்டும். அதற்கிணங்க இலக்கண உருவாக்கக் கொள்கை நெறிகளை வகுக்க வேண்டும். தற்காலத் தமிழ் இலக்கணம் பல நிலைகளை உள்ளடக்கியுள்ளது.

**தற்கால இலக்கணத்தின் இயல்புகள்**

பழைய வழக்கிழந்த இலக்கணக்கூறுகளை விடுத்துப் புதிய நடைமுறையில் உள்ள சமகால இலக்கணக்கூறுகளைக் கொண்டிருத்தல். மொழியியல் கொள்கைகளைப் பின்னணியாகக் கொண்டிருத்தல். மரபிலக்கணங்கள் குறிப்பிடும் பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகிய இலக்கணப் பிரிவுகள் இதனுள் அடங்குவதில்லை. இன்றும் மாறாமல் நிலைத்து நிற்கும் இலக்கண மரபைக் கொண்டிருத்தல். மொழிக் கலப்பால், மொழித் தேவையால் பிற மொழிகளிலிருந்து தமிழ் மொழியில் பெறப்படும் சொல் வரவின் செம்மையாக்க நெறிகளைக் கொண்டிருத்தல். இலக்கண விளக்கத்தில் எளிமையையும், தெளிவையும் கொண்ட கலைச்சொற்களைக் கையாளும் பண்புகளைப் பெற்றிருத்தல். தொடரியல் நெறிகளை மிக விரிவாக, மிக நுட்பமாக விளக்குதல், இலக்கண விளக்க அணுகுமுறைகளில் புதுமையை ஏற்படுத்துதல், பொருள் புலப்பாட்டுத் திறனை மேம்படுத்தும் சொல்தெரிவு முறைகள், நிறுத்தற்குறிகள் பயன்பாடு முதலான நடை நெறிகளை விளக்குவதாக அமைகின்றது.

**அமைப்பியல்**

சமூக ஆய்வுகள் எவ்வளவு பழமையானவையோ அவ்வளவு பழமையானது அமைப்பு என்ற சொல். ஒருங்கமைப்புச் செயல், நிறுவனம், விதி, மதிப்பு போன்ற சொற்களோடு ஒரு முக்கியச் சொல்லாக அமைப்பு என்ற சொல் உள்ளது. மானுட வாழ்வின் சமூக பண்புகளைக் குறிப்பிடுவதற்காகச் சமூகவியலாளர்கள் பயன்படுத்தும் முக்கியச் சொல்லாக அமைந்துள்ளது. சமூகவியல், மானுடவியல் துறைகளைச் சார்ந்த பழங்கோட்பாட்டினர் இச்சொல்லைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். மேலை நாட்டறிஞர்களான வீபர், தர்க்கைம், மார்க்ஸ், பரெட்டோ, சிம்மெல், ராட்கிளிப் - பிரௌன் போன்றோர் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர். பல சமூக அறிவியல்

துறைகளில் அண்மையில் இச்சொல் மீண்டும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஆதரவாளர்கள் பலரும் தாம் அதனை ஒரேமாதிரியாகப் பயன்படுத்துவதாக உணர்கின்றனர். அவர்கள் எல்லோரையும் அமைப்பியலாளர்கள் என்றே கருதவேண்டும். லெவிஸ்டிராய் சமூக மானிடவியலிலும், கோடலேர் பொருளாதார மானிடவியலிலும், பௌலாண்ட் சாஸ் அரசியலிலும், க்ளக்ஸ்மன் உளப்பகுப்பாய்வியலிலும், லக்கன் குறியியலிலும், பார்த் இலக்கியத் திறனாய்விலும், மாஷிரி கருத்துக்களின் வரலாற்றிலும், ∴பூக்கோ போன்றோர் தத்தம் துறைகளில் அதனை மறுபடியும் வழக்கிற்குக் கொண்டு வந்துள்ளனர்.

**அமைப்பியல் - அர்த்தங்களும் பயன்பாடுகளும்**

'Structure' என்ற சொல் 'Structura' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து ஆக்கப்பட்டது. கட்டுதல் எனப் பொருள் தரும் 'Struere' என்ற வினையிலிருந்து உருவாக்கப்பட்டது எனவும் கூறப்படுகிறது. 17 – ஆம் நூற்றாண்டில் உடற்கூற்று நூல் இலக்கணம் போன்றவற்றிற்கு விரிவுபடுத்தப்படும் வரை அச்சொல் கட்டிடக்கலை சார்ந்ததாகவே இருந்தது. உடலுறுப்புகளின் ஒழுங்கமைவு ஒருவகையான கட்டுமானமாகவே கருதப்பட்டது. மேலும் அமைப்பியல்பினை உட்கொண்ட, பேச்சில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சொல்லாகவே அச்சொல் புரிந்து கொள்ளப்பட்டது. இந்தப் பதம் எப்பொழுதும் முழுமையையும் முழுமையின் பகுதிகளையும், அவற்றிற்கிடையேயான உறவுகளையும் குறித்தது எனலாம். மேலும், இக்கவனக் குறிப்பு தான் வளர்ந்து வந்த துல்லியமான அறிவியல்களுக்கு எழுச்சியூட்டிற்று என்றும் கூறலாம்.

**அமைப்பியல் - விளக்கம்**

ஸ்வீடன் நாட்டு மொழியியல் அறிஞரான பெர்டினான்ட் சசூர் என்பவர் கருத்துகளைப் பற்றியும், பொருட்களைப் பற்றியும் மொழி என்ற பெயரால் நம் வாய் எழுப்பும் ஒலிகளுக்கான அர்த்தத்துக்கும் மொழிக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்றார்."சசூரின் கோட்பாட்டின்படி, 'புலி' என்ற வாய்மொழிச் சத்தத்துக்கும் 'புலி' என்ற கருத்துக்கும் அசலான 'புலி' என்ற பிராணிக்கும் தொடர்பேதும் இல்லை. மொழி என்பது ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுத்திக் காட்டும் ஒரு வகை அமைவு" (எம்.ஜி.சுரேஷ், பின் - நவீனத்துவம் என்றால் என்ன?, ப.56.) என்று விளங்கிக் கொள்ள முடிகிறது.

போக்குவரத்து 'சிக்னல்' விளக்குகளில் சிவப்பு, பச்சை, மஞ்சள் போன்ற வண்ணங்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றனவோ அப்படித்தான் நாம் மொழியைப் பயன்படுத்துகிறோம். போக்குவரத்து சிக்னலில் எரியும் சிவப்பு வண்ண விளக்குகளுக்கும் 'நில்' என்ற கருத்துக்கும் இயல்பாக எந்தவிதமான தொடர்பும் இல்லை. சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற மூன்று வண்ணங்களும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதாலேயே அவை அதற்கான அர்த்தங்களைப் பெறுகின்றன. இந்த நிறங்களுக்குப் பதிலாக ஆரஞ்சு, ஊதா, வெண்மை போன்ற வண்ணங்களைப் பயன்படுத்தினாலும் அவையும் இதே அர்த்தங்களைக் கொடுக்கும்.

**அமைப்பியலுக்கும் மொழிக்குமான உறவுநிலை**

மொழியில் சொல் ஒன்று இருக்கும்போது அச்சொல்லுக்குச் சொன்மை, பொருண்மை என்ற இரு பகுதிகள் இருக்கும். அவ்வகையில் அடிப்படையாக உள்ள சொல் என்பதை 'குறி' எனக் கொள்ளலாம். அதன் "சொன்மையைக் குறிப்பான் (Signifier) என்றும், பொருண்மையைக் குறிக்கப்படுவது (Signified) என்றும் இரண்டுவிதமான பிரிவுகளாகக் குறிப்பிடலாம்". (எம்.ஜி.சுரேஷ், பின் - நவீனத்துவம் என்றால் என்ன?, ப.58.) சிங்கம் என்ற ஒலியன்களால் ஆன வார்த்தை 'குறிப்பான்' (Signifier) ஆகும். சிங்கம் என்ற விலங்கு பற்றிய நம் சிந்தனையில் இருக்கும் கருத்து 'குறிக்கப்படுவது' அதாவது குறிப்பீடு (Signified) எனலாம்.

குறிப்பானும் குறிப்பீடும் சேர்ந்தே சிங்கம் என்ற குறியை (Sign) உருவாக்குகின்றன. இதற்குத் தனிக்குறிப்பீடு (Signification) என்று பெயர். இதில் சிங்கம் என்ற கருத்துக்கும், வாய் ஒலிக்கும் சிங்கம் என்ற ஒலிக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. ஏனெனில் ஒவ்வொரு மொழியிலும் சிங்கம் என்பது வேறு வேறு ஒலியன்களால் ஒலிக்கப்படுகிறது. தமிழில் : சிங்கம், ஆங்கிலத்தில் : Lion. இதேபோல் 'மகிழ்ச்சி' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் மகிழ்ச்சி என்ற உணர்வுக்கு (குறிப்பீடு) ஆனந்தம், சந்தோஷம், உவகை என்று பலவிதமான குறிப்பான்கள் உள்ளன. இதில் எது மகிழ்ச்சியை சரியாகக் குறிப்பதாக இருக்கிறது என்பவை முக்கியமான கேள்வியாக எழுகிறது. ஒலியன்களின் தொகுப்பான

இந்த வார்த்தைகள் (Monemes) சமூகத்தின் புழக்கத்திலிருந்து உருவானவை. இதை அறிஞர் விட்ஜென்ஸ்டீன் ‘மொழி விளையாட்டுகள்’ (Language games) என்கிறார். எனவே, அர்த்தம் என்பது பொருட்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த மொழி என்ற அமைப்பின் உற்பத்தியே. **அர்த்தங்களை உருவாக்கும் இந்த மொழி அமைப்பு அடிப்படையில் அர்த்தங்கள் ஏதும் இல்லாததே.**

### இலக்கண உருவாக்க உத்திகள்

இலக்கண நூலை எழுதும் முறை அதை மதிப்பிடும் முறை பற்றிய அறிவு மரபிலக்கண அறிஞர்களிடையே இருந்ததை தொல்காப்பிய மரபியலும், நன்னூற் பாயிரமும் நிறுவுகிறது. “உத்தி என்பது இலக்கண வருணனை முறையில் கையாளப்பெறும் தொழில்நுட்ப முறையே ஆகும். பொதுமைப்படுத்துதல், சுருங்கச்சொல்லுதல் ஆகிய இரண்டும் பொது உத்திகளாகும். விரித்துக்கூறுதல், மற்றொன்று விரித்தல், வெற்றெனத் தொடுத்தல் ஆகிய மூன்றும் பொது உத்திகளுள் அடங்கும்.

இலக்கணம் வகுக்கும்போது வரலாற்று உணர்வுக்கு இடம் கொடுக்காமல் இக்கால மொழி உணர்வோடு இலக்கணம் வகுத்தல் முக்கியமான உத்தியாகும். இலக்கணத்தின் பயனானது மொழியைப் பேசவும், எழுதவும் உதவுவதே. இந்நோக்கில் தான் இலக்கணம் உருவாக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து வளர்ந்து மொழியியல் கோட்பாட்டில் பல வகையில் அறிவியல் அடிப்படையிலான ஆழ்நிலைப் பார்வை மொழியின்மீது அமைகிறது. இத்தகைய உணர்வோடு இலக்கண வரைவு அமைதலே சிறப்பாகும்.

### எழுத்தியல் அமைப்பாய்வு

எழுத்தியல் தமிழ் ஒலியன்கள், ஒலிகள், மாற்றொலிகள், ஒலிப்பு முறைகள், வடிவன்கள், எழுத்துக்களின் எண்ணிக்கை, பெயர், பெயரமைதிக் காரணங்கள், எழுத்துச் சாரியைகள், மெய்ம்மயக்கம், எழுத்துக்களின் வருகை முறை, மாத்திரைகள், எழுத்துக்களின் வகைகள், எழுத்துக்களின் தன்மைகள், வகைமைக்கான அடிப்படைகள், வழக்கொழிவு, புதுவரவு, புணர்நெறிகள் முதலானவற்றை அமைப்பியல் நோக்கில் விளக்குவதாக அமைகின்றன. தமிழ் இலக்கண நூல்களில் எழுத்து என்னும் சொல் மொழியில் வழங்கும் ஒலிகளைக் குறிக்கவும், அவ்வொலிகளுக்குரிய வரி வடிவத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் ‘அ’ என்னும் எழுத்து ஒலிவடிவம், வரிவடிவம் ஆகிய இரண்டையும் குறித்து நிற்கிறது. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒலிவடிவம், வரிவடிவம் இரண்டும் உண்டு. ஒலிவடிவம் என்பது எழுத்தை உச்சரிக்கும்போது எழும் ஒலியையும், வரிவடிவம் என்பது ஒரு எழுத்தின் எழுதப்படும் வடிவத்தையும் குறிக்கும். இரண்டு வடிவத்திற்கும் ‘எழு’ என்பதுதான் வேர்ச்சொல். எழுப்பப்படுவதால் எழுத்து என்பது ஒலி வடிவத்திற்கான காரணமாகும். எழுதப்படுவதால் எழுத்து என்பது வரிவடிவத்திற்கான காரணமாகும். தற்காலத் தமிழ் இலக்கணமானது தொன்மை இலக்கணக்கூறுகளை உள்ளடக்கிய பல படிநிலைகளைக் கொண்டும் உலகம் தழுவிய பொது இலக்கண அமைப்பியலை தன்னகத்தே வெளிப்படுத்துவனவாகவும் அமையும் நிலையை உணர முடிகின்றது. எழுத்துத் தமிழையொட்டி கட்டுரையின் இலக்கணக்கூறுகளை நவீன இலக்கண நூல்கள் பெரிதும் எடுத்தியம்புவதைக் காணமுடிகின்றது. இந்நிலை மரபிலக்கணக்கூறுகளோடு நவீன மொழியியல் கூறுகளையும் இலக்கண ஆய்வாளர்களிடம் விளக்குவதிலும் கற்றல், கற்பித்தலை எளிமைப்படுத்துவதிலும் துணைசெய்யும் என்பதை உணரலாம்.

# சிலப்பதிகாரம் காட்டும் நாடகக்கலை

***மை.ரோஜா லிபோரியா**, ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, ஸ்ரீ நாராயணகுரு கல்லூரி, கோவை.

**முன்னுரை**

உலகத்தில் உள்ள கலைகளுக்கெல்லாம் முதன்மையாக அமைவது தமிழர் தம் கலைகளே! மக்கள் சிறப்பாக வாழ்ந்தால் மட்டுமே அச்சமுதாயத்திலுள்ள கலைகளும் சிறப்புற்று விளங்கும். தமிழ் நாட்டில் கலைகளுக்குள் மிக சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமேயாகும். தொல்காப்பியர் காலத்தில் இசைக்கலை நாடகக்கலை, நாட்டியக்கலை முதலியவையும், கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலியவையும் சிறந்து விளங்கின எனலாம். கூத்தர், பாணர், பொருநர், விறலி போன்றோர் இசைக்கலை, நாடக்ககலை முதலியவற்றைத் தொழிலாகக்கொண்டு வாழ்ந்தார்கள் என்பதையும் அறியலாம்.

**நாடகக்கலை**

நாடக்ககலை தமிழ் நாட்டிலே மிகப் பழங்காலத்திலிருந்து வளர்க்கப்பட்டது இயற்றமிழ், இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்று கூறப்படும் முத்தமிழுள் நாடகத்தமிழும் ஒன்று. நாடகத்திற்கு இன்றயமையாதவை சுவைகளாகும். அந்த சுவைகள் ஒன்பது வகைப்படும். அவை வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, நடுவுநிலை. இந்த ஒன்பது மெய்ப்பாடு (சுவை)களில் நடுவுநிலை என்னும் சுவையை நீக்கி எட்டு மெய்ப்பாடுகளை மட்டும் தொல்காப்பியர் கூறுகிறார்.

**"நகையே யழுகை யிளிவரன் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்**
**றப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப"**

மேலும் எட்டுவகை சுவைகளையும் அவை தோன்றும் காரணங்களையும் தொல்காப்பியர் விளக்கத் தவறவில்லை.

இசை செவிக்கு இன்பம் தருவது. ஆனால் நாடகம் கண்ணுக்கும் செவிக்கும் ஒருங்கே இன்பம் தருவதாகும். சிலப்பதிகாரம் ஒன்றின் துணைகொண்டே பெரும்பாலும் பழந்தமிழ் நாட்டின் இசை நாடக நிலைகளை ஆராய முடிகிறது. காரணம் நாடக உறுப்புக்கள் பலவற்றையும் சிறப்பாக பெற்றிருப்பதால் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் என்றே போற்றுகின்றனர். நடிப்பும் கூத்தும் தமிழ்நாட்டில் மிகப்பழங்காலந்தொட்டு விளங்கிய கலையாகும். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார். பரதம், பஞ்ச பாரதீயம், பரத சேனாபதீயம், சயந்தம், கூத்து நூல், மதிவாணன் நாடக நூல் என்பவற்றோடு இன்னும் பல நூல்களையும் குறிப்பிடுகிறார். அவர் கூறியவற்றுள்ளும் பெரும்பாலானவை பின்னர் அழிந்தன. ஆக இன்று நாடக நூல் என்ற ஒன்று இல்லை. இக்குறைபாட்டைப் போக்க பரிதிமாற்கலைஞர் என்னும் வி.கே,சூரிய நாராயணசாஸ்திரியார். நாடகவியல் என்ற நூலை எழுதியுள்ளார்.

**முக ஒப்பனை**

'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்' என்பது மனித உறுப்புக்களில் தலை முதன்மையானதாகக் கொள்ளப்படுகிறது. தலையிலும் முகம் சிறப்பானது. அதில் கண், காது, மூக்கு, புருவம், நெற்றி, உதடுகள் ஆகிய உறுப்புக்களின் ஒப்பனைகள் இன்றி இருந்த கண்ணகியைப் பற்றி இளங்கோவடிகள் கூறுகையில்

**"கொடுங்குழை துறந்த வழந்து வீழ்காதின்**
**செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப**
**பவளமாய் நுதல் திலகம் இழப்ப"**

என்று கூறியுள்ளார்.

இதில் காதுகள் குழையைத் துறந்தும். கண்கள் அஞ்சனம் மறந்தும், நுதல் திலகம் இழந்தும் இருந்தன என்பது முக ஒப்பனை செய்யப்படவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது.

அனைவரும் இயல்பாகவே முக ஒப்பனை செய்து கொள்வதுண்டு. அதேசமயம் நாடகத்தில் முகஒப்பனை செய்யாமல் நடிப்பது நாடகத்தின் தோல்விக்குக் காரணமாகி விடும். எனவே முக ஒப்பனையும் நாடகத்தின் வெற்றிக்கு ஒரு காரணம் எனலாம்.

**மேடை அமைப்பு**

நாடகக் கலையும் நாட்டியக்கலையும் விடாமல் தமிழரால் போற்றப்பட்டன என்பதற்கு இடைக்காலச் சோழர் கல்வெட்டுக்கள் நமக்கு சான்றாகக் கிடைக்கின்றன. இடைக்காலச் சோழர்கள் காலத்தில் நாடக, நாட்டிய அரங்குகள் மூவகையாக இருந்தன. அவை நாடகசாலை, மண்டபம், கோயில் நாடகசாலை, அரங்குகள் என வழங்கப்பட்டன.

நாடகசாலை மண்டபம் - கோயில்களில் அமைந்தன.

கோயில் நாடகசாலை - அரசர்களின் அரண்மனையில் அமைந்தவை

அரங்குகள் - ஊர் பொதுவிடங்களில் அமைந்தவை.

**சிலப்பதிகாரம் கூறும் அரங்கு பற்றிய செய்திகள்**

இக்காலத்தில் சிற்சில ஊர்களில் நாடகசாலைகள் ஊரின் ஒதுக்குப்புறத்தில் இருக்கக் காணலாம். சிலப்பதிகாரக்காலத்தில் அவ்வாறின்றி ஊரின் நடுவே தேரோடும் வீதியில் ஆடல் அரங்குகள் அமைந்திருந்தன என்று அறிகின்றோம்.

**"ஊரகத்தாகி உளைமான் பூண்ட**
**தேரகத் தோடும் தெருவுழகம் நோக்கிக்**
**கோடல் வேண்டும் ஆடரங்கதுவே"**

என்ற அரங்கேற்றுக்காதை வரிகள் நாடக அரங்கங்கள் பெற்றிருந்த செல்வாக்கை எடுத்தியம்புகின்றன. இதில் அரங்கத்தின் அளவெல்லாம் கூறப்படுகிறது. அவ்வரிய சாதாரண அரங்கங்கள் 35 அடி அகலமும் 40 அடி நீளமும் உடையனவாக இருந்தன.

**"நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும்**
**கோலளவு இருபத்து நால்விரலாக**
**எழுகோல் அகலத்து எண்கோல் நினைத்து**
**ஒரு கோல் உயரத்து உறுப்பினதாகி**
**உத்திரப் பலகையோடு அரங்கின் பலனை**
**வைத்த இடைநிலம் நாற்கோலாக**
**ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியந்**
**நோற்றிய அரங்கு ......................"**

ஷேக்ஸ்பியர் காலத்தில் மேலை நாடுகளில் நாடகங்கள் நடிக்கப் பெற்ற அரங்குகளில் மூடும் திரைச்சீலைகள் இல்லை. ஆனால் இப்புதுமை சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது வியப்பே! இத்திரைச் சிலையை மூன்று நிலைகளில் கூறுவார் இளங்கோவடிகள். இடத்தூண் அருகே உருவுதிரையாக ஒருமுக எழுனியும், இரண்டு தூண்கள் அருகே உருவு திரையாகப் பொருமுக எழினியும், மேல்கட்டுத் திரைச்சீலையாகக் கரந்துவரல் எழினியும் குறிப்பிடப்படுகிறது.

**சொல்**

சொல் என்பது நாடக பாத்திரங்கள் நாடகத்தில் நடிக்கும் போது பேசும் பேச்சு. அது மூன்று வகைப்படும்

- உட்சொல்
- புறச்சொல்
- ஆகாயச் சொல் என்று

உட்சொல் என்பது நடிகன் தானே மனதிற்குள் கூறுவது. புறச்சொல் என்பது கேட்போர்க்கு உரைத்தல். ஆகாயச் சொல் என்பது தானே கூறல்.

**"நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல்**
**தஞ்சம் வரவறிவு தானே கூறலென்**
**றம்மூன் றென்ப செம்மை சொல்லே"**

என்ற வரிகள் உணர்த்தும்.

**முடிவுரை**

நாடகக்காப்பியமான சிலப்பதிகாரத்தில், மெய்ப்பாடுகளை உலகியலில் உள்ளது உள்ளவாறே தனது காப்பியத்தில் ஆசிரியர் கொண்டு வருகிறார். நாடகப்போக்கில் அமைந்த இக்காப்பியம் வாழ்க்கை நிலையை மையப்படுத்தி அதிலே அறக்கருத்துகளைக் கலந்து நிற்பதால் மக்களின் மனத்தில் நீங்காத இடம் பெற்றுள்ளது.

கதை, கதைமாந்தர், உரையாடல், காட்சியமைப்பு, ஒப்பனை, இசை, மொழிமரபு, மேடை அமைப்பு என காப்பிய நாடகத்தில் பல கூறுகள் அமைந்துள்ளன என்பது இக்கட்டுரையின் வழியாக விளக்கப்பட்டுள்ளன.

# சங்க இலக்கியத்தில் வழிபாடுகள்

***முனைவர் சீ.பாத்திமா,** உதவிப்பேராசிரியர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மகளிர் கலைக் கல்லூரி, சேந்தமங்கலம், திருவாரூர்,திருவாரூர் மாவட்டம்.

அந்தந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் அந்தந்த நிலங்களிலே உள்ள தெய்வங்களை வணங்கியதாகத் தொல்காப்பியம் பதிவு செய்கிறது. பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றங்களில் வழிபாடுகளும் மாற்றம் அடைந்துள்ளது எனலாம். அச்சம், நன்றி இவற்றின் காரணமாக தோன்றிய வழிபாடு நடுகல் வழிபாடு என்பதாக தோன்றி வளர்ந்து பின்னர் நிலையான உருவ வழிபாடு என்பதாகவும் வேத, புராணங்களை சார்ந்ததாகவும் மாறிவிட்டது.

**தெய்வ வழிபாடுகள் :**

சங்க காலத்தில் பெண்கள் சிவன், முருகன், திருமால், அணங்கு அரமகளிர், அனலன், ஆதிசேடன், உமை, பிறை என தெய்வங்களை மட்டுமின்றி இயற்கையாக உள்ள மலை, மரம், காடு, மழை, வீடு என பல்வேறு தெய்வ வழிபாட்டு முறைகளை பின்பற்றிய செய்திகளைச் சங்க இலக்கிய நூல்கள் தன்னுள் கொண்டுள்ளதை நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. இதனை "பழமை மிகுந்த தமிழகத்தில் செய்தியின் பழமையை மெருகூட்டத் தெய்வத்தை அவற்றோடு இணைத்தனர். அதனால் மேலும், பழமையும் சிறப்பும் கிட்டுமெனக் கருதினர். இதனால் மேலைநாட்டவர் தமிழக வரலாற்றுக் குறிப்புகளில் கற்பனையும், பொய்ம்மையும் மிகுதி என்றனர். சங்கம் இருந்தது உண்மை என்பதற்குப் பல சான்றுகள் இருப்பினும் சங்கத்தில் சிவபெருமானும், முருகனும் வீற்றிருந்தனர் எனும் குறிப்பு சங்கம் பற்றிய முழு கருத்தும் பொய்மையோ எனும் ஐயத்தை ஆய்வாளர் மனத்தில் ஏற்படுத்தி விடுகின்றது." என்ற முனைவர் சு.ஆனந்தன் அவர்கள் கூறியுள்ளார்."

**சங்க இலக்கிய வழிபாடுகள்**

சங்க காலத்தில் இறை எனப்படுகிற சொல் அரசனையும், தெய்வத்தையும் குறிக்கிற சொல்லாக இருந்துள்ளது. தொல்காப்பியர் சுட்டுகிற மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்கிற தெய்வங்களும் வழிபடப்பட்டுள்ளன. இவையன்றி வேறு பல தெய்வங்களும் வழிபாட்டில் வந்துள்ளன.

**"மாயோன் அன்ன மாஅ யோனே"**

என புறநானூற்றுப் பாடலும் (229:27)

**"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்"**

என்ற நற்றிணை(32) பாடலும், மாயோன் எனப்படுகிற திருமால் வழிபாட்டைச் சுட்டுகிறது. அதை மாயோன் எனும் பெயரில் பேசுகிறது.

**"காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்"**

என்ற பரிபாடலும் (5) முருக வழிபாட்டைக் குறிப்பிடுகின்றது.

**"செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடே"**

எனும் புறநானூற்றுப் பாடல்(120) சேயோன் எனப்படுகிற தெய்வ வழிபாட்டைச் சுட்டுகிறது.

**"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும்"**

எனும் புறநானூற்றுப் பாடல் (182:1:2) அடிகளும் தமிழகத்தில் இந்திரன் வழிபாடு இருந்ததைச் சொல்கின்றன. இவையன்றி வேறுபல கடவுள்களும் வழிபடப்பட்ட முறையை சங்க இலக்கியங்களின் மூலம் கடவுள் வழிபாடு இருந்த நிலையை அறிய முடிகிறது. அணங்கு அரமகளிர், அனலன், ஆதிசேடன், உமை, பிறை, ரதிகாமன், யமன், கொற்றவை, சூர், சூவி, திருமகள், பிரம்மன், கொல்லிப்பாவை என பல்வேறு பெயர்களில் சிவன், முருகன், திருமால், நடுகல் வழிபாடு எனப் பல்வேறு தெய்வங்கள் வழிபட்டதற்கான பதிவுகள் உள்ளன.

**"அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**

**கணங்கொள் அருவிக் காண் செழுநாடன்"**

என்ற அகநானூற்று (22:1-2) பாடல் வரிகளின் மூலம் அணங்கு எனும் தெய்வ வழிபாடு இருந்ததை அறிய முடிகிறது.

**"அல்லல் இல் அனலன் தன் மெய்யிற் பிரித்து"**

என்ற பரிபாடல் (5:57) பாடல் வரி மூலம் அனலன் எனும் தெய்வ வழிபாடு இருந்ததை உணரலாம்.

**"தண்டாழ் அருவி அரமகளிர் ஆடுபவே"**

என்பதாக கலித்தொகை (40:23) அரமகளிர் எனப்படும் தெய்வ வழிபாடு பற்றி பேசுகிறது.

**"குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையன்"**

என்ற மதுரைகாஞ்சி (193) பாடலின் மூலம் பிறையாக உள்ள கடவுளைச் சங்க கால மக்கள் வழிபட்ட நிலையை அறிய முடிகிறது.

**"கூதிர் உருவில் கூற்றம்"**

என்ற குறுந்தொகை(197) வரிகளின் மூலம் கூற்றம் என்கிற எமனை கடவுளாக வழிபட்ட செய்தியைத் தருகிறது.

**"……ஓங்கு புகழ்க்**

**கானமர் செல்வி அருளனின்"**

எனும் அகநானூற்று (345:3-4) பாடல் கானமர் செல்வி என்ற காட்டை உறைவிடமாக உடைய கொற்றவை தெய்வப்பாட்டை அடையாளப்படுத்துகிறது.

**"விடர் முகை அடுக்கத்து விறல் கெழுசூலிக்கு**

**கடலும் பூணாம்"**

என்கின்ற குறுந்தொகை (218:1-2) வரிகள் பிளவையும், குகைகளையும் உடைய மலைப்பக்கத்திலுள்ள துர்க்கையை சூலி என்று வழிபட்டதைப் புலப்படுத்துகிறது.

**"திருஞெமர்ந்து அமர்ந்த மார்பில்**

**தெரிமணி பிறங்கும் பூணினை மால் வரை"**

என்று பரிபாடல்(1:8) பாடல் கூறுவதிலிருந்து திருமாலின் மார்பில் அமர்ந்துள்ள திருமகளின் வழிபாட்டைப் பற்றி அறிய முடிகிறது.

**"……..பயங்கெழு கொல்லி**

**நிலைபெற கடவுள் ஆக்கிய**

**பலர்புகழ் பாவை அன்னநின் நிலனே"**

என்ற அகநானூற்று(62:13-16) ப் பாடல் பலவான பாவை வழிபாடுகளில் ஒன்றான கொல்லிப் பாவை பற்றிய பதிவைத் தருகிறது.

"பலிகொண்டு பெயரும் பாலும் போல என்று குறிப்பிடுகிறது. பேய் போன்ற தெய்வங்களுக்கு இடப்பெறும் பலியினைப் பற்றி பதிற்றுப்பத்து (71:23) பதிவு செய்துள்ளது. இவைபோன்ற பல தெய்வங்களையும், வழிபாடுகளையும் வே.அண்ணாமலை((2000) சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் எனும் இரு தொகுதிகளில் பட்டியலிடுகிறார்".

தெய்வங்களுக்குத் தீபமேற்றி வழிபடும் முறை சங்க கால மக்களின் வாழ்வில் நிலவியது. நெய் தீபம் ஏற்றினால் இல்லற வாழ்வில் இன்பம் பெருகும் என்ற வழிபாட்டு நம்பிக்கை இருந்து வருகிறது. பஞ்சதீபம் ஏற்றினால் நோய் நொடிகள் நீங்கி வாழ்வில் சகல இன்பங்களும் பெறுவர் என்பது மக்களின் நம்பிக்கையாகக் கருதப்பட்டு இவ்வழிபாட்டு முறை பின்பற்றுப்பட்டு வருகிறது. பெண்கள் மாலை நேரங்களில் வீடுகளில் விளக்கேற்றி வழிபட்ட மரபை கீழ்கண்ட நற்றிணைப் பாடல் (58:5-7) புலப்படுத்துகிறது.

**"வீரை வெண்மான் வெளியன் தித்தன்**

**முரசு முதற் கொளீஇய மாலை விளக்கின்**

**வெண்கோடு இயம்ப:"**

அதுமட்டுமின்றி பெண்கள் கார்த்திகை மாதங்களில் விளக்கேற்றி வழிபட்ட செய்தியினை

**"அறுமின் பயந்த அறஞ்செய் திங்கள்**

**செல்சுடர் நெடுங்கொடி போல"**

என்ற நற்றிணைப்(202:9-10) பாடல்கள் வழியாக சங்க கால மக்கள் தெய்வ வழிபாடுகளில் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளும், தெய்வங்கள் மீது கொண்டிருந்த உயரிய பக்தியும், அவர்கள்

வழிபட்ட முறைகளுமே, இன்றைய தலைமுறைகளைச் சார்ந்த சந்ததிகளும் வழிபாடு செய்து வருவதற்கு அடிப்படையாக இருந்து வருவதை இதன்மூலம் அறியலாம்.

இச்செய்தியினை "வறியோர் மண்ணினால் செய்யப்பட்ட விளக்குகளைப் பயன்படுத்தினர். ஏனையோர் இரும்பு, செம்பு, வெண்கலம் முதலியவற்றாற் செய்யப்பட்ட விளக்குகளைப் பயன்படுத்தினர். யுவனர்களாற் கொண்டுவரப்பட்ட அன்ன விளக்கு, முதலியனவும் உபயோகிக்கப்பட்டன. "யவன ரோதிம விளக்கு"(பெரும்பாண்), "பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல" (முல்லைப்பாட்டு), "யவனப்பாவை அணி விளக்கு"(பெருங்கதை)" வாயிலான ந.சி.கந்தையா அவர்கள் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது.

**நடுகல் வழிபாடு:**

பண்டையத் தமிழகத்தில் மக்கள் வாழ்ந்த அன்றைய நிலையில் ஆண் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு மற்றும் இயற்கை வழிபாடுகள் என பல்வேறு வழிபாட்டு முறைகளில் நடுகல் வழிபாடு முறையும் ஒன்றாக இருந்ததற்கான பதிவுகள் சங்கக் கால பாடல்களில் காணப்படுகின்றன. நடுகல் வழிபாடு முறை என்பது போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு எடுக்கப்படுவதாகும். இம்முறை போர் வீரர்கள் மட்டுமின்றி ஊரைக்காப்பவர், விலங்குகள் என்று வளர்ந்துள்ளது. இம்மரபானது, நடுகல் வழிபாட்டு முறை என்று அழைக்கப்படுகிறது. இதனை,

**"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**

**எழுத்துடை நடுகல்"**

என்ற ஐங்குநூற்றுப்(352:1-2) பாடல் நடுகல் வழிபாட்டு முறை இருந்ததை புலப்படுத்துகிறது. இவையன்றி

நடுகல் வழிபாடு தவிர வேறு வழிபாட்டு முறை இல்லை என்பதை கீழ்க்கண்ட

**"ஒளிறு ஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்**

**கல்லே பரவின் அல்லது**

**நெல் உகுத்து பரவும் கடவுளும் இலவே"**

என்ற புறநானூற்று(335:10-12) பாடல் வரிகள் மூலம் பகைவரின் முன் நின்று அவரது மேற்செலவைக் குறுக்கிட்டுத் தடுத்து விளங்கும் உயர்ந்த கொம்பையுடைய யானைகளைத் தடுத்து விளங்கும் உயர்ந்த கொம்பையுடைய யானைகளைக் கொன்று, தாமும் விழுப்புண் பட்டு இறந்த அவரின் பெயரும், பெருமையும் எழுதி நட்ட கல்லைக் கடவுளாக எண்ணி வணங்குவதே அல்லாது நெல்லைத் தூவி வழிபடும் கடவுளும் வேறு இல்லை என்ற செய்தி புலப்படுத்துகிறது.

**முடிவுரை**

இதன் மூலம் சங்க கால மக்களுக்கு, தங்களின் வழிபாட்டு முறைகளின் மீதிருந்த மிகுந்த மதிப்பினையும், நம்பிக்கையையும், பக்தியையும் மேற்குறிப்பிட்ட சான்றுகளின் மூலம் நம்மால் அறிய முடிகிறது. சங்க கால மக்களின் வழிபாட்டு முறைகளில் தெய்வ வழிபாடு, நடுகல் வழிபாடு, விளக்கேற்றும் வழிபாடு மற்றும் இத்தெய்வங்களுக்கு எடுக்கப்படும் விழாக்கள் இடும் பலிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்ததை உணர முடிகிறது. இதன் தொடர்ச்சியே இன்றளவும் வழிபாட்டு முறைகள் நடைபெற்று வருகின்றன என்பது புலனாகிறது. சங்க இலக்கியங்கள் பேசுகிற வாழ்வியல் என்பது குறைந்தது 450 ஆண்டு கால வாழ்வியல் ஆகும். அதனுள் பல்வேறு மாற்றங்களும் செயல்பாடுகளும் நிகழ்ந்துள்ளன. அவ்வாழ்வியல் மாற்றம் அக்கால மக்களின் தெய்வ வழிபாட்டு மரபுகளிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அதே சமயம் சமூக மாற்றங்கள் அவ்வழிபாட்டு மரபுகளில் பல்வேறு மாற்றங்கள் நிகழக் காரணமாகியுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. அண்ணாமலை.வே 2000 - சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் தொகுதி- 1,2, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் - 1.

2. ஆனந்தன் .சு 2002 - தமிழ் இலக்கிய வரலாறு, கண்மணி பதிப்பகம், திருச்சி -620 002.

3. ந.சி.கந்தையா, 2010 - தமிழகம், கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்(லிமி), 522.டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018

# மறத்தமிழனின் அறவியல் கோட்பாடு

***ஜெ.கவிதா**, உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, பூ.சா.கோ.அர. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி பீளமேடு, கோயமுத்தூர் - 641014.

**முன்னுரை**

மனித சமூகத்தில் தொன்றுதொட்டு மரபுவழியாக வந்தவை அறங்கள், மனித சமூகத்திற்கு ஒரு கூட்டு வாழ்வையும் தகுதியையும் தருவன அறங்கள். இவை மனித ஒழுகலாறுகளின் போக்குகளிலிருந்து சாராம்சமாகக் கண்டறியப்பட்டவை. இலக்கியங்களாக எழுதி வைக்கப்பட்டவை. எனவே சட்டங்களாக இல்லாமல் மரபுகளாகவும், இறுக்கமானவையாக அல்லாமல் நெகிழவானவையாகவும் இவை அமைகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். **“பிறவிதோறும் மனிதனைப்பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே”** அறம் என்ற ஆன்மீக விளக்கமும் இதற்கு தரப்படுவதுண், நம் முன்னோர்கள் அறம் என்னும் சொல்லிற்குத் தந்துள்ள விளக்கத்தோடு எதிக்ஸ் (Ethics) என்னும் ஆங்கிலச் சொல்லிற்குத் தரப்படும் பொருள் விளக்கம் மிகவும் பொருந்துவதாக உள்ளது நல்ல (அல்லது) தீய செயல்கள் மூலம்தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வியல் கலையே எதிக்ஸ் என்பதாகும். இதைத் தமிழில் அறவியல் எனலாம். பின்னாளில் தனி மனித நடத்தையானது ஒழுக்காமெனும் பண்பாக மலர்ந்து வாழ்க்கை நெறியாக மாண்புற்றது எனலாம். இவ்வாறு அறநெறி செயல்களோடு செய்யும் ஒவ்வொரு செயலும் அறவியல் செயலாகும். அதன்படி இலக்கிய நூல்களின் அறச்செயல்ளை இக்கட்டுரை மூலம் பார்க்கலாம்.

**தொல்காப்பியரின் அறம்**

இலக்கிய உலகில் அறநெறிக் கோட்பாடுகள் சமூகவியல் நோக்கோடு ஆராயப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை முதலாகிய ஐந்திணை பற்றி பேச வந்த தொல்காப்பியர், வெறுமனே ஐந்திணை என்று மட்டும் சொல்லி நிறுத்தாமல் அதற்கு ஒரு நீண்ட அடைமொழி தருகிறார். “இன்பமுமம் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொரு புணர்ந்த ஐந்திணை” என்று பேசுகிறார். சங்க இலக்கியங்களில் அன்றையகாலத்து அறநெறிக் கருத்துகள் ஏராளம். குறிப்பாக அக இலக்கியங்களுக்கும் புற இலக்கியங்களுக்கும் அறநெறிகள் அடிப்படை வாழ்க்கைநெறியைத் தந்திருக்கின்றன. மேலும் காப்பியங்கள் தோன்றிய போதும் பாவிகம் என்ற நிலையில் அவை அறம் பற்றிப் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**“அரைசயில் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதுஊம்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம**”[1]

என மேற்கண்டப் பாடல் அறநெறி சார்ந்த கருத்துக்களாகவே அமைகின்றன. இங்ஙனம் சங்க இலக்கியம் முதல் இன்றைய தற்கால இலக்கியங்கள் வரை அறநெறி சார்ந்தே அமைந்து வருகின்றன.

**வள்ளுவம் காட்டும் வாழ்வியல் அறநெறிகள்**

மனித வாழ்வியல் நெறிகளுள் முதன்மையானது அறம். அறமே நிலையற்ற வாழ்க்கையை நிலை பேறுடையதாக மாற்றும் கருவி திருக்குறளைப் பாகுப்படுத்திய வள்ளுவப் பெருமான் அறத்துப்பாலை முதலில் வைத்து பொருட்பாலையும், காமத்துப் பாலையும் அதற்கு அடுத்து கூறியிருப்பது அறத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

உள்ளத் தூய்மையே உயரிய அறம் என்பதை எளிமையாகப் புலப்படுத்தும் காலக் கண்ணாடி நமது திருக்குறள், பிறன் இல்விழையாமை, ஈகை, விருந்தோம்பல், பொருள் செயல்வகை, நல்குரவு, ஒப்புரவு அறிதல் என்ற பன்முக நிலைப்பாட்டுத் தன்மைகளின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லை வள்ளுவர் கையாண்டுள்ளார்.

எடுத்துக்காட்டாக புறத்தூய்மையில் நாட்டமுடைய மக்கள் அகத்தூய்மையை மறந்து விடுகின்றனர். அவர்களுக்கு கீழ்க்கண்ட குறள் மூலம் விளக்குகிறார்.

"மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனத்துஅறன்

ஆகுலா நீர பிற"2

இன்பமும் துன்பமும் இல்லானே இறைவன் என்பது உண்மை. ஆனால் மனிதர்க்கு இன்பமும் துன்பமும் பிரிக்க முடியாத வாழ்வியல் அங்கம். இருப்பினும் மனிதமனம் துன்பத்தை வெறுத்து இன்பத்தை மட்டுமே விரும்புகின்றது. இளமை பொருள், பதவி, செல்வாக்கு, புகழ் இவற்றால் வரும் இன்பம் நிலையற்றது. அழிவில் இன்பத்தினை "**அறம் செய்வதால் மட்டுமே பெற முடியும்**" என்பதனை கீழ்கண்ட குறள் மூலம் எடுத்துரைக்கிறார்.

"அறத்தாள் வருவதே இன்பம்மற்று எல்லாம்

புறத்த புகழும் இல"3

மேலும் கொல்லாமைப்பற்றி வள்ளுவர் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். உயிர்க்கொலை தீது என்பதை அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன. "உயிர்கொலைதீது என்ற நீதியை புகட்ட எழுந்த காப்பியமே யசோதரகாவியம். உயிர்க்களை கொன்றால் பிறவிகள் தோறும் துன்பத்தில் உழலுதல் வேண்டும். எனவே மனித நேயத்தோடு நடந்துக்கொள்ளுதல் அவசியம் வாய்மையிலிருந்து பிறழாத பண்பு, உயிர்களைக் கொள்ளாதிருத்தல், இவை இரண்டு மிகச்சிறந்த அறங்கள்

"ஒன்று ஆக நல்லது கொல்லாமை மற்றுஅதன்

பின்சாரப் பொய்யாமை நன்று"4

என்று வள்ளுவர் கொல்லாமையும், வாய்மையில் இருந்து தவறாமையும் சிறந்த அறம் என எடுத்துரைக்கின்றார்.

**மறத்திலும் அறம்**

பழந்தமிழர் மறத்துறையிலும் அறநெறி போற்றுபவர்களாக இருந்தனர். ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதற்கு முன்னால் அந்நாட்டிலுள்ள பசுக்களும், பசுப்போன்ற மென்மைத்தன்மையுடைய அந்தணர்களும், பெண்களும், நோய் வாய்ப்பட்டவர்களும் நீத்தார் கடன் செய்தற்குரிய பொன் போலும் பிள்ளைகளைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடம் நாடிச் சென்று வருக எனப் பறையறைந்து கூறிவிட்டே பின்னர்ப் படை நடத்திச் சென்றனர் என்கிறார் நெட்டிமையார்.

"ஆவும் ஆனியர் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புல வாழ்நாக்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறா தீரும்

எம் அம்ப கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என

அறத்தாறு நுவலும் பூட்கை மறம்"5.

என மேற்கண்ட பாடல்மூலம் சங்க இலக்கிய மக்கள் உண்டி கொடுத்தவர்களை உயிர் கொடுத்தவர்களாக மதித்தனர். மறத்திலும், அறம் செய்து வாழ்ந்தனர் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

**புறநானூறும் சிறுபாணற்றுப்படை கூறும் கடையெழுவள்ளல்களின் கொடை அறம்**

**பேகனின் கொடை அறம்**

"அறுகுளத்த உகுத்தும் அகல்வாய் பொழிந்தும்

உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்

வரையா மரபின் மாரிபோலக்

கடாஅ யானை கழற்கால் பேகன்

கொடை மடம் படுத்துதல் அல்லது

படைமடம் படான்பிறர் படை மயக்குறினே"6

மயிலானது ஆடையை உடுத்திக்கொள்ளாது, போர்த்திக் கொள்ளாது என்று அறிந்தும் தன் ஆடையை மயிலுக்கு தந்தான் பேகன். இது பேகனின் அறியாமையாக இருந்தாலும் கொடை அறம் ஆகும். தன் முன் எவ்வுயிராக இருந்தாலும் எதிர்பாராமல் உதவிசெய்வதே சிறந்த கொடையாகும் என பேகன் அறிந்திருந்தான். இதுவே அவனது கொடையறமாகும்.

**ஆயின் சிறப்புகள்**

போதிய மலைக்குத் தலைவன் ஆய். இவனது குடி ஆய்குடி 'ஆய்குடி அண்டிரன்" எனவும் கூறுவர்.

**“அண்ணல் யானை எண்ணில் கொங்காக்**

**குடிகடல் ஓட்டிய ஞான்றை**

**தலைபெயர்த் திட்ட வேலினும் பலவே புறம்”** 7

இதனையே

**நிழல் திகழ் நீலநாகம் நல்கிய கலிங்கம்**

**ஆல் அமர் செல்வதற்கு அமர்ந்தான்8**

என்ற பாடல்வரியில் ஆய் பரிசளிக்கும் யானைகளின் எண்ணிக்கையானது. அவனது பகைவரான கொங்கர்களின் வேல்களைவிட அதிகம் என்றும், நாகம் தனக்களித்த ஒளிதிகழும் நீலமணியையும், சிவனுக்குத் தந்தவன் என கடவுளின் உள்ளத்தைக் காட்டிலும், ஆயின் கொடையுள்ளம் பெரிது என ஏணிச்சேரிமுடமோசியார் கூறுகிறார்.

**அதிகன் கொடைமடம்**

அதியமான் என்றழைக்கப்படும் அதிகன் தகடூரை ஆண்டவன்

**“பெருமலை விடகரத்து அருமிசை கொண்ட**

**சிறுயிலை நெல்லித் தீங்கனி குறியாது**

**ஆதல் நின்னகத்து அடக்கிச்**

**சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே**

**சாகா வரம் கொண்ட”**9

அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவைக்கு அளித்தான் அதியமான். ஔவை பிராட்டி தமிழ்ப்பாடல் மூலம் தமிழ்மொழியை வளர்ப்பாள் என்பதன் காரணமாக நெல்லிக்கனியைக் கொடுத்தான். தமிழ் வாழ உயிர்கொடுத்த அதிகனின் கொடைப் பெருமை, எந்நாளும் போற்றப்படும்.

**அன்பின் அடிப்படையில் எழுந்த இல்லற பண்பாட்டு அறச்செயல்**

இல்லற மகளிர்க்கு இன்றியயைாது இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் வலியுறுத்துகின்றார், இதனை

**“விருந்துபுறத் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**

**பிறவு மன்ன கிழவோர் மாண்புகள்”**10

என்ற நூற்பா மூலம் உணரலாம்.

“விருந்தோம்பல்” என்பதற்கு பின்வருமாறு விவேக சிந்தாமணி விளக்கம் கொடுக்கின்றது.

**“விருந்தினன் னானனொருவன் வந்தெரிதிரின்**

**வியத்தனன் மொழியினி துரைத்தல்**

**விருந்துற நோக்கல் வருகெனவுரைத்த**

**லெழுதல் முன்மகிழ் வன செப்பல்**

**பொருந்து மற்றவன்னை ருகுற விருத்தல்**

**போமெனிற்பின் செல்வதாதல்**

**பரிந்துநன் முகமன் வழங்களிவ் வொன்பா**

**னொழுக்கமும் வழிபடும் பண்பே”**11

விருந்தினர் ஒருவர் மற்றொருவர் இல்லத்திற்கு வந்த எதிரே நின்றால், அந்த வீட்டின் உரிமையாளர் விருந்தினரின் வரவைப்பற்றி வியப்படைதல், நல்ல சொற்களைக் கூறுதல் இனிமையாக எடுத்தியம்புதல், விருப்பத்துடன் நோக்கல், வருக, வருக என வரவேற்றல், விருந்தினரைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செய்தல், அவர் எதிரே நின்று மகிழ்ச்சியான செய்திகளைக் கூறல், வந்த விருந்தினருடன் அன்போடு அமர்ந்து பேசுதல், விருந்து உண்டபின் போய் வருகிறேன் என்று கூறிச் செல்லும் விருந்தினரைச் சிறிது தொலைவு கூடவே சென்றுவழி அனுப்பி வைத்தல் போன்ற செயல்களை உடையனவாய் விருந்தோம்பல் அமையும் என்று கூறுகின்றது. இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, விருந்தோம்பல் பற்றி தொல்காப்பியமும் விவேக சிந்தாமணியும் அழகாக எடுத்துரைக்கின்றது. இதனை தொல்காப்பியர் மேலும் ‘விருந்து’ என்பதற்கு ‘புதுமை’ (தொல்-பொருள், செய்-231) என்கிறார். இல்லத்திற்கு வந்த புதியவர்களுக்கு உணவளித்து உபசரிக்கும் பழக்கம் அன்பின் அடிப்படையில் எழுந்து, பின் அது இல்லறப் பண்பாடான அறச்செயலாக வளர்ந்துள்ளது.

**முடிவுரை**

சங்க இலக்கிய நூல்களை இரண்டு வகையாகப் பிரித்தனர். ஒன்று பதினென் மேற்கணக்கு நூல்கள் என்றும் மற்றொன்று பதினென் கீழ்கணக்கு நூல்கள் என்றும் பிரித்து அதில் அகம், புறம், என வைத்து இல்வாழ்க்கையாவட்டும், புறவாழ்க்கையாவட்டும் இரண்டிலும் அறம் வைத்து வாழ்ந்தனர். எனினும் பதினென் கீழ்கணக்கு நூல்களை அற இலக்கிய நூல்கள் என்றும், நீதி நூல்கள் என்றும் அழைப்பர். இந்நீதி நூல்கள் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வலியுறுத்துகிறது. கல்வியே சிறந்த செல்வம் என்றும் அதை இறந்தாவது பெற வேண்டும் என்று கூறுகிறது. மேலும் உயிர்க்கொலை புரிதல் கூடாது புலால் உண்ணல் கூடாது, கொலை, களவு, சூது அறவே ஆகாது என்றும் பிறர் மனைவிமேல் ஆசை, பரந்தைமைப் பழக்கம் தவறானது என்று இந்நூல்கள் வலியுறுத்துகின்றன. இதுமட்டுமல்லாது ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுக்காப்பியங்கள் என எல்லாக் காப்பிய நூல்களும அறம் சார்ந்த கருத்துக்களை வலியுறுத்துகின்றன.

அதுமட்டுமல்லாது, தற்போது உள்ள சமுதாயத்தின் மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய அறச் செயல்களாக கூறப்படுவது என்னவென்றால் கிடைத்ததைப் பலருக்கு பகிர்ந்து உண்ணக் கொடுத்து வாழ வேண்டும், சோம்பல் கூடாது, எவரையும் வெறுக்கக்கூடாது, சான்றோர் அஞ்சும் அறஞ்சாராச் செயல்களைச் செய்யக் கூடாது. நாளும் நல்ல செயல்களையே நாடிச்செய்ய வேண்டும். எவ்வளவுதான் இலாபம் கிடைப்பதாயினும் பழிச் செயல்களைச் செய்யக் கூடாது. அத்தகைய மனவுறுதி வந்தமைதல் வேண்டும். தன்னலம் பாராமல் பிறர் நலம் பேணும் வெற்றியராகத் துலங்க வேண்டும் என்றும் மேலும் யாதும், ஊரோ யாவரும் கேளீர்", "தீதும் நன்றும் பிறன்தரவாரா', என்ற கணியன் பூங்குன்றனார் வரிக்கேற்ப, எல்லாம் நமது ஊர், எல்லாம் நம் உறவினர், தீமையும், நன்மையும் பிறரால் நமக்கு வருவனவல்லா, நம்மால் நமக்கே ஏற்படுத்திக் கொள்வதாகும். இதுகாறும் கூறியவாற்றான் அறவியல் நெறிகள் சில நம் மறத்தமிழன் கண்ட வாழ்க்கைக் தெளிவினை உணர்த்தி நிற்கக் காண்போம். தொல் பழங்குடியினராகிய தமிழர்கள் தாம் வாழ்ந்த அறவாழ்க்கையினைப் பின்வரும் வழித்தோன்றல்களும் தெரிந்து பின்பற்றி வாழ்வு சிறக்க வாழ வேண்டும் என்பதே இக்கட்டுரையின் உயரிய நோக்கமாகும்.

**அடிக்குறிப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிலம்பு | - | 55-60 |
| 2. | குறள் | - | 34 |
| 3. | மேலது | - | 39 |
| 4. | மேலது | - | 323 |
| 5. | புறம் | - | 9 |
| 6. | மேலது | - | 142 |
| 7. | மேலது | - | 130 |
| 8. | சிறுபாணாற் | - | 96-97 |
| 9. | புறம் | - | 91 |
| 10. | தொல்-பொருள் - களவு | - | 11:3-4 |
| 11. | விவேக சிந்தாமணி | - | 2:55 |

**துணை நூற்பட்டியல்**


1. திருக்குறள் எளிய உர, நாமக்கல் கவிஞர், சென்னை.
2. புறநானூறு, உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17.
3. பத்துப்பாட்டு: உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17.
4. தொல் - பொருள் - களவு - க.வெள்ளைவாரணன் உரைவளம்.

# பட்டினப்பாலையில் அழகியல்

***முனைவர் மு.லோகநாயகி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, தெள்ளார் - 604406.

**முன்னுரை**

மக்கள் ஆற்றலுக்கு உட்படாமல் அவர்களைச் சுற்றி எங்கும் நிறைந்து இயற்கையழகு. எங்கும் நிறைந்த இயற்கையை எங்கும் நிறைந்த இறைவனாக வைத்துப் போற்றினர் பண்டைய மக்கள். இதனால் தான் ஆறுகளும் மரங்களும் இறைவன் உறையும் இடங்களாக நினைத்து வழிப்பட்டனர். மலையும் ஆறுகளும் காடும் ஞாயிறும் திங்களும் மலையும் எவரால் செய்யப்பட்டன. இயல்பாக அரும்பிய இவற்றில் அழகே கைபுனைந்தியற்றாக்கவின் பெறும் வனப்பாகும். இவ்வனப்பாகிய அழகு பற்றி பட்டினப்பாலையில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**இயற்கை வழிபாடு**

கைபடாதது எதுவோ அது இயற்கை. இயற்கை அழகு மிக்கது. கைபடாத வனப்பு வாய்ந்தது. இதனை,

**“கை புனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு” (திருமுருகாற்றுப்பாடை, வரி-17)**

என்று புனைந்துரைப்பர் நக்கீரர்.

“தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் உதவுதல் போல வாழ்க்கையில் ஏற்படும் சமுதாயத்தாக்கங்களில் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு இயற்கைப் புனைவு உதவுகின்றது என்பர்.” (கவிஞர் கொளஞ்சி, சமுதாயக் கடலில் வைரமுத்து, ப.1)

காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் இயற்கை வழிபாட்டை மேற்கொண்டனர் என்பதை சான்றுகள் பகர்கின்றன. பரதவர்கள் ஒன்று கூடித் தம் நிலத் தெய்வமான வருணனுக்குச் சுறாமீன் நட்டு வழிப்பட்டனர் என்பதை,

**“வெண்கூ தாளத்துத் தண்பூங்கோதையர்**
**சினைசுறாவின் கோடுநட்டு**
**மனைசேர்த்திய வல்லணங்கினான்” (பட்டினப், வரி 85-87)**

என்ற வரிகள் சுறாமீனின் கொம்பை நட்டு வழிபட்டனர் என்பதை அறியமுடிகிறது.

**காவிரியின் அழகு**

சோழ நாட்டின் இயற்கை அழகுகளுள் முக்கிய இடத்தைப் பெறுவது காவிரியாகும். குடகு மலையில் தோன்றும் வற்றாது வளம் சுரக்கும் காவிரியாறு பாய்வதால் எப்போதும் வளம் குன்றாத இருப்பதால் எங்கும் இயற்கையழகு நிரம்பி காணப்படுகிறது.

காவிரியின் நீரோட்டம் பளிங்கு போன்ற நீர் பாய்ந்து செல்கிறது. காவிரி என்னும் கன்னிக்கு நீர்அலைகளே ஆடைகளாக உள்ளன. தமிழ் உரைநடைக்கு அவற்றில் தோன்றும் கருத்துக்களே ஆடைகளாக உள்ளன. காவிரிக்கு மேகங்கள் தவிழும் மலைகளே காவல். தமிழ் மொழிநடைக்கு அவற்றைப் பேணும் புலவர்களே காவல். காவிரியின் அலைகளில் தோன்றும் வெண்ணிற நுரைகளே மலர்கள். தமிழ் உரைநடைச் சொற்களில் தோன்றும் நயங்களே மலர்கள் என்று காவிரியின் ஓட்டமும் தமிழ் மொழி நடையும் ஒப்புமைப்படுத்தி கூறியிருப்பது இங்கு எண்ணத்தக்கது. (கவிஞர் வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், ப.33)

**“வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலைதலைய கடற் காவிரி” (பட்டினப்,வரி 5-6)**

என்ற அடிகள் கார் மேகம் மழை பெய்யாது போனாலும் காவிரி தன் வளம் குன்றாது இருக்கும் என்று அழகுற வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

**சோழ நாட்டின் அழகு**

சோழ நாடு ஆறுகளும் வயல்களும் சூழந்த நாடாகும். அதனால் அங்கு இயற்கை அழகு எங்கும் காட்சியளிப்பதைக் காணமுடிகிறது. சான்றாக,

"கோள் தெங்கின் குலை வாழை
காய்க் கமுகின் கமழ் மஞ்சள்
இனமாவின் இணர்ப் பெண்ணை
முதற் சேம்பின் முளை இஞ்சி" (பட்டினப், வரி 16-19)

என்ற வரிகள் உணர்த்துகின்றன. குலைகளையுடைய தென்னை, வாழை, முற்றிய பாக்கு மரங்கள், மணம் வீசும் மஞ்சள் பல்வேறு மா மரங்கள், குலைகளையுடைய பனைமரங்கள், அடிப்பகுதி பருத்து விளங்கும் சேம்பு முளையுடைய இஞ்சி ஆகியவை விளைந்திருக்கும்

வெண்மையான பூக்களளையுடைய கரும்புகளும் செந்நெல்லும் வளர்ந்து, குவளைகளும் பெரிய இதழ்களைக் கொண்ட நெய்தலும் மயங்கி முதலைகள் செருக்குடன் திரியும் இடமகன்ற பொய்கைகளைக் கொண்டது. வயல்களும் பொய்கைகளும் நீரற்று வரண்டு வேறுபாடின்றிக் காணப்பட்டன. அங்குச் சிறுபூளை, பெரு பூளை என்னும் பூக்களும் கொழுத்த தண்டுகளைக் கொண்ட அறுகம்புல்லும் கோரைகளும் வளர்ந்தன. அறல்பட்ட கொம்பினையுடைய ஆண் மான்களும் பெண் மான்களும் துள்ளி விளையாடின,

"வெண் பூங் கரும்போடு செந்நெல் நீடி
மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி
கராஅம் கலித்த கண்அகன் பொய்கை,
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடி
செறுவும் வாவியும் மயங்கி நீர் அற்று
அறுகோட்டு இரலையொடு மான்பிணை உகளவும் " (பட்டினப், வரி 240-245)

என திருமாவளவன் ஆட்சி செய்கின்ற பகுதி இயற்கையழகு நிறைந்து காணப்படுவது சிறப்புக்குரியதாகும்.

**காவிரிப்பூம்பட்டினத்தின் அழகு**

காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டனர். கடற்கரையில் வாழ்வோர் உப்பை விற்பனை செய்து அதற்கு ஈடாக பெற்ற நெல்லைப் படகுகளில் ஏற்றிக் கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தை அடைவர். படகுகள் கரையோரத்தில் குதிரைகள் போல கட்டப்பட்டிருக்கும் என்பதை,

"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் ப.்றி
பணை நிலைப் புரவியின் அணைமுதல் பிணிக்கும்" (பட்டினப், வரி 29-31)

என்று காவிரிப்பூம்பட்டினத்தை அழகாகப் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில் எளியவர்களுக்கு உணவு அளிக்கும் அட்டிற்சாலைகள் பல உண்டு. அவற்றில் சோறு ஆக்கி கொழுங் கஞ்சி ஆறு போல பரந்து ஓடும். அவற்றை உண்ணச் செல்லும் எருதுகள் தம்மோடு மோதிக்கொள்வதால் சேறாகியப் பின்னாள் புழுதியாகிக் காற்றினால் அரண்மனையில் தீட்டம் பெற்ற ஓவியங்களில் படியும். இதனால் அரண்மனை புழுதியைத் தன் மேல் பூசிக் கொண்ட யானை போல காட்சியளிப்பதை,

"புகழ் நிலைஇய மொழி வளர
அறம் நிலைஇய அகன் அட்டில்
சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி
ஏறு பொரச் சேறாகி
தேர் ஓடத் துகள் கெழுமி
நீறு ஆடிய களிறு போல
வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும்" (பட்டினப், வரி 42-50)

என்று காவிரிபூம்பட்டினத்தின் அழகியல் உணர்வோடு கூறியிருப்பது சிறப்புக்குரியதாகும்.

**மருத நிலத்தின் அழகு**

சோழ நாடு வயல் வளம் நிறைந்த நாடாகும். அங்கு அகன்ற கரும்பாலைகளில் முற்றிய கரும்பின் சாறு காய்ச்சப்படும். அதன் பாகின் மணம் எங்கும் கமழும். அக்கொட்டில்களிலிருந்து எழும்

நெருப்பின் புகை சுடுவதால் நீரையுடைய வயல்களில் வளர்ந்துள்ள நீண்ட நெய்தல் நில பூக்களின் அழகு கெடும். இதனை,

**“விளைவு அறா வியன் கழனி**
**கார்க் கரும்பின் கமழ்ஆலைத்**
**தீத் தெறுவின் கவின் வாடி**
**நீர்ச் செறுவின் நீள் நெய்தற்**
**பூச் சாம்பும் புலந்து ஆங்கண்**
**காய் செந்நெல் கதிர் அருந்து**
**மோட்டு எருமை முழுக் குழுவி**
**கூட்டு நிழல்துயில் வதியும்” (பட்டினப், வரி 8-15)**

என்று கூறுகிறது. அங்குள்ள செந்நெல்லின் காய்ந்த கதிர்களைத் தின்று வயிறு பெருத்த எருமைகளின் இளங்கன்றுகள் நெற்போரின் நிழலிலே கிடந்து தூங்கும் என்று மருத நிலத்தின் இயற்கை அழகை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது சிறப்பானதாகும்.

சோழ நாட்டில் எல்லாக் காலங்களிலும் தவறாது விளைச்சலைத் தரும் கழனிகள் பல இருந்தன. பச்சை கரும்பினுடைய நறுமணம் கமழ்கின்ற பாகு காய்ச்சப்படுகின்ற கரும்பாலைகள் நிறைந்துள்ளன,

**“கோள் தெங்கின் குலை வாழை**
**காய்க் கமுகின் கமழ் மஞ்சள்**
**இனமாவின் இணர்ப் பெண்ணை**
**முதற் சேம்பின் முளை இஞ்சி**
**அகல் நகர் வியன் முற்றத்து” (பட்டினப், வரி 16-20)**

நெருக்கமான குலைகளையுடைய தென்னை, வாழை, பனை முதலிய மரங்களும் மஞ்சள், சேம்பு, இஞ்சி முதலிய செடிகளும் அடர்ந்திருந்தன என்று கூறுவது மருத நிலத்தின் அழகை வெளிப்படுத்தி நம் கண் முன்னே காட்டுவது சிறப்புக்குரியதாகும்.

**முடிவுரை**

சோழ நாட்டின் சிறந்த நகரமாக காவிரிபூம்பட்டினம் விளங்கியது. காவிரிபூம்பட்டினத்தை சோழ மன்னன் திருமாவளவன் ஆட்சி செய்ததால் இயற்கை அழகோடு காட்சி அளித்தது. சோழநாடு சோறுடைத்த நாடு என்ற சிறப்பை பெற செய்த காவிரியாறு பாய்ந்து அழகுற காட்சியளிப்பதை பாடல் வழி அறியமுடிகிறது.

# பாவண்ணன் சிறுகதையில் அறச்செயல்கள்

***மு.சாதிக் அலி,** பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், உதவிப்பேராசிரியர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி.

**முன்னுரை**

அறத்தால் வருவதே இன்பம் என்றார் திருவள்ளுவர். அறச்செயல்களைச் செய்து அதன் மூலம் கிடைப்பதே நிலைத்த இன்பமாகும். புராணங்கள், காப்பியங்கள் யாவும் அறக்கருத்துகளையே நம்மிடம் விதைக்கின்றன. குர்ஆன், பைபிள், கீதை போன்ற புனிதநூல்கள் யாவும் அறக்கருத்துகளை உரைப்பதையே நோக்கக் கொண்டுள்ளன.

**"உண்டி கொடுத்தோர்**

**உயிர் கொடுத்தோரே"**

என்கிறது மணிமேகலை காப்பியம். நம்மால் இயன்ற உதவிகளை பிறருக்குச் செய்வதே அறச்செயலாகும். உதவி செய்ய முடியவில்லையென்றால் தீமை செய்யாமலாவது இருக்க வேண்டும். அதுவே மிகச் சிறந்த அறம்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅதன்"**

என்கிறார் வள்ளுவர். புறநானூற்றுப் பாடலும்

**"நல்லது செய்த லாற்றி ராயினும்**

**அல்லது செய்த லோம்புமி னதுதான்"**

என்று அதே கருத்தைக் கூறுகிறது, அறம் என்பதற்கு அறிஞர்கள் பலரும் பல விளக்கமளித்தாலும் மிகச் சிறந்த அறம் என்பது இதுதான் என விளக்கும் அளவிற்கு நம்மிடம் சரியான வரையறுக்கப்பட்ட பதிலில்லை. ஆயினும் பாரதி தன் கவிதையில்

**"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம்**
**பதினாயிரம் நாட்டல் பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர்விளங்க ஒளிர நிறுத்தல், அன்னயாவினும்**
**புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

என்கிறார். அறம் என்பது ஒவ்வொருவரின் பார்வையிலும் வேறுவெறு பொருள் பட்டாலும் அவை அனைத்தும் நம் தொன்மையான தமிழ் இலக்கியங்களிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது நமக்கு கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும். அத்தொன்மையான தமிழ் இலக்கியத்தில் ஒன்றான சிறுகதை இலக்கியத்தில் ஆசிரியர் பாவண்ணன் தம் சிறுகதைகளில் அறக்கருத்துகளைப் பதிவு செய்துள்ள விதத்தை இக்கட்டுரையில் காணலாம்.

**பாவண்ணன்**

எழுத்தாளர் பாவண்ணன் அவர்கள் பதினாறுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் உட்பட சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்திருந்தாலும் அவருடைய பச்சைக்கிளிகள் என்னும் சிறுகதைத் தொகுப்பை மட்டும் ஆய்வுக்குள்ளாக்கி அத்தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள அறச்செயல்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வெளிச்சத்தைக் கொண்டு வருபவன்**

பாவண்ணனின் பச்சைக்கிளிகள் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள சிறுகதை வெளிச்சத்தைக் கொண்டு வருபவன்.

கல்வியறிவில் பின் தங்கிய கிராமத்திலுள்ள பள்ளிக்கு இடம் மாறுதலில் வந்த ஆசிரியர் ரங்கராஜன் முதல் நாள் வகுப்பில் மாணவர்கள் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைகிறார். படிக்கும் வயதில் மாணவர்கள் அருகிலுள்ள செங்கல் சூளைக்கு வேலைக்குச் சென்றதை நினைத்து வருத்தப்படுகிறார். செங்கல் சூளைக்குச் சென்று மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோரிடமும் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகிறார். பள்ளிக்கூடம் வராமல் சாராயம் விற்கும் மாணவர்களுக்கும் கல்வியின் முக்கியத்துவத்தை விரிக்கிறார். அதனால் கோபமடைந்த சாராய வியாபாரிகளால் ஆசிரியர் தாக்கப்படுகிறார். ஆசிரியரின் விடாமுயற்சியால் மாணவர்களுக்கு படிப்பின்

மீது ஆர்வம் வரவே அனைவரும் நன்கு படித்து உயர் நிலையிலும், மேல்நிலையிலும் தேர்ச்சியடைந்து உயர் கல்வி கற்கின்றனர். சில மாணவர்களுக்கு அரசு வேலையும் கிடைத்ததால் அக்கிராமமே ஆசிரியரைக் கொண்டாடுகின்றது.

**“இன்னிக்கு நாயுடு தோட்டத்துல கரும்பு**
**வெட்டறாங்க சார். அவனுங்கள்ளாம் அங்க**
**வேலைக்கி போயிருக்காங்க” (ப-50)**
**“மூன்று நாள் சுய நினைவே இல்லாமல்**
**கிடந்த சார் நாலாவது நாள் தான்**
**கண்ணைத் திறந்து பார்த்தார்” (ப-61)**
**“மறுவாரம் எங்களையெல்லாம் சாத்தனூர்**
**அணைக்கட்டைப் பார்க்க அழைத்துச் சென்றார்” (ப-63)**
**“நூத்தியெழுவது ரூபா கிடைக்கும் அப்புறம்**
**வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமா**
**ஏத்துவாங்க…**
**அவனுக்கு கிடைத்த வேலையும் சம்பளமும்**
**எங்கள் கிராமத்தையே தலைகீழாக்கி விட்டது**
**“செதம்பரம் பக்கத்துல மொதல்ல இருந்தாரே**
**அங்கயும் இப்பிடித்தான் படிப்புக்கு உதவுறது**
**வேலைக்கி உதவுறன்னு ஏதாச்சிம்**
**செஞ்சிசிட்டே இருந்தாராம் இந்த ஊருக்கு**
**வந்தது நாம செஞ்ச புண்ணியம் (ப-67)**

**மருந்து**

மருந்து என்னும் இச்சிறுகதையில் பட்டாளத்தில் வேலை செய்யும் போது மரு அருந்தி பழகிய மாணிக்கம் பணி ஓய்வு பெற்ற பின்பும் தன் வீட்டில் அப்பழக்கத்தைத் தொடர்கிறான். ஒரு கட்டத்தில் குடும்பத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டவன் தெரு ஓரங்களில் பிச்சை எடுத்து மது அருந்துகிறான். உடல் முழுவதும் நோய் வந்த நிலையில் காசில்லாமல் அனாதையாகக் கிடந்த அவனை ஒரு ரிக்ஷாக்காரன் எடுத்து நாட்டு மருத்துவரிடம் ஒப்படைக்கிறான். மனநலம் பாதிக்கப்பட்ட அவனை அம்மருத்துவர் தன் வீட்டிலேயே தங்க வைத்து தொடர்ச்சியாக சிகிச்சையளித்து அவன் மனநோயையும், உடல் நோயையும் குணப்படுத்தி அவனை சமுதாயத்தில் மதிப்புள்ள மனிதனாக மாற்றுகிறார்.

**“வைத்தியசாலை ஆட்களும் ரிக்ஷாக்**
**காரரோடு சேர்த்து அவரை இறக்கினார்.**
**எலும்புக்கூடு போல இருந்தார் ….**
**குச்சியான கைகள்… ஒட்டி விட்டவயிறு**
**முழங்காலுக்குக் கீழே ஓர் ஆல இலை**
**அளவுக்கு கொதகொதவென புண்**
**இருந்தது…. தலை மட்டும் தொங்கி**
**தனியாக ஆடியது…..**
**…….**
**நா வாரேங்க ஐயா என்படி ரிக்ஷா**
**காரர் போய்விட்டார்” (ப-176)**
**“ஒரு நாள் காலையில் மாணிக்கம்**
**தாத்தாவின் காலில் விழுந்து அழுதார்**
**நீங்க கடவுள் அவதாரம் என்றார்”**
**“உங்க நிழல்லயே என் மிச்ச காலத்த**
**கழிச்சடறேன்யா. நாலு பேருக்கு**
**பிரயோஜனமா இருக்கறதுக்கு எனக்கும்**
**ஒரு வாய்ப்பு குடுக்கணும் என்று**
**தாத்தாவிடம் கெஞ்சினார் மாணிக்கம்” (ப-182)**

**பிரசாதம்**

பிரசாதம் என்னும் இச்சிறுகதையில் தினமும் மூன்று வேளை உணவுக்கே கஷ்டப்படும் சிறுவன் வீரமுத்து பள்ளிக்கூடம் முடிந்து வரும் போது செட்டியார் தன் கடையில் தினமும் இலவசமாக கொடுக்கும் புண்ணாக்கையே தனக்கான உணவாக மாற்றிக்கொள்கிறான். பள்ளிப்படிப்பு முடிந்ததும் அப்பள்ளி நிர்வாகம் சார்பில் மேல் படிப்பு படித்து சான் பிரான்ஸிஸ்கோ பல்கலைக்கழகத்தில்

பேராசிரியராகப் பணிபுரியும் வீரமுத்து கிடைத்த விடுமுறையில் தான் படித்த பள்ளிக்கு வந்து அங்குள்ள ஆசிரியர்களிடம் கலந்துரையாடிவிட்டு அப்பள்ளிக்குத் தேவையான பொருளுதவிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் தனக்கு புண்ணாக்கு கொடுத்து வளர்த்த செட்டியாரின் குடும்பத்தையும் காண முயல்கிறான்.

**"என்னடா, என்ன வேணும் படிக்கிறியா?**
**.....**
**செட்டியார் ஒரு பிடி புண்ணாக்கை எடுத்து**
**அவனிடம் நீட்டினார்.**
**அரைக்கணம் தனிந்த பசியின் தீ மீண்டும்**
**சுவாலை விட்டு எரிந்தது.**
**தொட்டியிலிருந்து இன்னொரு பிடியை**
**எடுத்து நீட்டினார்....**
**தன் கண்கள் தளும்புவதை அவனால் உணர**
**முடிந்தது...** (ப-155)
**"அப்போதும் அவனுக்கு இன்னொரு பிடி**
**புண்ணாக்கு கிடைத்தது.... அதை**
**சாப்பிட்டு முடித்தபோதுதான்**
**தன் உடல் நடுக்கம் நின்றதை அவன்**
**உணர்ந்தான்"** (ப-158)
**"அதைத் தொடர்ந்து சான் பிரான்ஸிஸ்கோ**
**பல்கலைக்கழகத்தில் உயர் நிலை ஆய்வாளராகவும்**
**பேராசிரியராகவும் சேர்ந்தான்"** (ப-163)
**"புறப்படுவதற்கு முன்னால் ஒரு பெரிய**
**தொகைக்கு காசோலையை எழுதி**
**ஆசிரியரின் மேசையில் வைக்கப்பட்டிருந்த**
**உண்டியலுக்குள் போட்டு விட்டு**
**விடைபெற்றுக் கொண்டார்"** (ப-166)

முடிவுரை

பாவண்ணன் அவர்கள் இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருந்தாலும் அவருடைய பச்சைக் கிளிகள் என்ற சிறுதைத் தொகுப்பை மட்டும் ஆய்வுக்குள்ளாக்கியுள்ளேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல அவருடைய சிறுகதைகள் பெரும்பாலும் அறக்கருத்துகளையே சமுதாயத்திற்கு தந்து கொண்டிருக்கின்றன என்பது திண்ணம். **"அற ஒழுங்கு ஊரை ஆளும்"** என்னும் பழமொழிக்கேற்ப தன் படைப்புகளில் நல்லறங்களையும், ஒழுக்கத்தையும் பொதிந்துள்ளார் ஆசிரியர் பாவண்ணன் அவர்கள்.

**முதன்மைச் சான்று**

பச்சைக் கிளிகள் - பாவண்ணன்

**துணைமைச் சான்றுகள்**

1) மணிமேகலை
2) பாரதியார் கவிதைகள்
3) திருக்குறள்
4) புறநானூறு

# மூவேந்தரின் முருகியல் படைப்பு

***முனைவர் இரா.விஜயசாமுண்டிஸ்வரி,** துறைத்தலைவர், தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோவை.

மூவேந்தர்களின் வரலாற்றை, சிறப்புமிக்க வாழ்க்கைப் பதிவுகளை அழகாக எடுத்துக் கூறும் முத்தொள்ளாயிரப் பாக்களில், படிந்துள்ள - பொதிந்துள்ள சூழல் சார்ந்த அழகியல் கூறுகளை சுவைப்பது நோக்கமாகும்.

காலத்தாலும் சமூகச் சூழலாலும் விசாலப்படுத்தப்பட்ட சிந்தனையின் அடிப்படையை பின்புலமாகக் கொண்ட பாடல்களில், பொதிந்துள்ள கருத்துக்கள் கற்பனையால் மிகைப்படுத்தப்பட்டிருப்பினும், அன்றிருந்த கருத்துச் சுதந்திரத்தையும், பாடலசிரியா்களின் மொழி ஆளுமையையும், வெளிப்பாட்டுத் தன்மையையும் ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது.

பொருந்திப்போன பொதுமைப் பண்புகளை சற்று விரித்துப் பார்ப்பது என்பது இன்றைய சூழலில் மிகைப்படுத்தப்பட்ட, பிரம்மிப்பிற்குள்ளான அம்சமாகவே தெரிகிறது.

படைப்பாளனின் பார்வை, அணுகுகிற தன்மை, ஆழமான கருத்தேற்றம், பிரம்மாண்ட பிம்பத்தை முன் வைக்கிற பாங்கு, உவமை, கற்பனை என எல்லைகள் விரியும் போது படைப்பு அழகு பெற்றுவிடுகிறது. நுகர்வோரின் (வாசகன்) மனதில் அவை பற்றிக் கொள்கிற போது படைப்பு சிறப்புக்குரிய நிலையை அடைந்துவிடுகிறது.

அழகியல் என்ற வெளிப்பாட்டுத் தன்மைக்குள் செறிவு பெறாத இலக்கியம் நிலைபேற்றுத் தன்மைகளை இழந்து விடுகிறது எனும் திருஞான மூர்த்தியின் சிந்தனை முற்றிலும் ஏற்கத்தக்கதாகும்.

சேர, சோழ பாண்டிய மன்னர்களின் வரலாற்றுப் பின்புலம், சூழல் சார்ந்த அழகியலாக இங்குப் பார்க்கப்படுகிறது. மூவேந்தர்கள் குறித்த பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் காலச் சூழலின் பிரம்மாண்டத்தை காட்சிப்படுத்துகிறது. இங்கு அழகியல் என்பது பாடலால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பாங்கு மட்டுமே.

பலவித பெயர்களால் அழைக்கப்படுகிற மூவேந்தர்களின் வளம், காதல், வீரம், வலிமை, குணநலன் போன்றவற்றை அறிய பாடலின் மொழி ஆளுமையை உணர்ந்து கொள்வது அவசியமாகிறது. அரும்புகள் நிறைந்த மலர் விரிய விரிய பரப்பும் மணம் அலாதியானது. போர்க்களத்தில் அதை அணிந்து போரிடுவது என்கிறபோது, வெற்றியைத் தருகிற மனச்சூழலை மாலை மட்டுமல்ல, பரப்பும் மணமும் தந்துவிடுகிறது. சேரன் ஆழியான் அரும்புகள் நிறைந்த பூமாலை அணிந்தவன் என்று காட்சிப்படுத்தப்பட்டிருப்பதன் பின்னணியே சூழலின் வெற்றியைத் தீர்மானிக்கிறது.

வீரம் என்பது ஆண்மையின் அடையாளம் என்னும் பொது அடையாளத்தை இருத்தி வைத்துக் கொள்வதை இங்கு சூழல் நிறைவு செய்கிறது. போர்க்களத்தில் வெற்றியை பெறுவது என்பதை விட களம் புகுதல் எனும் நிலையிலேயே வீரம் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சேரன் வீரம் மிகுந்தவன், வலிமை உடையவன், வெற்றியைப் பெறுபவன் என்பதை வெளிப்படையாக தெரிவிப்பதை விட, போர்க்களக் காட்சியும், சேரனோடு ஒத்த உயிரினங்களின் மருட்சியும் புலவர்களின் கற்பனை வளத்தால் அழகியல் தன்மையைப் பெற்றுவிடுகிறது.

சேரன் விடுத்த வேலின் இருபுறமும் வீசும் மனத்தினை குறிப்பிடும் ஆசிரியா் வெற்றி குறித்த வார்த்தையோ உள்ளடக்கப் பண்பையோ வெளிப்படுத்தவில்லை. வீசப்படும் வேலின் மீது படியும் மணமும், நாற்றமுமே பகைவர்களின் வீழ்ச்சியைக் குறிப்பிட்டு விடுகிறது. வெற்றியை அடைந்தே தீர வேண்டும் என்பதில் மன்னர்களுக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இங்கு மாமிச நாற்றம் வெற்றியின் மீது எழும்பி நிற்கிறது. மாமிச நாற்றம் சேரனின் வீரத்திற்கான அழகியலாக நம் கண்முன் விரிகிறது.

மற்றொருரிடத்தில், யானை முழுநிலவினை வெண்கொற்றக் கொடையென நினைத்துப் பிடிக்க தன் கையை நீட்டுகிறதாம். அரசனின் எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்க யானை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உள்ளக் குறிப்பறிந்து செயல்படுதல் சுற்றியுள்ள, உயிருள்ள அனைத்திற்கும் பொருந்தும் என்பதை புலவன் வெளிப்படுத்த தவறவில்லை. முத்துக்களால்

அலங்கரிக்கப்பட்ட வெண்குற்றக் குடை என்பதில், வளத்தினும், வாழ்க்கை முறையிலும் நிகரான எதிர்த் தன்மை நிறைந்த பகைவனை வெற்றிக் கொள்ளுதல் என்ற சூழலும் இங்கு பதிவு செய்யப்பட்டிருகிறது.

வெளிப்படுத்திய விதம், நிலவிற்கும், பூமிக்கும் இடையே இருக்கின்ற இடைவெளி, வெற்றியை அடையத் துணைபுரிய வேண்டும் என்பதனால் காணாமல் போய்விடுகிறது. வேகத்தை-கோபத்தை - குரோதத்தை அந்த இடைவெளி சமன்படுத்துகிறது என்ற பார்வை, உணர்வோடு இயைந்த தன்மையாக பார்க்கப்படுகிறபோது உயர்ந்து நிற்கிறது.

ஒருவரின் ஆளுமையைக் (புற அழகு) கண்டு ஒரு நிமிடம் கண்கள் வழியாக மனதில் உள் இழுத்து நிறுத்தும் ஆற்றலை அறியாதவர் யாரும் இருக்க முடியாது. அது இயற்கை. உணர்வுகளால் உந்தப்பட்டு, உள்ளத்திலே சேமிக்கப்படும் எண்ணங்கள் நினைத்த நேரத்தில் மகிழ்வைத் தரும். இதை ஒருபாடல் அழகியல் தன்மையோடு வெளிப்படுத்துகிறது.

சேரனின் வீரம் செறிந்த, வலிமை மிகுந்த அழகைக் காண இளம் கன்னியர்களின் கடைக் கண்கள் திறப்பது இயற்கை. உலாவரும் மன்னன் மேல் காதல் கொள்வது என்பது நடைமுறைச் சிக்கலோடு கூடிய அவலம். அது தாய்மையின் நிலையிலிருந்து தடுக்கப்படக் கூடியதும் கூட. அக்காட்சியை, 'தாயார் அடைப்ப மகளிர் திறந்திட' எனும் வரிகளால் அழகான சொல் ஆளுமையோடு வெளிப்படுத்தியிருப்பது நயம் பாராட்டத்தக்கது.

மதம், மொழி கலாச்சாரம் கடந்து கண்களால் கண்டுணரப்படுகிற காதலில் ஆளுமை, அழகு, நேர்த்தி இணைந்து இருக்குமானால் காதல் கனிவை நோக்கிய அடுத்தகட்ட நிலையை அடைவதற்கு தாய்யால் தடைபோடப்படும் பாங்கினை கதவின் குமிழி தேய கன்னியர்கள் திறப்பது என்பது மிகுந்த பொருள் செறிவுள்ள வெளிப்பாட்டுத் தன்மையாகும்.

காதலை எதிர்கொள்ளாத மனித வாழ்க்கையில்லை. பருவத்திற்கே உரிய உணர்வு, தேடல், கிளர்ச்சி ஆகியவற்றை மகளிர் திறந்திட என்னும் சொல் அழகாக உணர்த்தி விடுகிறது. அதிலும் குதிரை பூட்டப்பட்ட தேரில் உலா வருதல் என்பது வலிமையின் வெளிப்பாடு. ஆண்மையின் அடர்ந்த அடையாளம். ஆளுமையின் அடுத்த நகர்வு. அதுவே பெண்ணின் பார்வையில் தேடலை மனதிற்குள் சொல்லித் தருகிறது.

**'தாயார் அடைப்ப மகளிர் திறந்திடத்**

**தேயத் திரிந்த குடுமியவே - ஆய்மலர்**

**வண்டுலாஅங் கண்ணி வயமான்ரேக் கோதையைக்**

**கண்டுலா அம் வீதிக் கதவு'**

தடுக்க தடுக்க பீறிட்டு எழும் என்ற உணர்வுப் போராட்டம்தான் 'குமிழி தேய' என்ற அழகிய சொல் தேடலைத் தந்திருக்கிறது.

**சோழன்** குறித்த பாடல்களிலும் வீரம், வலிமை அழகு குறித்த பின்புலமே காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலவு தேய்வதும் முழுமை அடைவதும் இயற்கை. இந்நிகழ்வை கருத்தின் மிகைமை கருதியும், வளமை கருதியும் காட்சிப்படுத்தியும் சோழனின் வெற்றியோடு கூறியிருப்பது நல்ல அழகியல் தன்மைக்கு எடுத்துக்காட்டு.

மண்ணுலக மக்களைக் காப்பதில் அரசன் மட்டும் கடமையுடையவனல்லன். அவனுக்கு வெற்றியைத் தருகிற ஒரு பங்களிப்பாக அவன் சார்ந்த உயிரினங்களும் அமைய வேண்டும் என்கிற புரிதல் புலவனிடம் நிரம்ப இருந்திருக்க வேண்டும். அதன் காரணமாகத்தான் நிலவு தேய்கிற இயற்கை, யானையின் சீற்றத்திற்கு அஞ்சி ஒடுங்கித் தேய்வதாக கற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

வயவேந்தர் செல்வம் பல கவர்ந்தும் - வறிஞர் இனங்கவர்ந்தும் எனும் அடி போரிட்டு பெற்ற செல்வம் முழுவதும் தான் ஆளும் மண்ணுலக மக்களுக்கு மட்டுமே. தனக்கானது அல்ல. தன் வளப்பத்திற்கானது அல்ல. மனிதருக்கானது. தான்சார்ந்த மக்களுக்கானது என்பதை அடர்த்தியாக - ஆழமாக பதிவு செய்ப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. இங்கு, மக்களே எடுத்துக் கொள்வது. அரசன் என்பதற்கான வரையறை கடந்து கட்டுப்பாடுகள் களைந்து தன் தேவை கருதி எடுத்தல். இங்கு கொடுப்பது என்பது கிடையாது. தேவை கடந்து தேடுதல் என்பது அன்று இல்லை. தேவையின் அளவைச் சுருக்குதல் என்ற நிலையில் வாழ்வை நடத்துதல். அதுவும் நேர்மை நிலையில் நின்று நடத்துதல். இச்செயல் அரசனுக்கும் மக்களுக்குமான இடைவெளி இன்மையின் வெளிப்பாடு.

சேரனின் உலா காண பெண் தடுக்கப்படுவதும், குமிழி தேய கதவினைத் திறத்தலும் என்ற நிலைபாட்டிலிருந்து சற்று மாறிய சூழலில் சோழனின் உலா வர்ணிக்கபட்டிருக்கிறது.

**'நீல வலையிற் கயல்போற் பிறழுமே**

**சாலோக வாயில் தொறுங் கண்'**

சோழனின் உலா காண தடுப்பு இன்மையிலும் உலகம் பழித்துவிடுமோ என்ற அச்சம் கொண்டு தன் நிலை உணர்ந்து உள்ளக்கிடக்கையை தன்வசமே கட்டுப்படுத்தி, காதலையும் அடக்காமல், அடக்க முடியாமல், அடக்க நினைக்காமல், யாரும் அறியாமல் சாளரம் வழியே கண்டு மனநிறைவெய்துமாகச் சொல்லியிருப்பது பெண்களுக்கான மற்றொரு வகைப்பாடு. இங்கு பெண் தன்நிலை மீறி காமத்தை வெளிப்படுத்தவில்லை. அடக்குதல் என்பது தங்களுக்கே உண்டான பண்பாக இங்கு சுட்டப்பட்டுள்ளது. உணர்ச்சிப் பேராட்டத்தில் மற்றவர் அறியாதவாறு தாம் தோற்று விடுகிறோம் என்பதுதான் உண்மை. கெண்டை மீன்களால் கண்கள் பிறழுகின்றன எனும் வரிகள்.

பாண்டிய மன்னனின் வெற்றிக்காக போர்க்களத்தில் வலிமையோடு போரிட்டு ஒரு தந்தத்தை இழந்த யானை பெண் யானையின் முன் நிற்க நாணப்படுகிறது.

தந்தம் என்பது யானையின் கம்பீரம். தனது வலிமையை, கம்பீரத்தை இழப்பது என்பது பெண்மையின் முன் தோற்றுப் போய்விடுகிற செயல். ஐந்தறிவுள்ள உயிர்களுக்குள்ளும் அது அடங்கும்.

இங்கு நாணம் என்பது பெண்மைக்கே உரியது என்பது முதலில் உடைத்தெறியப்பட்டுள்ளது. மனிதன் அல்லாத மற்ற உயிரினம் நாணம் கொள்ளுமா என்ற வினாவிற்கு விடையாக அமைந்ததுள்ளது இப்பாடல் மிதமிஞ்சிய வெற்றியின் போது ஏற்படும் நாணம் - வேறுபட்ட பாலினம் முன் தோன்றும் நாணம் - அழகின் உந்துதலால் ஏற்படும் நாணம் - அறியாமையின் போது ஏற்படும் நாணம் என்று அடுக்கிய வகைகளுள் எதனுள்பட்டது யானையின் நாணம்.

நாணப்பட்டு இறந்தவர்களின் குடலால் இழந்த தந்தத்தின் பக்கத்தை மறைத்துக் கொள்ளுமாம். எண்ணற்ற பகைவீரார்கள் மாண்டு மடிந்த களமானதால், போரில் வெற்றியை ஈட்டி தந்தத்தை இழந்ததால் வேறுபட்ட பாலினம் முன் வெற்றியின் போது கொண்ட நாணமாக நிற்கிறது. குடலால் மறைத்துக் கொள்கிற காட்சி படிமமாக மனக்கண்ணில் நிறைகிறது. எண்ணங்களை காட்சிப்படுத்துதல் என்பது சுலமானதல்ல. இங்கு பாண்டியனின் வெற்றி, யானையின் வலிமை, யானைகளுக்குள்ளான காதல் தோய்ந்த வாழ்க்கை, அனைத்தையும் நான்கு வரிகளில் காட்சிப் படிமமாக மனதில் நிறைந்துவிடுகிறது. காட்சிப்படுத்துதல் என்ற அழகியல் தன்மை இங்கு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

'முடியுடை மன்னர் குடரால்' என கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. பலம் கொண்ட எதிரியிடம் மோதுவதுதான் வீரம் செறிந்த மன்னனுக்கு அழகு. போர்க்களத்தில் மாண்ட பகை மன்னர்கள் அத்தகையரே என்பதையும் இவ்வரி சுட்டி நிற்கிறது.

போர்க்குணம் நிறைந்தவனாக அரசன் படைக்கபட்டிருந்தாலும் மனதர்களுக்கே உண்டான கனிவு, இரக்கம் என்பது உடலோடு இணைந்துவிட்ட பண்பு நெறி. அப்பண்பு நெறியிலிருந்து பிறழாமையையும் பொருந்திய நிகழ்வோடு சொல்லியிருக்கிறார் ஆசிரியர். மடிந்த பகையரர்களின் மனைவிமார்கள் புதல்வர்களை முன்னிருத்தி பாண்டியனின் பாதத்தை வணங்கினர். செருக்கு கொண்டவனும் சிவக்கக் கோபம் கொண்டவனும் கூட தன் முன் இரங்கி நின்று யாசிக்கிற காட்சியைக் காணும் பொது மனம் இளகிவிடுவான். கோபத்தை தணிக்கிற மருந்து யாருமற்ற நிர்கதியான சூழலில் பிள்ளைகளோடு சரணடைதல் தன்மை. கணவனை இழந்து தவிக்கிற பெண் அவனொடு மாண்டுவிட முடியாது. அவனுக்கான கடமையிலிருந்து தவறிவிடவும் இயலாது எனும் போது வாழ்வதற்காக - வாழவைப்பதற்காக சரண் அடைகிறாள் பிள்ளையை முன்நிறுத்தி.

சூழல் அறியாத பெண்கள் - சார்ந்து வாழ்கிற பெண்கள் - இறுமாப்பு கொள்கிற பெண்கள் சரணாகதி அடைகிற போது கொண்டிருந்த கோபமும் அற்றுப் போய்விடும். இங்கு கவனிக்கத்தக்கது. பிள்ளையை முன்னிருத்தி பின் விழுதல். எதிர்கால கனவுகளொடு இருக்கிற குழந்தைகளின்காட்சி, அவர்களை வளர்த்தெடுப்பதற்கான செறிவு அற்ற தாய்மார்கள் என பல அடுக்கு பிம்பங்களை முன்னிருத்தி புனையப்பட்ட செறிவு நிறைந்த பாடலாக உணரப்படுகிறது.

முத்தொள்ளாயிரப் பாடல்களில் மூவேந்தர்களின் அடர்த்தியான படிமங்களும், வாழ்க்கை செறிவுகளும் கூர்மை பெற்று நிற்கின்றன. காலச்சூழலும், வாழ்க்கை முறைகளிலும், வீரத்திற்கான புரிதல்களும் நிறைந்த பண்பாட்டுப் பதிவுகளின் காலப்பெட்டகமாக முத்தொள்ளாயிரம் விளங்குகிறது.

# புறநானூற்றில் அறவியல்

***முனைவர் பா.ஈஸ்வரன்,** உதவிப்பேராசிரியர் & ஒருங்கிணைப்பாளர், தமிழ்த்துறை (ஆங்கிலத்துறை), கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்.) ஆனந்த் நகர், கிருஷ்ணன்கோவில்,திருவில்லிப்புத்தூர்,விருதுநகர் மாவட்டம் - 626 126.

சங்ககாலத்தில் 'அறம்' என்பது மக்களாலும் மன்னனாலும் உயர்வாக மதிக்கப்பட்டது. இக்காரணங்களினால் பல கொடுமைகள் நாட்டில் இல்லாமல் இருந்தது. இக்காலத்தில 'அறம்' தேய்ந்து கொண்டிருக்கின்றது. அதனால், நாட்டில் கொலை, கொல்லை, கற்பழிப்பு, பட்டினி, பஞ்சம் போன்ற கொடுமைகள் ஆங்காங்கே சில இடங்களில் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. இக்கொடுமைகள் முற்றிலும் தடுக்கப்பட வேண்டுமெனில், மக்களும் மக்களை ஆளுபவர்களும் அறத்தினைக் கடைப்பிடிக்கவும் அதற்குரிய மதிப்பினை அளிக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் நாடும் நாட்டு மக்களும் மேன்மைபெற முடியும். இதுபோன்று இன்னுமுள்ள பல கருத்துக்களையும் சங்ககாலப் புலவர்கள் சங்க இலக்கியங்களில் அழகுறப் பதிவு செய்துள்ளனர். புறானூற்றுச் செய்யுட்களில் எவ்வாறு அறக்கருத்துக்களை அழகுறக் கையாண்டுள்ளனர் என்பதை நோக்கமாகக் கொண்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நூல் அறிமுகச் செய்தி**

சங்க இலக்கயத்தில் எட்டுத்தொகை நூற்களில் இறுதியாக இடம்பெறுவது புறநானூறு. புறம் + நானூறு = புறநானூறு. புறம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதால் இப்பெயர் பெற்றது எனலாம். பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவபெருமானைப் பற்றிப் பாடிய கடவுள் வாழ்த்தோடு மொத்தம் 401 பாடல்களைக் கொண்டதாகப் புறநானூறு காணப்படுகின்றது. 267, 268 ஆகிய இரண்டு பாடல்கள் முற்றிலுமாகக் கிடைக்கவில்லை. இந்நூல் நான்கடிச் சிற்றெல்லையும் நாற்பது அடிப் பேரெல்லையையும் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. இதனைப் புறம் என்றும் புறப்பாட்டு என்றும் அழைப்பர். இதனை மொத்தம் 158 புலவர்கள் பாடியுள்ளனர். 160 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர் அறியப்படவில்லை. 1984-இல் 266-பாடல்களின் பழைய உரையுடன் சேர்த்து உ.வே.சா வெளியிட்டார். இதன்பின்னர் ஔவை துரைசாமிப்பிள்ளை நூல் முழுவதற்கும் உரையெழுதி வெளியிட்டார் என்று அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். புறநானூற்றிலுள்ள சிறந்த 55 பாடல்களை ஒன்றாகத் தொகுத்துப் 'புறப்பாட்டுரை' என்னும் பெயரில் 1976-இல் இரா.தெய்வசிகாமணி பதிப்பித்தார்.

சொற்றொடர்களாலும், ஊர்ப்பெயர்களாலும், தந்தை பெயராலும், தொழில் பெயரோடும் மரபுப் பெயரோடும் சேர்ந்த்து புலவர்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. அகத்திணை ஐந்திணைகளைப் பற்றி அமைந்தது போன்று புறநானூறு, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற புறப்பொருள் கருத்துக்களைச் சார்ந்து விளங்குகின்றது. ஒவ்வொரு பாடலின் இறுதியில் திணை,துறை, பாடினோர், பாடப்பட்டோர், பாடல் பாடப்பட்ட சூழ்நிலை போன்ற குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

**புறநானூறு வீரயுகக்காலம்**

சங்ககால மக்களின் அரசியல், வீரம், கொடை, ஆடை, அணிகலன், படைக்கருவிகள், வாணிபம், கலை, கல்வி, பழக்க வழக்கங்கள், இருப்பிடங்கள், உணவுகள், சகுனங்கள், நிமித்தங்கள், வரலாற்றுக் குறிப்புக்களையும் இப்புறநானூற்றில் புலவர்கள் கற்பனையின்றி இயல்பாகக் காட்சிப்படுத்தியுள்ளனர். வீரமிக்க ஆண்களும், பெண்களும் வாழ்ந்த காலம் இப்புறநானூற்றுக் காலம். இக்காலத்தில் பெண்கள் தன் தந்தையையும், சகோதரனையும், கணவனையும் போரில் இழந்த பின்பும் பால்மணம் மாறாதத் தன் பச்சிளம் குழந்தைக்கும் வேல் கொடுத்துப் போருக்குச் செலுத்துகின்ற வீரயுகக் காலமாக காணப்படுகின்றது.

**மன்னர்களின் கொடையும் போர் அறமும்**

மன்னனிடம் இரந்து செல்வோர்க்கு யானையையும், குதிரையையும், மண்ணையும், பொன்னையும், பணத்தையும், தன்னுடைய நாட்டையும், தன்னையும் பரிசாகக் கொடுத்திருக்கின்ற

மன்னர்களின் கொடைத்தன்மையினைப் புறநானூற்றுப் பாடல்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. இதுமட்டுமல்லாமல் அரசர்களுக்கும் புலவர்களுக்குமான நட்பையும் பாங்குற இந்நூலில் காணமுடிகின்றது. இத்தகைய சிறப்பினையுடைய புறநானூற்றில் சங்ககால மன்னர்கள் போர் செய்வதிலும் போர் அறத்தினைக் கடைப்பிடித்துள்ளனர். இதனை,

**"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்**
**தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்**
**பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,**
**எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்' என**
**அறத்து ஆறு நுவலும்." - புறம்.9:1-6.**

என்னும் பாடலடிகளின் வழி உணரலாம் . இவ்வடிகளில் பசு, பார்ப்பனர், பெண்கள், நோய்வாய்ப்பட்டோர், புதல்வர்களைப் பெறாதவர் போன்றோர்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமான அறிவிப்புச் செய்கின்ற போர் அறத்தினைக் காணமுடிகின்றது. சங்ககாலத்தில் மனித உயிர்களுக்கு மட்டுமின்றி, பிற உயிரினங்களுக்கும் மன்னர்கள் மதிப்பளித்துள்ளனர் என்பதை உணர முடிகின்றது.

மக்களைப் போரிலிருந்து முறைப்படி காக்கின்ற மன்னனை இறைவனாக மக்கள் போன்றுவர் என்பதனைத் திருவள்ளுவரும்,

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு,**
**இறைஎன்று வைக்கப்படும்." - குறள்.388.**

என்று கூறியுள்ளார் என்பதன் வழி போர் அறம் தொன்மையான அறமாகக் கடைபிடிக்கப் பட்டு வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

**குழந்தைப்பேறறம்**

ஒருவன் உயர்வாக நினைக்கக்கூடிய செல்வங்கள் பணம், பொருள், சொத்து வைத்திருந்தாலும், இன்றைய சமுதாயத்தில் அவனுக்குக் குழந்தைச் செல்வம் இல்லையென்றால் சமூகமும் உறவுகளும் மதிப்பளிக்காது. ஆகையால், செல்வங்களில் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம் என்பதைச் சங்க இலக்கிய நூல்களிலுள்ள புறநானூறு சான்றுபகர்கின்றது. இதனை,

**"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப் பெருஞ் செல்வர் ஆயினும், இடைப் படக்**
**குறுகுறு நடந்து, சிறு கை நீட்டி,**
**இடம், தொட்டும், கவ்வியும், துழந்தும்.**
**நெய்யுடை அடிசில் மெய் பட விதிர்த்தும்,**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக் குறை இல்லை – தாம் வாழு நாளே." – புறம்.188.**

என்னும் பாடல் விளக்குகின்றது. ஏழு அடிகளில் உலக அறத்தினை பாண்டியன் அறிவுடை நம்பி அழகாக எடுத்துரைக்கின்றார்.

செல்வங்களில் சிறந்ததும், செல்வங்களுக்கெல்லாம் முதன்மையானதுமான செல்வம் செவிச்செல்வம் என்று கூறுகின்ற திருவள்ளுவர், 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில் ஒருவன் பெறக்கூடிய பேறுகளுள் சிறந்தது குழந்தைப்பேறு தான் என்பதனை,

**"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற." - குறள்.61.**

என்னும் இக்குறளடிகளின் வாயிலாகத் திருவள்ளுவரும் அறத்தினை உணர்த்துகின்றார்.

**ஒழுக்க அறம்**

புறநானூற்றில் ஔவையார் நிலத்திற்கென்று தனிமதிப்பில்லை, அந்நிலத்தில் வாழுகின்ற மனிதனின் ஒழுக்கமே அந்நிலத்தின் ஒழுக்கமாக அமையும் என்று கூறும் அறக்கருத்தினை அறக்கருத்தினை,

**"நாடாகொன்றோ காடாகொன்றோ**
**அவலாகொன்றோ மிசையாகொன்றோ**
**எவ் வழி நல்லவர் ஆடவர்,**
**அவ் வழி நல்லை வாழிய நிலனே!" - புறம்.187.**

எனும் புறப்பாடல் எடுத்துரைக்கின்றது.

திருவள்ளுவரும் ஒழுக்க அறமே இவ்வுலகத்தில் சிறந்தது. தனிமனிதனின் நன்மைக்கும் உலக நன்மைக்கும் ஒழுக்கம் என்பது முக்கிய இடம் வகிக்கின்றது. ஒழுக்கமானது ஒருவனுக்கு உயர்வைத் தருவதாகும். இந்த உயர்வைத் தருகின்ற ஒழுக்கமானது விலைமதிக்கமுடியாத உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும் என்பதனை,

**“ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.”** – குறள்.131.

எனும் குறளில் பதிவு செய்துள்ளார்.

**ஈதல் அறம்**

ஒருவரிடம் செல்வம் அதிக அளவில் இருந்தால், அச்செல்வத்தைத் வறுமையிலுள்ள தன் சுற்றத்தாருக்கும், பிறருக்கும் கொடுத்து உதவவேண்டும். அப்போதுதான் அவனிடம் செல்வம் பெருகும். கொடுத்து உதவுவதால் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் அறம், பொருள், இன்பம் கிடைக்கும் என்பதனை,

**“தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி**
**வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,**
**நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்**
**கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**
**உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே**
**செல்வத்துப் பயனே ஈதல்;**

**துய்ப்போம் எனினே, தப்புந பலவே.”** புறம்.189:1-8

இப்புறநானூற்றுப் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. மன்னனாக இருந்தாலும் வறியோனாக இருந்தாலும் உண்ணுவது நாழித் தானியம் மட்டுந்தான். அதுபோல உடுப்பதும் கீழாடை, மேலாடை என்ற இரண்டாடைகள்தான். அதனால், அதிகம் செல்வம் பெற்றிருப்பதன் பயன் பிறருக்குக் கொடுத்து உதவுதல் என்ற அறத்தினை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் அழகுற எடுத்துரைக்கின்றார்.

உலகில் வாழும் மனிதன் அனைத்தையும் தானே வைத்துகொள்ளாமல், பிறருக்கும் கொடுத்து உதவவேண்டும் என்று திருவள்ளுவரும் மக்களுக்கு அறிவுறுத்துகின்றார். அவ்வாறு, கொடுத்து உதவினால் ஒருவன் பெறக்கூடிய புகழில் உயர்வான புகழைப் பெறுவான் என்பதை,

**“ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது**
**ஊதியம் இல்லை, உயிர்க்கு.”** – குறள்.131.

என்பதன்வழி வள்ளுவர் சான்றுபகர்கின்றார்.

**வரி வாங்குவதில் அறம்**

ஒரு மன்னன் மக்களிடம் வரிவாங்குவதிலும் அறத்தினைக் கடைப்பிடித்தல் வேண்டும். அவ்வாறில்லாமல், மக்களைத் துன்புறுத்தி வரி வாங்கினால் அந்நாடும் மன்னனும் மக்களும் விரைவில் கெட்டுப்போவார்கள். இச்செய்தி உலகம் அறிந்த உண்மை. இதனை,

**“காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே**
**மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்**
**நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,**
**வுாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்**
**அறிவுடை வேந்தன் வெறி அறிந்து கொளினே,**
**கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்**
**மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,**
**பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,**
**யானை புக்க புலம் போல,**

**தானும் உண்ணான், உலகமும் கெடுமே.”** புறம்.184:1-11.

என்னும் புறநானூற்றுப்பாடல் விளக்குகின்றது. முறை அறிந்து வரிவாங்கக்கூடிய மன்னனை இந்த உலகத்தில் மக்கள் உயர்வாக மதிப்பார்கள். அந்த மன்னனும் உயர்வடைவான். நாடும் வளம்பெற்றுச் சிறக்கும் என்ற அறக்கருத்தினை நீதி வெண்பா கீழக்காணுமாறு எடுத்துரைக்கின்றது.

**“குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா**

**மடிகொன்று பால்கொளலும் மாண்பே**

**குடியோம்பிக்**

**கொள்ளுமா கொள்வோர்க்குக் கோண்டுமே**

**மாநிதியம்**

**வெள்ளத்தின் மேலும் பல.” நீதி வெண்பா.**

தன் நாட்டிலுள்ள மக்களைத் துன்புறுத்தி அடிக்கடி வரிவாங்குகின்ற மன்னனை வள்ளுவர் கள்வனுக்கு ஒப்பாக உவமை கூறுகின்றார். இந்த நடப்பியல் உண்மையினை,

**“வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**

**கோலொடு நின்றான் இரவு.” - குறள்.552.**

என்னும் குறள் வழி அறியலாம். ஆதலால், அறம் சார்ந்த நல்ல நூற்களை நமது வாழ்க்கையில் கற்றால் மட்டும்போதாது. கற்ற அறத்தினை அவரவர் வாழ்க்கையில் கடைப்பிடித்தல்வேண்டும். இதனைத்தான் திருவள்ளுவர்,

**“கற்க கசடற கற்பவை கற்றபின்**

**நிற்க அதங்குத் தக. ” - குறள்.552.**

என்று கூறுகின்றனார்.

புறநானூறு பற்றிய பொதுவான செய்திகள் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. போரின்போது கூட மன்னர்கள் அறத்தினைக் கடைப்பிடித்திருக்கின்ற நன்நெறியைக் காணமுடிகின்றது. ஒருவன் பெறக்கூடிய பேறுகளில் சிறந்தபேறு குழந்தைப்பேறுதான் என்பதைப் புறநாநூறும் திருக்குறளும் வலியுறுத்துகின்றன. ஒழுக்க அறமே சிறந்தது, உயர்வைத் தருவது என்ற நீதிக்கருத்தினை புறநானூற்றுப்பாடலும் குறளும் நிலைநாட்டுகின்றன. பிறருக்குக் கொடுத்து உதவுகின்ற ஈதல் அறமே உயர்ந்தது என்கிற அறத்தினைப் புறநானூறு எடுத்துரைக்கின்றது. இந்நூல் கூறுகின்ற கருத்திற்கு வலுச்சேர்க்கின்ற விதமாகத் திருக்குறளும் சான்றுபகர்கின்றது. அதனால், பணம், பொருள், சொத்து மீது ஆசை கொண்டு அறத்தினின்று வழுவாமல், ஒழுக்க அறத்தில் சிறந்து நாம் நிற்கவேண்டும். இளைய தலைமுறையினருக்கு நாம் முன்னோடியாக வாழ்ந்து காட்டவேண்டும். அப்போதுதான் இன்றைய சமூகத்தில் இளைய தலைமுறையினரும் அறத்தின்பால் செல்வர். நாடு சிறந்து விளங்கும். நாட்டில் பல குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு இவ்வறங்களே காவலாக அரண் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

# பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் அறம்

***க.நர்கீஸ்,** முனைவர் பட்ட ஆய்வாளர், புதுவைப் பல்கலைக் கழகம், புதுவை – 14.

சித்தர்கள் தனது பாடல்களில் கடவுள் பத்திமை குறித்த வழிகாட்டுதல்களில் அதிகம் ஈடுபாடு கொள்வதில்லை. அவற்றுள் அறம் உரைக்கும் பகுதிகள் பல உள்ளன. சித்தர்கள் மாந்தர்க்குரிய உறுதிப் பொருட்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பன. அறவினை இன்பம் தரும். தன்னலமும் அகப்பற்றும் புறப்பற்றும் விட்டார் அறச்செயல்களை மனமொழி மெய்களால் பின்பற்றி அறநெறிகாட்டி மக்கள் உய்ய வழிகாட்டுவர்கள் சித்தர்கள். இடம், காலம், சூழல் அறிந்து அறம் செய்வோம் என்று எண்ணாமல் வாய்ப்பு கிடைக்கும் போதேல்லாம் நல்ல அறச் செயல்களைத் தள்ளிப் போடாமல் நாள்தோறும் செய்ய வேண்டும். அப்பொழுது செய்த அறம் அழியும் நேரம் வந்த போது அழியவிடாமல் மரணமிலாப் பெருவாழ்வு தரும் அழியாத் துணையாகும். ‘தருமம் தலைகாக்கும்’ என்பது பழமொழியாகும். சித்தர்கள் மத, சாதி வேற்றுமைகளை வெறுக்கின்றனர். மக்களைப் பிரிக்கும் மாயையாகிய இச்சாதியை ஒருமித்த குரலோடு சித்தர்கள் தாக்குகின்றனர்கள். இப்பிரிவினையை மிகுதிப் படுத்துவது சாத்திரம், சடங்கு, மதம், மொழி போன்றவையாகும். சாதியினால் தீமையே தவிர நன்மை ஏது? சாதி - சாதிக்குள் - சாதி எனத் தம்மைத்தாமே பகுத்து பகைமையும் பிரிவினையும் வளர்த்துக் கொண்டே செல்கிறான் மனிதன்.

‘தானத்தில் சிறந்தது அன்னதானம்’ என்பார். பசி போக்கும் அறத்தைப் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்பது இல்லை தினமும் சாப்பிடும் வேளையில் ஒரு கைப்பிடி உணவு தானம் செய்தாலும் போதுமானது.சித்தர்கள் அனைவரும் செய்யக் கூடிய எளிமையான அறத்தைக் கூறுகின்றனர். உண்பதற்கு முன் இறைவனைப் பக்தியுடன் பத்திர வாயிலாக வில்வம், துளசி, வேம்பு ஆகியன இட்டு வழிபடுவதும் பசுவுக்கு ஒரு வாயளவு புல் கொடுத்தலும் நன்மைப் பயக்கும். வாழ்க்கையின் நோக்கம் இன்பம், இல்லறம், துறவறம் என்பவை அறத்தின் வழியில் இயங்க வேண்டும். இல்லிருந்து அறவழியில் செல்வது இல்லறம். இவ்வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். பாம்பாட்டிச் சித்தரின் கொள்கைகளை அறிந்து கொள்ள அவர் பெயரில் வழங்கும் 129 தனிப்பாடல்களே துணையாக உள்ளன. இவர் பாடல்களில் குரு வணக்கம், சித்தர் வல்லபம், பொருளாசை விலக்கல், பெண்ணாசை விலக்கல், உடலின் குணம், அகப்பற்று நீக்கல் என்றெல்லாம் பாடியுள்ளார்.

இறைவனின் திருவடியை அடைய உதவும் நெறிகளில் ஒன்று யோக நெறியாகும். பாம்பாட்டிச் சித்தர் காடு, மேடு எல்லாம் சுற்றி திரிந்து பல வகையான பாம்புகளுடன் வாழ்ந்து வந்தால் இவரை பாம்பாட்டிச் சித்தர் என்று அழைத்து இருக்கலாம். இது காரணப் பெயர் அன்றி இயற்பெயர் அல்ல. ஒரு சமயம் ஊரில் உள்ள சித்த வைத்தியர்கள் இவரைத் தேடி வந்து பார்த்து சித்தர் பெருமானே மருத்துவ ஆய்வுக்கு நாக மாணிக்கம் என்ற ஆபூர்வ பாம்பு தேவை என்று கூறினார்கள். அந்த பாம்பினை பல காடுகளில் தேடி திரிந்து பின்பு கம்பளி சட்டை முனி என்பவரை சந்தித்து தீட்சைப் பெற்றார். தன் குருவாக ஏற்றுக் கொண்டார். உனக்குள் இருக்கும் பாம்பினை நீ வெளியே எங்கு தேடினாலும் கிடைக்காது. உனக்குள் தூங்கிக் கொண்டு இருக்கும் பாம்பு என்னும் மூலாதாரத்தினைத் தட்டி எழுப்பி படம் எடுத்து ஆடுபாம்பே என்று கூறினார்.

**யோகம்:**

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளில் யோகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. “நாதர் முடி மேலிருக்கும் நாகப் பாம்பே நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே” என்று பாம்பை முன்னிலைப்படுத்தி மனிதனுக்குள் குடிக்கொண்டு இருக்கும் மூலாதாரத்தினைத் தட்டி எழுப்பிசரஸ்ராரம் என்பதை அடைந்து வெட்டவெளியை கடந்து தனது ஆன்மாவை வெளிக் கொணர வேண்டும். குண்டலினி சக்தி தான் பாம்பாக உருவகம் செய்யப்பட்டது. அது சித்தர்களின் தலை வரை வரும். சித்தர்கள் விரும்பும் படி பல யோகச் சக்திகளைப் பெற்றனர். அட்டாங்க யோகத்தின் இறுதி நிலையாகிய சமாதி நிலை அடையும் போது குண்டலினி சக்தி மேலேறும். குண்டலினி என்னும் பாம்பு வலையில் புகுந்து தலை மட்டும் மேலே எழுந்து இடங்கலை, பிங்கலை, சுழுமுனையோடு குண்டலினி சக்தி ஒன்றியிருக்கும். மூலாதாரத்தில் சிவன், சக்தி, திருமால் மூன்றும் வட்டமாக அரை மடங்கு உயரமாகவும் இருக்கும். “குண்டலினி யோகம் என்றால் ஏதோ கடுமையான தவம் என்ற கருத்து

நிலவுகிறது. பெயரைக் கேட்டதும் பயந்துவிடக் கூடாது. எண்ணத்தை ஒழுங்கு படுத்துவதுதான் குண்டலினி யோகம். இதை ‘மனவளக்கலை’ என்று தமிழில் குறிப்பிடுகின்றார் ஸ்ரீ வேதாத்ரி மகரிஷி. இதற்கு மந்திர உச்சாடனம் தேவையில்லை விக்கிரகத்தை வைத்து வழிபட வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. கால் என்பது காற்று. நான் காற்றை இடகலை, பிங்கலை, சுழுமுனை என்று நெறிப்படுத்தினால் உயிர்க்குத் தீமை வராது. மூலாதாரக் கனலை தலை உச்சியில் ஏற்றி இறைவன் அருட்பேற்றுக்குப் பாத்திரமாதல் வேண்டும். ஐம்பொறி ஆசை அடங்கின் அமுதம் பெறலாம். இறைவன் அருள் ஏழு பிறவித் துயரும் நீக்கும். இறைவன் அருட்குடை நிழலில் ஆன்மாக்கள் துன்பம் நீங்கி இன்பம் பெறுக. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூராகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் இந்த ஏழு ஆதாரங்களையும் வறட்சியுறாமல் காத்தல் வேண்டும். இதில் சகஸ்ராரம் மிக முக்கியமான சக்கரம் இது தலையில் உள்ளது. இந்த ஏழு சக்கரங்களும் முறையே ஏழு உலகங்களைக் குறிப்பன. அவ்வுலகங்கள் பூர், புவ, சுவர், மஹா, ஜன, தபோ, சத்யம் என்பன.

**சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்**
**சங்கரனுக்கு அபரந் தானு மாகினாய்**
**மந்திரத்திற்கு அடங்கினாய் மண்டல மிட்டாய்**
**வளைந்து வளைந்துநின் றாடு பாம்பே (24)**

நமது உடல் பத்து நாடிகள், பத்து வாயுக்கள், ஏழு தாதுக்கள் இவைகளால் கட்டப்பட்டது. இவ்வுடல் என்னும் மரக்கப்பல் நம் உடலை தடுமாற்றம் இல்லாமல் ஒரே இசைவாகக் கப்பலை வாழ்க்கை என்னும் பயணத்தில் செலுத்த வேண்டும் என்றால் யோகம் முறையை கையாள வேண்டும்.

**பொருளாசை விலக்கல்:**

உடல் என்னும் பெயரே உழல்தல் துன்புறுத்தலுக்கு உரியது என்பதை விளக்குகிறது. உடல் மண்ணில் விழுந்து விட்டால் மனிதன் பிணம் ஆகிறான். மரணம் உணர்த்தும் நிலையாமை பற்றிய உண்மை மிகவும் பெரியது. உடலை விட்டு உயிரானது பிரிந்து போன பிறகு அப்பொருள்களால் ஆகக் கூடிய பயன்தான் என்ன? நாடு, நகரம், செல்வம், வீடு,மாணிக்கம், தோள் வளையல், மார்பில் தொங்கும் பதக்கம், பொன் மாலை, முத்துமாலை, பொற்கடகம் இவையனைத்துமே அழியும் பொருள்கள் தான். பஞ்சனையில் உறங்கி முக்கனிகள் சுவை மிகுந்த உணவு பண்டங்களை உண்டு வாழ்ந்து எமன் நம் உயிரைப் பறிக்க வரும் போது நம்மோடு கூட எதுமோ வராது.

**நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்**
**நடுவன் வரும் பொழுது நாடி வருமோ (40)**
**ஆணிப்பொன்முத் தாரம்மபொன் அந்த கடகம் (42)**
**பஞ்சனையும் பூவணையும் பாய ரும்வெறும் (45)**
**முக்கனியும் சர்க்கரையும் மோத கங்களும் (46)**

**உடலிழிவு:**

பெண்களின் கவர்ச்சியில் மன உறுதியை இழக்கக் கூடாது. அவர்கள் பால் செல்லும் மனதை அடக்கி நன்னெறியில் நடத்தல் வேண்டும். இறைவனால் உருவாக்கப் படும் இந்த உடல் உடைந்துபோன பின்பு ஒட்டினாலும் ஒட்டாது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒன்று சேர்ந்து அந்த பெண் ஈரைந்து மாதம் ஒரு கருவை சுமந்து பக்குவமாய் இறக்கி வைத்தாலும் அரைக் காசுக்கும் பயன்படாது. சீழ், மலம், இரத்தம், கொழுப்பு ஆகியவை சேர்ந்து துர்நாற்றம் வீசும் இந்த உடலாகிய குடம் உடைந்தால் நாயும், நரியும், பெரிய பேயும், கழுகும் இது நம் உணவு என்று தின்று விடும். சிக்கும் துர்நாற்றமும் கொண்ட பெண்களின் கூந்தலைச் செழுமையான மேகம் என்றும் பெண்களின் வாயிலிருந்து ஒழுகும் எச்சிலை நல்ல அமுது என்றும் சளியுள்ள மூக்கை நல்ல குமிழம்பூ என்றும் கூறுவார்கள்.

**சிக்குநாறுங் கூந்தலைச் செழுமை மேகமாய் (54)**
**வாய்நாறும் ஊழல் மயிர்ச்சிக்கு நாறிடும் மையிருங்கண்**
**பீநாறும் அங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய் (பட்டினத்தார் 116)**
**சீயும் மலமும் செறிசெந்நீரும் நிணமும் (63)**

**மூடப்பழக்கங்களைச் சாடுதல்:**

சமுதாயத்தில் புரையோடி இருக்கும் சமய வேற்றுமை, சாதி, சடங்கு, சாத்திரம், மதம் போன்றவைகள் மக்களுக்கே தவிர சித்தர்களுக்கு அல்ல. மக்கள் தங்களை சாதி வாரியாக முழுமையாக பிரித்துக் கொண்டு வாழ்கிறார்கள். இந்த சாதியினர் இந்த இறைவனை தான் வணங்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் அடிப்படையாக தோன்றிவிட்டது. மக்கள் சாதிகளின் பெயரால் நிகழ்கின்ற கொடுமைகளைப் பார்க்கின்றோம். இந்த நிலைகளை நன்குணர்ந்து இதனை விட்டொழியுங்கள்.

**சமயபேதம் பலவான சாதி பேதங்கள்**
**சகத்தோர்க்கே யல்லாதுசற் சாதுக் களுக்கோ**
**சிமயத்தில் ஏறினபேர் சித்தம் மாறுமோ**
**சித்தர்சித் தாந்தம் தேர்ந்து ஆடாய்பாம்பே (99)**

**பழமொழி:**

உவமையைப் போலவே பழமொழிகளும் பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றன. பேச்சு வழக்கில் இருக்கும் மிகச் சாதாரண பழமொழிகள் மனிதனின் அறநெறியை விளக்கும் விதமாக அமைகிறது. மனிதன் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் வகையிலும் இவரது பாடல்கள் அமைந்துள்ளது.

**எள்ளில் எண்ணெய் போல உயிர் எங்கும் நிறைந்த (4)**
**ஒயில்கண்டே இலவுகாத் தோடுங் கிளிபோல் (50)**
**பரியாசம் போலவே கடித்த பாம்பு (62)**
**காய்ந்தமரம் அதுமிக்க கல்லடிப்படும் (66)**
**தாமரையின் இலையினிலே தண்ணீர் தங்காத (70)**
**சேற்றில்திரி பிள்ளைப்பூச்சி சேற்றை நீக்கல்போல் (73)**
**எண்ணெய்க்கும் தண்ணீர்க்கும் தொந்தம் இல்லாவாற (74)**
**சூரியனைக் கண்ட பனிதூர ஓடல்போல் (90)**
**ஏட்டுச்சுரைக் காய்கறிக்குஇங்கு எய்தி டாதுபோல் (94)**

**கடவுள் கொள்கை:**

பதியெண் சித்தர்கள் என்பது பதி ஆகிய இறைவனின் திருநாமத்தைக் குறிக்கும். எள்ளில் எண்ணெய் மறைந்து இருப்பது போல நம் உடலில் மறைந்து இருக்கும் இறைவனைக் கண்டு தெளிந்து திருவடியை அடைதல் வேண்டும். இறைவன் எல்லாப் பொருட்களிலும் இணைந்தே நிற்கிறான். சித்தர்கள் பாமர மக்களும் எளிதில் மனதில் பதியும் பாடி இருக்கிறார்கள். சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் என சமய வேறுபாடு சமயத்தத்துவத்திலோ பக்தியிலோ இல்லை எனலாம். இறைவனை அணுகும் முறையிலும் பக்தியை வெளிப்படுத்தும் முறையிலும் தான் வேறுபாடு காணப்படுகின்றன. இறைவனை காண வேண்டும் என்ற துடிப்பு பக்தி நெறியாளர்களிடம் காணப்படுகின்றன. இறைவனை கண்டு உணர்ந்து ஞானத்தைப் பெற்றவர்கள் சித்தர்கள். சித்தர்கள் மனம் என்னும் பேயை அடக்கி யோகப் பயிற்சியினால் இறைவனை தன் கண் முன்னே பார்க்கிறார்கள் ‘உள்ளம் பெருங்கோவில் ஊன் உடம்பு ஆலயம்’ என்று திருமந்திரத்தில் திருமூலர் பாடுகிறார். தவறு செய்துவிட்டு கோவில் கோவிலாகப் போய் இறைவனை வணங்கி வழிபட்டாலும் நம் கர்ம வினைகள் என்று அகலாது.

**நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்**
**நாளும்கழு வினும் அதன்நாற்றம் போமோ**
**கூறுமுடல் பலநதி யாடிக் கொண்டதால்**
**கோண்டமலம் நீங்காது என்று ஆடாய்பாம்பே (65)**

நாற்றம் எடுக்கும் மீனைக் கழுவினாலும் அதன் நாற்றம் போவதில்லை. நல்ல தூய்மையான நீரில் பலமுறை கழுவினாலும் போவதில்லை. மனிதர்கள் எத்தனை கோவில் குளங்களில் மூழ்கினாலும் அவர்களின் பழி நீங்காது. பாகற்காயைப் புனித நதியில் முழுகி எடுத்தாலும் அதன் கசப்புத் தன்மை என்றும் மாறாது. புனித நீராடினால் பாகற்காய் கசப்புத் தன்மையிலிருந்து இனிப்பு தன்மைக்கு மாறாது. அதுப்போல நாம் நமது அடிப்படைக் குணங்களை மாற்றிக் கொள்ளாமல் எந்த புண்ணிய தீர்த்தத்தில் முழுகினாலும் எந்த கோவிலுக்கோ போனாலும் என்ன பயன் வந்து விடப் போகிறது. மாற்றங்களை மனதில் கொண்டு குணங்களில் வெளிப்படுத்த வேண்டும்.

நாம் பிறவி பெருங்கடலைக் கடக்க வேண்டும் என்றால் இறைவனின் துணை இல்லாமல் ஒரு நொடிக்கூட முடியாது, நாம் செய்யும் கர்ம வினைகளுக்கேற்ப சொர்க்கம், நரகம் என்பதினை அடைந்தே தீருவோம். கல்லாமை, கொல்லாமை, நிலையாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகியன ஒழித்து அறம் என்னும் பாதையில் சென்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ வழிவகை செய்கிறது.

# சித்தர் பாடல்களில் அறநெறிக் கலைச்சொற்கள்

***அ.ஜெய எபினி,** முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி -604 014.

ஒரு மொழி வளர்ச்சி அடைந்த மொழி என்பதை அம்மொழியின் சொல் வளத்தை வைத்தே உறுதிசெய்ய இயலும். சொல் வளர்ச்சி அடையாத மொழிகள் இறந்த மொழியாகும். தமிழ்மொழியின் சொல் வளத்திற்கு ஈடுஇணை இல்லை. தமிழ்மொழியில் உள்ள ஒவ்வொரு இலக்கியத்திலும் பல்வேறு தனித்தமிழ் சொற்கள், கலைச்சொற்கள் உள்ளன. இதில் குறிப்பிடத்தக்க ஒன்று அறநெறிக் கருத்துகள். இந்த அறநெறிக்கருத்துகளைக் கூறுவதற்காக சித்தர்கள் பயன்படுத்தியக் கலைச்சொற்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

அறம் என்பது ஆழ்ந்த பொருளுடையதாகும். சித்தர்கள் அகப்புறவுலக அறவாழ்வைப் பற்றிப் பேசுகின்றன. புறவுலக வாழ்வு என்பது பொருள் சார்ந்த நிலையற்ற வாழ்வாகும். அகவுலக வாழ்வானது மனிதனின் உள்ளுணர்வு சார்ந்த மகிழ்ச்சியானதும் நிலையானதாகும். இவ்விரு உலகயற வாழ்வும் இன்றியமையான ஒன்று. இவற்றை உள்ளடக்கியதாகவே சித்தர்பாடல்கள் அமைந்துள்ளன. மனித வாழ்வில் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளைப் பலவற்றைச் சித்தர்கள் கூறியுள்ளனர். அறநெறித் தொடர்பான கருத்துகளைப் பல்வேறு சித்தர்கள் பாடியுள்ளனர். அவ்வகையில் நல்லோரிணக்கம் பற்றி கடுவெளி சித்தர், பட்டினத்தார் போன்றோர் கூறியுள்ளனர். மேலும் தீயோர் குணம் உள்ளவர்கள் பற்றி காகபுசுண்டர், கடுவெளிச்சித்தர், விளையாட்டுசித்தர், கஞ்சமலைச்சித்தர் போன்றோர் கூறியுள்ளனர். மேலும் சித்தர் பாடல்களில் உள்ள அறநெறிச் சார்ந்த கலைச்சொற்களைச் செய்யவேண்டியவன, செய்யக்கூடாதவை என இரண்டு நிலையில் காணலாம்.

சித்தர் பாடல்களில் செய்யவேண்டியவன குறித்து வரும் கலைச்சொற்கள் பின்வருமாறு. அவை உபதேசம், சைதன்யம்(தூய்மை), சமுசார வியாபாரங்கள்(குடும்ப உறவுகள்), விவேகம், அபரோட்சம்(உயர்ந்த ஞானம்), சுகட்சி(சுகம்), அகட்சி(சுருக்கி), கிருபை(அருள்), வாக்குரையாள், ஓம்பினை(பாதுகாத்தாய்), தமியேன்(தனியவன்), சீலம்(ஒழுக்கம்), ஒக்கம், நன்னீதி, சம்போகம்(பேரின்பம்), ஏகமாய்(ஒன்றாய்), மிகுகளி, மேவும்(கடைப்பிடிக்கும்), நத்துதல்(ஆர்வமுடன்), அளி(இரங்கும் தன்மையுள்ள), பெட்புடன்(கவனமாக), ஆசாரதேசிகர், கட்டறுத்து(ஆசைகளிலிருந்து விலகுதல்), மல்கும், கழறுதல்(புகழ்தல்), திண்ணம், தேசுலவு(மிகப்பெரிய), குற்றேவல்(சிறுபணிகள்), வல்லபம்(அளப்பரிய ஆற்றல்), ஆக்கினை(ஆணை, அதிகாரம்), தண்ணளி(கருணை), கட்புலன்(கண்ணொளி), புத்தி, சூக்குமம், வாணாள், மவுனத்தூன்று, நிறைந்த மதி, விட்ட குறை, ஆசாரம், நேய, அனுட்டானம், ஞானவிழி, நிசம், நிதம், சந்தோடம், நிர்மலம் போன்றவை செய்யவேண்டியன குறித்த கலைச்சொற்களாகும்.

மேலும் செய்யக்கூடாதக் கலைச்சொற்கள் பின்வருமாறு. அவை அவித்தை, ஊனம், மித்தை, ஓம்பற்க(பாதுகாக்காதீர்), தரித்திரம்(வறுமை), கோள்முனைதல், கள்ளவேடம், நண்ணாதே(நெருங்காதே), துன்மார்க்கர்கள், சொற்கடக்காதே, விள்ளாதே, ஏடணை(தீயச்செயல்கள்), தூடணை(பழித்துப் பேசுதல்), மாசுப் புலன்கள், மாயபந்தம், ஆசில்(குற்றமில்லாத), ஆங்காரம், நின்மலம்(அழுக்கற்ற), கள்ளம், கண்டனை(தண்டனை), ஒறுத்தோம், குலவாமல், விள்ளாதே, கசடர், சண்டிமாண்பர், மருட்டி, அஞ்சாத கள்ளன், நிட்டூரன்(கொடுமைக்காரன்), கைசேதம், துரிசு அற(பாவம்நீங்க), புன்மை, மந்தமனம், சிற்றின்பம், காமியம், புல்லறிவு, கூத்துப்பரிதல்(கொடுமைப்படுத்துதல்), கொல்வழி, குறுகுவது, தொல்லை வினை, மட்டிக்குணம் போன்றவை செய்யக்கூடாத குறிக்கும் கலைச்சொற்களாகும்.

அறம் என்ற ஒற்றைச் சொல்லில் பல்வேறு கருத்துகள் அடங்கியுள்ளன. சித்தர் பாடல்களில் அறம் தொடர்பானக் கலைச்சொற்களை வகைப்படுத்தலாம். அவை நிலையாமை, பெண் இழிவு, இறையுணர்வு பெறும் அறம், குடும்ப அறம், சமுதாயம் அறம் மற்றும் சாதி, சமய, சடங்கு, வேத, புராண, சாத்திர எதிர்ப்பு, போலிக்குரு எதிர்ப்பு, கல்வி, முற்பிறவி எதிர்ப்பு, உடலறம் போன்ற பல்வேறு செய்திகளை உள்ளடக்கியுள்ளது.

**நிலையாமை** உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் ஆசைகளால் அவதிப்படுகிறான். மனிதனின் அழிவுக்கு யாக்கை(உடல்), பொருள், இளமை நிலையாமை காரணமாகும். இதனைக் குறித்து திருக்குறள், நாலடியார் போன்ற அறநூல்கள் கூறுகின்றன. அவ்வழியில் சித்தர்களும் நிலையாமை குறித்த பாடல்களைப் பாடியுள்ளனர். நிலையாமை குறித்து வரும் கலைச்சொற்களாக காசாளர்கள்(செல்வம் படைத்தவர்கள்), விடயசுக இச்சை(பொருள்களின் மீது வைக்கும் பற்று), வெறும்பிலுக்காய் (வெறுமையால் ஆடம்பரம் செய்து) அநித்யமல்ல(நிலையானதன்று), வீணாசை(பற்று), போங்காலம்(மரணமடையும் காலம்), நித்யம்(நிலையானது), மன்னே(நிலையாக), அனித்தியம்(அழியும் தன்மை கொண்டது) போன்றவையாகும். மேலும் நிலையாமை குறித்த பல கலைச்சொற்கள் உள்ளன. இதில் உள்ள காசளர்(Cashier) என்ற சொல் பயன்பாட்டில் உள்ளது. போங்காலம் என்ற சொல் பேச்சு வழக்கு சொல்லாகும். மக்கள் இறப்பை நோக்கிப் போய் சேரும் காலத்தை போங்காலம் என்ற பேச்சுவழக்கு சொற்களாகச் சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

**உடல்** என்றும் அழியக்கூடியது என்பதை சித்தர்கள் வலியுறுத்தியுள்ளனர். உடலைக் குறித்து வரும் கலைச்சொற்களான ஊத்தைச் சடலம்(அசுத்தமான உடல்), புற்புதக் குரம்பை(புல்லைப் போன்று அற்பமானதாக இருக்கும் உடல்), உடலுறு வாழ்க்கை(உடலால் வரும் வாழ்க்கை), தேகபந்தம்(உடல்பற்று), கடம்(உடல்), தேகம் உருகுதல்(உடல்இளைத்தல்), அவத்தைசடலம்(துன்பத்தரும்உடல்) போன்றவையாகும். யாக்கை(உடல்) நிலையற்றது என்பதைக் குறிக்க ஊத்தைச் சடலம், புற்புதக்குரம்பை, தேகபந்தம், அவத்தை சடலம் போன்ற கலைச்சொற்கள் குறிக்கும்.

**இறைநெறி** குறித்த செய்திகள் சித்தர் பாடல்களில் உள்ளன. அவற்றை விளக்குவதற்கான கலைச்சொற்கள் உள்ளன. வழுத்தினேன்(வணங்கினான்), மாய்கை, நீள்பதம், நிட்களங்கம்(உருவம் அற்ற) முதலிய கலைச்சொற்கள் உள்ளன. **பெண் இழிவு** பெண்கள் மீது பற்று கொண்டு இருப்பவர்களைச் சித்தர்கள் சாடியுள்ளனர். அவ்வகையில் காமிகள், ஈனர், அற்பசுகம், மைவீழியார் போன்ற பெண்இழிவு குறித்த கலைச்சொற்களைக் கூறியுள்ளனர். பட்டினத்தார் பெண் இழிவு பற்றிப் பாடியுள்ளார். அடுத்ததாக **பொய்குருக்கள்** குறித்த கலைச்சொற்கள் உள்ளன. சித்தர்கள் போலி வேடமணிந்து அலைபவர்களைத் திட்டுகின்றனர். இதனை விளக்குவதாக பல பாடல்கள் உள்ளன. சிவவாக்கியர் அதிகமாக பாடியுள்ளார். காரிய குரு, போலிக்குரு, அவவேடம் போன்ற கலைச்சொற்கள் மூலம் விளக்குகின்றனர். மேலும் இந்த போலி வேடதாரிகள் எவ்வாறு இருப்பார்கள் என்பதை அடையாளங்களுடன் கூறியுள்ளனர்.

**முற்பிறவி எதிர்ப்பு** பற்றி சித்தர்கள் பல பாடல்களில் கூறியுள்ளனர். முற்பிறவி எதிர்ப்பை வெளிப்படுத்தும் கலைச்சொற்கள் பல உள்ளன. அவை தொல்லை வினை(முந்தையப்பிறவிவினை),

பூர்வகர்மம்(கடந்தபிறவிச்செய்கை), பிராரத்வகர்மம்(முற்பிறவி வினை), இகம்பரம்(இம்மை, மறுமை), பரகதி(வீடு பேறு), மன்னிச்சை(வீடுபேறு அடையும் ஆசை), கோள் அறுப்பது, புன்சனனம் போன்றவை உள்ளன. மேலும் சித்தர்பாடல்களில் பல்வேறு அறநெறித் துறைத் தொடர்பான கலைச்சொற்கள் உள்ளன.

சித்தர் பாடல்கள் பெரும்பாலும் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் முறையில் அமைந்துள்ளன. இவை அறநெறித் தொடர்பானத் **தொகைச் சொற்களாக** உள்ளன. அந்த சொற்களின் மையமாக அறநெறிக் கலைச்சொற்கள் உள்ளன. **"உதயச் சுடர்மூன்றும் உள்வீட்டிலே கொளுத்தி"** (பத்திரகிரியார்.பா.147) இவ்வரியில் உள்ள **சுடர்மூன்று** என்பதன் விரிவாக்கம் **காருகபத்தியம், ஆகவநீயம், தட்சிணாக்கினி** போன்றவை குறிக்கிறது. **"தோன்றாசை மூன்றும் தொடர்ந்துவந்து சுற்றாமல்"** (பத்திரகிரியார்.பா.80) இவ்வரியில் ஒவ்வொரு உள்ளத்தில் தோன்றக்கூடிய ஆசைகள் மூன்று உள்ளன. ஆனால் அவை தோன்றக்கூடாது. அவை **மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை** ஆகிய மூன்றாசைகளாகும். இதை **மூவாசை** என்றும் கூறுவார்கள் சித்தர்கள்.

**"ஆமை வரும் ஆள்கண்டு ஐந்தடக்கம் செய்தாற்போல்"** (பத்திரகிரியார்.பா.20) இவ்வரியில் ஒரு மனிதன் உடம்பில் உள்ள ஐந்து உறுப்புகள் அடங்கி ஆள வேண்டும். இல்லை என்றால் அழிவு உண்டாகும். **ஐந்தடக்கம்** என்பன **மெய், வாய், கண், மூக்கு, செவி** போன்றவையாகும். இதனை வள்ளுவர், **ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து**. (குறள்.126) என்கிறார். **பஞ்சமாபாதகங்கள்** என்பது உலகில் எந்த மனிதன் செய்யக்கூடாதப் தவறுகள் உள்ளன. அவை **கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு, பொய்பேசுதல்** என்பன. இதையே "**பஞ்சமா பாதகங்கள் பறந்தே போகும்"** (காகபுசுண்டர்.பா.26) என்கின்றனர். இன்று நடைபெறும் குற்றங்கள் அன்றும் உள்ளதை சித்தர்பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

**"ஊனாறு மில்லையடி – அகப்பேய் ஒன்றையும் நாடாதே"** (அகப்பேய்.பா.58) இப்பாடலில் உள்ள **ஊனாறு-** குற்றமாகிய ஆறு உளப்பகைகள் குறிக்கும். அவையாவன **காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்** என்பன. இதன் தமிழ்ச் சொற்களும் விளக்கம் பின்வருமாறு, காமம் என்பது மிகுதியான ஆசையே காமம் எனப்படும். இது வாழ்வை அழிக்கும். இதுவே துன்பத்திற்கு காரணமாகும். குரோதம் என்பது கோபத்தை அடிப்படையாகக் கொண்ட எதிர்மறை உணர்வாகும். லோபம் என்பது கடுமையான பற்று என்பர். மோகம் என்பதை முறையற்ற வழியில் செல்லும் ஆண் பெண் பால் ஏற்படும் பாலுணர்வாகும். மதம் என்பது நான் என்னும் ஆணவம் உடையது. என்னை வெல்ல யாராலும் முடியாது என்னும் தற்செருக்கு. மாச்சரியம் என்பது பழிவாங்க வேண்டும் என்னும் வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மை. இதனை உட்பகை என்றும் கூறுவர். (தமிழ்பிரியன். பக்.238)

**"அகங்கார மாடுகள் மூன்றும் அகற்றிவிடு கோனே – நாளும்**
**அவத்தையெனும் மாடதைநீ அடக்கிவிடு கோனே! (இடைகாடர்.பா.115)**

இப்பாடலில் வரும் **அகங்கார மாடுகள்** மூன்று என்பவை மனதில் பற்றி இருக்கும் மூன்று அழுக்குகளான **ஆணவம், கன்மம், மாயை** என்பன. மேலும் இதனை மும்மலம் என்றும் கூறுவர். அடுத்ததாக **அவத்தைகள் ஐந்து**ம் அவற்றைப் பற்றிய விளக்கம், சாக்கிரம் என்பது விழிப்புநிலை, சொப்பனம் என்பது கனவு, சுழுத்தி என்பது உறக்கநிலை, துரியம் என்பது பேருறக்கம், துரியாதீதம் என்பது உயிர்ப்பு அடங்கிய நிலையாகும். "**மும்மலம் நீக்கிட முப்பொறிக்கு எட்டாத முப்பாழ் கிடந்ததாம் அப்பாழை"**(இடைக்காடர்.பா.9) இப்பாடலில் வந்துள்ள **முப்பொறி** என்பது **மனம், வாக்கு, உடல்** போன்றவை குறிக்கும்.

இதற்கடுத்தாக இடைக்காடனார் பாடலில் **"பஞ்சவிதமாய்ச் சஞ்சலம் பறக்கப்"** (பா. 6) இதில் பஞ்ச சஞ்சலம் என்பது ஐந்து விதமான துன்பங்களான **வறுமை, பஞ்சம், நோய், முதுமை, இறப்பு** போன்றவையாகும். ஒருவர் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் பற்றி உள்ளது. **அந்தகரணம்** - "அந்தக் கரணமெ னச்சொன்னால் ஆட்டையும்" (இடைக்காடனார்.பா.26) ஒருவர் வாழ்வில் நீங்க வேண்டிய கரணங்கள் பற்றிக் கூறுகிறார். இதனை **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** போன்றவை சேர்ந்ததே அந்தக் கரணங்கள் ஆகும். இவைப்போலவே இன்னும் பல அறச்நெறித் தொகைக் கலைச்சொற்கள் சித்தர் பாடல்களில் காணப்படுகின்றன.

இவைப்போன்று சித்தர்பாடல்களில் பல்வேறு அறநெறிக் கலைச்சொற்கள் உள்ளன. இவற்றில் வடமொழிச்சொற்கள், பேச்சுமொழிச் சொற்கள் உள்ளன. மேலும் நம்மிடையே புழக்கத்தில் இல்லாத சொற்களும் உள்ளன. அவற்றை அறிந்து இக்காலத்திற்கு ஏற்றவாறு புழக்கத்திற்கு கொண்டு வரஇயலும். தனித்தமிழ்ச் சொற்களான ஏழைமதி, பாழ்நரகம், ஓயாக்கவலை, மனக்காடு, பாழ்மனம், குடிகேடி, கொல்வழி போன்றவையாகும். மேலும் சொகுசு, வேடிக்கை, சாளிகை, சாவடி, போன்ற அயல்மொழிச் சொற்களும் சித்தர் பாடல்களில் உள்ளன. இந்த கலைச்சொற்கள் இன்றும் புழக்கத்தில் உள்ளன. ஆனால் இவை அயல்மொழிச் சொற்களாகும். இவற்றை வேரறுத்துவிட்டு தனித்தமிழ்ச்சொற்களாக மாற்றி கலைச்சொற்களாக பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மொழி வளமை பெறும்.

**துணைநூற் பட்டியல்**


1. தமிழ்ப்பிரியன்(உரையாசிரியர்),சித்தர்பாடல்கள் மூலமும்உரையும்,2016,சென்னை:கற்பகம் புத்தகாலயம்.
2. இளமதி சானகிராமன்.க, சித்தர் இலக்கியம், 2007, புதுச்சேரி: சுபம் ஆப்செட் பிரிண்டர்ஸ்.
3. கண்ணதாஸ்.பெ, நட்ட கல்லும் பேசுமோ சித்தர் பாடல்கள்- ஒர் அறவியல் நோக்கு, 2013, சென்னை: தமிழினி பதிப்பகம்.
4. இராமச்சந்திரன்.எஸ்.பி, சித்தர்கள் வரலாறு, 2012, சென்னை: தாமரை நூலகம்.
5. சாமி சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்- தத்துவம், 2016, சென்னை: சந்தியா பதிப்பகம்.

# கடுவெளிச்சித்தரின் அறச்சிந்தனைகள்

***க.விமலா,** முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 14.

மனம் தூய்மையாக இருக்கும் நிலையில் நாம் செய்யும் செயலே அறம். தனி மனிதன் தன் செயல்களை தவறாது சரிவர செய்வதும், தனக்கென்று வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுப்பாகவும் விளங்குகிறது.

அறம் என்ற சொல்லுக்கு "இல்லறம், துறவறம் என்று இருவகையில் பொருள் கொள்ளலாம். இல்லறமாவது கொடுத்தலும் அளித்தலும் கோடலும், இன்மையும், ஒழுக்கமும், புணர்தலும் புணர்ந்தோர்ப் பேணலும் மற்றவையும். துறவறமாவது துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும், அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் பிறவவுமாம்" என்று விளக்கம் அளிக்கிறது அபிதானசிந்தாமணி. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்க வள்ளுவர்

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம் (குறள் 35)**
**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற (குறள் 34)**

என்ற குறள்களின் வாயிலக அறம் பற்றி வளக்குகின்றார்.

"மனிதனின் நடத்தை பற்றிய ஆய்வைத் தமக்குரிய பணியாக அமைத்துக் கொண்ட பிரிவுக்கு அறஇயல் (Ethies) என்று பொருள். அறிவு, விருப்பம் ஆகியவற்றைப் பண்பட நிறுத்திய துறைகளைப் போலவே அவனுடைய நடத்தையைச் செம்மை செய்து வளமைப்படுத்தும் துறையே அறவியல்."

"தனி மனிதன் தன்வாழ்வோடும் சமூக வாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு வாழும் நிலையில், காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, செய்ய வேண்டியவற்றை செய்யவும் நீக்க வேண்டியவற்றை நீக்கவும் தேவையான செயல் அறிவைத் தருவது அறவியல்" என்று வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது.

சித்தர் பாடல்கள் பெரும்பான்மையும் அறக்கருத்துக்களை உள்ளடக்கிய களஞ்சியங்களாகவே திகழ்கிறது. அவ்வகையில் கடுவெளிச் சித்தர் தாம் பாடியுள்ள 35 பாடல்களும் அறத்தை வெளிப்படுத்தும் பெட்டகமாக அமைகின்றது. இவர் பாடல்கள் வழி வெளிப்படும் அறக்கருத்துக்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மனம்தான் ஒரு மனிதனின் அனைத்து செயல்களுக்கும் அடிப்படையாய் அமைகிறது. அத்தகைய மனத்தை அடக்கி நல்ல நெறியில் செலுத்தினாலே மனிதன் நற்கதியை அடைவான் என்கின்றனர் சித்தர்கள்.

மனதளவிலும் கூடப் பாவத்தை நினைக்காமலும், செயலளவில் அதனைச் செய்யாமலும் எப்பொழுதும் கோபம் கொள்ளாலும் இருப்பாய் மனமே என்கின்றார் கடுவெளிச்சித்தர். ஏனெனில் ஒருவருடைய மனம் திருந்தினால் தான் செயலும் திருத்தமாய் இருக்கும். கோபம் மனிதனுக்கு எழுகின்ற போது கோபத்தின் விளைவு, நன்மை தீமையாகவும் தீமை நன்மையாகவும் மாறுபடுதற்கு காரணமாய் அமையும். அதன்பொருட்டே சித்தர்கள் அனைவரும் மனதினை முதலில் அடக்கி ஆளவேண்டும் என்கின்றனர். இதனையே இவரது பாடலும்,

**பாவஞ்செய் யாதிரு மனமே – நாளைக்**
**கோபஞ்செய் தேயமன்**
**கொண்டோடிப் போவான்**
**பாபஞ்செய் யாதிரு மனமே (கண்ணி – 1)**

என்று இயம்புகின்றது.

ஒவ்வொரு தனி மனிதனும் முதலில் தம்மைச் செம்மை செய்துக் கொண்டால்தான் இந்தச் சமூகம் செம்மை அடையும் என்ற கருத்தில் சித்தர்கள் உறுதியோடுத் திகழ்ந்தனர். இதன்பொருட்டே தனி மனிதனைச் சார்ந்த அறங்களே சித்தர் பாடல்களில் இன்றியமையா இடம் பெறுகின்றன.

"சித்தர்களைப் பொறுத்தமட்டில் ஒழுக்கம் அல்லது அறம் என்பது கடைப்பிடிக்கப்படுவதன்று, ஒழுக்கம் அல்லது அறத்தின் உருவமாகவே மனிதன் உருவாவதாகும்." (பெ.கண்ணதாஸ்- 2013)

சொல்லுதற்கு அரிதாக அமைகின்ற சூது, பொய், மோசம், கஞ்சா, புகை, காமம், வெகுளி, புலன் இன்ப மயக்கம், புகைபிடித்தல், கள் குடித்தல், உயிர்க் கொலை செய்தல் முதலிய செயல்களில் இருந்து மனிதன் விடுபடவேண்டும். தொடர்ந்து செய்வானானால் அது அவனை மட்டும் அன்றி அவனைச் சுற்றியுள்ள சுற்றத்தையும் அழித்துவிடும் என்பதை,

**சொல்லருஞ் சூதுபொய் மோசம் - செய்தால்**

**சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்**

**நல்லபத் திவிசு வாசம் - எந்த**

**நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம் (கண்ணி–3)**

இப்பாடல் உணர்த்துகின்றது. இவற்றிலிருந்து தனி மனிதன் செய்கின்ற தவறானது சமூகத்தையும் அழித்துவிடும் என்ற சமுதாய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றார் கடுவெளிச்சித்தர்.

"சமுதாய ஒழுங்கு நிலைக்க வேண்டும் என எண்ணி அதற்கான தன் கடமைகளை ஒருவன் சரிவரச் செய்வதும் அறம்" (பெ. கண்ணதாஸ் 2013)

மேலும் இவரே அஞ்ஞானத்திலிருந்து விடுபடுதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர் தம் பாடல்களில் பட்டியல் இடுகின்றார். நல்லவர்களை நம்புதல், பெரியோர்கள் காட்டியப் பாதையில் செல்லுதல், சாதி, மதம் கடந்து எல்லோரையும் நேசித்தல், எதிர்பாராது அனைவருக்கும் உதவி செய்தல், வேதத்தை நம்புதல், அறநூல்களைப் படித்தல் ,இச்சைகளை நீக்குதல், பக்தி செய்தல், குருவின் பேச்சைக் கேட்டல் போன்றவை மெய்ஞானத்தை அடையும் வழிகள் என்று தெளிவுருத்துகின்றார். இதனை

**நல்வழிதனை நாடு – எந்த**

**நாளும் பரமனை நத்தியே நாடு**

**.................................... (கண்ணி – 7)**

என்ற பாடல் பகர்கின்றது. மனதின் பின் நீ செல்லாதே மனதை நீ அடக்கி சிவனை அடைவதில் ஆசை கொள் என்று இறைவழிபாம்டின் வழி மனிதனுக்கு அறச் சிந்தனையைக் கொண்டு செல்கின்றார். ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னை அறிந்தால்தான் இறையைப் பெற முடியும்.

நல்லவர்களை விட்டு விலகாமல் 32 அறங்களில் ஒன்றையும் தவற விடாமல் இருத்தல் வேண்டும். அடுத்தவா் கூறும் பொய் மொழிகளைக் கேளாமல், பொல்லாத செய்கைகளில் ஒன்றையும் மேற்கொள்ளாமல் இருப்பதோடு, நூல்கள் கூறும் நல்வழியில் நடந்து நல்லவர்கள் விரும்பும் வழியில் மனிதர்களை விரும்பி நடக்கச் சொல்கின்றார். மேலும் யாரிடமும் யாசித்து நிற்காதே, பெண்ணாசைக் கொண்டு உழன்ற வருந்தாதே. ஆசைக்கு ஒரு மனிதன் என்றுமே அடிமையாகக் கூடாது என்று கூறும் இவர், இறைவன் மீது பற்று வய்யுங்கள என்ற கருத்தை முன்வைக்கின்றார்

**பிச்சையென் றொன்றுங் கேளாதே – எழில்**

**பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே (கண்ணி – 10)**

மேற்கூறிவற்றை மட்டும் அறிந்திருந்தால் போதாது. இவ்வுலகின் இயல்புகளையும் பிறப்புக்கள் தோன்றுவதன் காரணத்தையும் அறிந்திருக்க வேண்டும் என்று எண்ணிய கடுவெளிச் சித்தர், இவ்வுலகு சுழன்று கொண்டிருப்பதைப் போலவே உயிர்களும் தான் செய்த கர்மங்களுக்கேற்ப பிறப்புகளை எடுத்துக் கொண்டிருக்கும். அவ்வினைகளிலிருந்து விடுபட வேண்டுமென்றால் ஆசைகளில் இருந்து நீங்க வேண்டும். எனவே பிறவித்துன்பம் நீங்கினாலொழிய மெய்யின்பத்தை அடைய முடியாது. இவ்வுடல் நிலையற்றது. இவ்வுடல் அழிவதற்கு முன்பே நன்மைகளைச் செய்து மெய்யின்பத்தை அடைய வேண்டும் என்பதை தன் பாடலின் மூலம் வலிவுறுத்துகின்றார். மேலும் நிலையாமை என்பது அனைத்தையும் துறத்தல் இல்லை, நிலையாமையின் மூலம் நிலையானதை அறிந்து கொள்ளல். அழியக்கூடிய இவ்உலகில் நல்ல நெறியில் நின்று நிலைத்த ஒன்றை அடைவது என்கின்றார்.

நாம் இறக்கும் பொழுது தம்முடன் வருபவை ஒன்றும் இல்லை, தான் செய்கின்ற வினைகள் மட்டுமே தன்னுடன் நிழற்போற் கூடவே வரும் அதனை அறியாது கங்கையில் நீராடல், காசிக்குச் செல்லல் போன்ற சடங்குகளைச் செய்வதன் மூலம் பாவங்கள் நீங்கும் எனில் நீங்காது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்பதை

**கச்சிக் கோடில் வினை போமோ – அந்தக்**
**கங்கையாடில் கததானு முண்டாமோ**
**பேசமுன் கன்கங்கள் சாமோ – பல**
**பேதம் பிறப்பது போற்றினும் போமோ. (கண்ணி – 16)**

மேற்கண்ட பாடலின் வழி அறிவதோடு மட்டுமன்றி, மெய்யறிவின் மூலம் மெய்ஞானத்தை அடையலாம். குருவின் அருளினால் சிவத்தை சிந்தையில் நிருத்தினால் முத்தி நிலையினை அடையலாம். என்பதை கடுவெளிச் சித்தர் மெய்ப்பிக்கின்றா்.

'இன்னா செய்தார்க்கும் இனியவைச் செய்' என்பதைப் போல ஒருவா் நமக்குத் தீமை செய்தலும் அவருக்கு நன்மையையேச் செய்தல் வேண்டும். அ∴து அ∴றிணை உயிர்களாயினும் பொருந்தும், ஏனெனில் சித்தா்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தவா்கள். மனிதன் என்பவனும் தனித்து வாழ இயலாத சமூக விலங்கு அவன் இயற்கையோடு ஒன்றி வழவேண்டிய கட்டாயச் சூழலுக்கு உட்பட்டே இருக்கின்றான். என்பதை உணாந்தே வலியுறுத்துகின்றனா் சித்தா்கள். ஒவ்வொரு மனிதனும் விலங்கினிடமும் அன்பு செலுத்த வேண்டும், என்பதற்காகவே பறவைகளின் மீது கல் எறியாதீா்கள், பாம்பைப் பிடித்து ஆட்டாதே என்று தன் பாடல்களில் இக்கொள்கையை முன்வைக்கின்றாா் கடுவெளிச் சித்தா்.

தனிமனித ஒழுக்கமே சமூக சமூதாய ஒழுக்கமாகும் தனி மனிதனின் உள்ளம் செம்மை பெற்றாலெழிய அற வாழ்வு தழைக்காது. மனித வாழ்வு என்பது அன்பிலும், தூய நடத்தையிலும், தெளிவிலும், அறிவிலும் உள்ளதால் அவற்றினைப் போற்றி மதிக்க வேண்டும் என்பதை இவா் முன்வைக்கின்றாா்.

காலந்தோறும் அறக்கருத்துக்கள் தோன்றிய வண்ணம் இருப்பினும் சித்தா்களின் அறச்சிந்தனை என்பது பொதுப்படையாகவே விளங்குகிறது. எக்காலத்திற்கும் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய நிலையில் திகழ்கிறது. மேலும் இறைச்சிந்தனை வழி அறக்கருத்துக்களை வலியுரித்தினாலும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதே சித்தா்களின் அறச்சிந்தனையாக அமைகின்றது.

**துணைநின்ற நூல்கள்:**


1. அறிவொளி. ஆ, சித்தா் பாடல்கள் மூலமும் உரையும், 2006, சென்னை: வா்த்தமானன் பதிப்பக வெளியீடு.
2. சிங்காரவேலு முதலியாா். ஆ, அபிதாணசிந்தாமணி, 1994, சென்னை.
3. கண்ணதாஸ்.பே, நட்ட கல்லும் பேசுமோ சித்தா் பாடல்கள் - ஓா் அறிவியல் நோக்கு, 2013, சென்னை: தமிழினி பதிப்பகம்.
4. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி இரண்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூா். 2001
5. தமிழ்ப்பிரியன் (உரையாசிரியா்), சித்தா் பாடல்கள் மூலமும் உரையும், 2016, சென்னை: கற்பகம் புத்தகாலயம்.

# புறநானூறு சுட்டும் கடிமரம் - ஓர் அறவியல் பார்வை

***பா.செங்கேணி,** முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம்.

தமிழ்சமூகம் இயற்கையுடன் ஓர் நெருங்கிய உறவினைப் பேணிவந்துள்ளது. தாங்கள் வாழும் வாழ்க்கைக்கு உறுதுணையாக இயற்கையைப் பக்கப்பலமாக நம்பிவந்துள்ளது. அனைத்து உயிர்களையும் சமமாக கருதி போற்றி வந்துள்ளனர் சங்ககாலமக்கள். இதற்கு உதாரணமாக முல்லைக்கு தேர் கொடுத்த பாரி, மயிலுக்கு போர்வைக் கொடுத்த காரி போன்றோரைக் குறிப்பிடலாம்.

தனக்கும் சமூகத்திற்கும் நன்மை ஏற்படும் நோக்கத்தில் செய்யும் எந்த ஒரு செயலும் அறத்தின் பாற்படும். தனிமனித நலனுடன் சமுதாய நலனுக்கும் அறம் உதவுகிறது.

காலத்திற்கேற்ப அறங்கள் மாறுபடவும் செய்கின்றன. வீரயுகத்தில் புறவலிமைகளும் போர் ஆற்றல்களும் பேராண்மைகளாக மதிக்கப்பட்டன. அறநெறிக்காலத்தில் ஒழுக்கம், அன்பு போன்ற உயற்குணங்கள் பேராண்மைகளாக மதிக்கப்பட்டன.

அறம் என்பது ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஒவ்வொரு மனிதற்கும் மாறுபட்டு அமைகிறது. சங்ககாலத்தில் இருந்து இன்று வரை அறம் மாறிக்கொண்டே வருகிறது.

புறநானூற்றில் ஒவ்வொரு மன்னர்களும் ஒரு காவல் மரத்தைக் கொண்டிருந்ததைக் காணமுடிகிறது. இக்கடிமரத்தினை எதற்காக மன்னர்கள் பாதுகாத்துள்ளனர் இம்மரத்தின் பின்னணி, போன்றவற்றை சூழலியல் திறனாய்வு கொண்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

இயற்கைபாற் மன்னர்கள் கொண்ட அறத்தன்மையினாலே இக்கடிமரத்தைப் போற்றிவந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் கருதுகோளாகக் கொண்டு ஆராயப்படுகிறது.

இலக்கியத்திற்கும் இயற்கைக்குமான உறவுகள் குறித்த உரையாடல்கள் நீண்டகாலம் இருந்துவந்தாலும் இயற்கை, இலக்கியம் ஆகியவற்றிற்கிடையேயான தொடர்புகள் குறித்த சொல்லாடல்கள் இரண்டாயிரத்திற்குப் பின்பே தீவிரமடைந்தன. சூழலியல் குறித்த உரையாடல்களும் சூழலியற்திறனாய்வின் வளர்ச்சியும் இவ்விவாதத்தைத் தொடங்கி வைத்தன.

உலகம் முழுவதும் இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டு வருவதை கலை இலக்கியங்கள் மறுக்க வேண்டும் எனும் குரல்கள் இருபதாம் நுற்றாண்டின் பிற்பகுதியில் ஒலிக்க தொடங்க அவை இலக்கியத்திலும் திறனாய்விலும் பெறும் தாக்கத்தை ஏற்படுத்தின. 1990- இல் **செரில் கிலாட்பெல்டி** இலக்கியத்திற்கும் சூழலியலுக்குமான உறவை **The Ecocriticism Reader Landmarks in Literary Ecology** என்ற நூல் மூலம் புதுப்பித்தார். அவரைத்தொடர்ந்து டேவிட் பாசல், லாரன்ஸ் பௌல், மெர்சன் போன்றோர் இக்கொள்கைப் பரவுவதற்கு காரணமாக இருந்தனர்.

சூழலியல் திறனாய்வில் கருப்பொருட்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. கருப்பொருட்கள் வகிக்கும் பங்களிப்பு குறித்து தொல்காப்பியத்தின் அகத்திணையியலில் இரு நூற்பாக்கள் வருகின்றன. அவை,

**"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறை சிறந்தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங்காலை"**( தொல். பொருள்.3)

அகப்பாடல்களில் இம்மூன்று பொருட்களும் முக்கியமானவையாகும். இம்மூன்று பொருட்களைக் கொண்டே ஒரு பாடலை உரையாசிரியர்கள் அது எந்த திணையைச் சார்ந்த பாடல் என்பதைக் குறித்துள்ளனர்.

**"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகையையோடு**
**அவ்வென கரு என மொழிப"**( தொல். பொருள்.20)

ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருட்களின் பட்டியலைக்குறிப்பிடும் தொல்காப்பியர் மரம் ஒன்றயும் குறிப்பிடுகிறார்.

போர் தொடுத்து வந்த அரசன் பகை அரசனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது போர் மரபு. வேங்கை,புன்னை,வேம்பு முதலிய மரங்களை அரசர் தம் வெற்றியைச் சிறப்பிக்கும் மரங்களாக மேற்கொண்டு சிறப்பாய் ஓம்பிவருவர். அம்மரத்தினை வீரர் இரவு பகலாகக் காத்து நிற்பர். இதனால் இம்மரம் கடிமரம் எனப்படும். இம்மரம் பகைவர் கைப்பட்டு வெட்டப்படாதவாறு போற்றுதல் மானமுடைய வேந்தரின் மறப்பண்பாகும்.

காவல்மரம் நாட்டையும், மக்களையும் காப்பாற்றும் என நம்பினர்.அதனால் காவல்மரம் என அழைத்தனர். “கடிமரம் சில அரசரால் தலைநகரில் மட்டும் தனிமரமாகவும் சிலரால் ஊர்தோறும் தனிமரமாகவும்,சிலரால் சோலைதோறும் தனிமரமாகவும் வளர்க்கப்பட்டதாகத் தெரிகின்றது” என்பர் ஞா. தேவநேயன்.

பொதுவாகப் பெருநிலவேந்தர்களும் குறுநில மன்னர்களும் சிலவகை இயற்கை மற்றும் பருப்பொருட்களைத் தத்தம் குடி மற்றும் அரசோடு இணைந்து அடையாளப்படுத்திக்கொள்ளும் மரபினைப் பின்பற்றி வந்ததை இலக்கியங்கள் வழி காணமுடிகிறது.

**சோழர் - ஆத்தி**

**பாண்டியர் - வேம்பு**

**சேரர் - பனம்பூ**

சோழர், பாண்டியர், சேரர் ஆகிய மூன்று மன்னர்களில் ஒவ்வொருவரும் தத்தம் குலத்தோடு ஒரு பூவையும் ஒரு விலங்கு அல்லது பருப்பொருளையும் கொண்டிருந்துள்ளனர். பாண்டியர்களுக்கு காவல் மரமாக வேப்பமரமும், சோழர்களுக்கு ஆத்திமரமும், சேரர்களுக்கு பனைமரமும் முறையே காவல் மரமாக இருந்துள்ளன.

வேம்பு, பனம், ஆத்தி போன்ற மரங்கள் அரசர்களின் செல்வாக்கோடு பெரும்புகழ் பெற்றததன் காரணமாக மக்கள் அதிகமாக வளர்த்து மேலும் அதற்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் மேலும் நாட்டில் இம்மரங்கள் பரவலாக வளரவும் இந்த கடிமரம் கருத்து பயன்நல்கியுள்ளது.

ஒவ்வொரு மனன்னின் குலத்தையும் ஆட்சி அதிகாரப் பரப்பையும் அடையாளப்படுத்திய கடிமரம் என்னும் காவல் மரத்திற்கு மிகவும் இன்றியமையாத இடம் கொடுக்கப்பட்டிருந்தது.

சேர, சோழ, பாண்டியர்கள் முறையே பனை,ஆத்தி, வேம்பு ஆகியவற்றைக் காவல் மரங்களாகக் கொண்டிருந்ததைப் போலவே வேறு சில அரசர்களும் காவல் மரங்களைப் பெற்றிருந்தனர். திதியன் புன்னையையும், பெண் கொலைப்புரிந்த நன்னன் மாமரத்தையும், எழில் மலை நன்னன் வாகையையும், கடம்பர்கள் கடம்பையும் தத்தம் காவல் மரமாகக் கொண்டிருந்துள்ளனர்.

இக்காவல் மரம் என்பது ஒரு நாட்டை ஆளக்கூடிய மன்னனின் அடையாளச் சின்னமாக மட்டுமல்லாமல் அவனுடைய குடிச்சின்னமாகவும் அமைந்திருந்தது. பொதுமக்கள் அதனைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. மன்னனின் மானம், பெருமை, அவனுடைய ஆட்சி, நீடிப்பு மற்றும் வாழ்வின் இருப்பு என்பன அக்காவல் மரத்தின் இருப்பினால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டன.

முடியாட்சி முடிந்து குடியாட்சி நடந்து வரும் இந்நாளிலும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏன் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேசியமரம், பறவை, விலங்கு போன்றவை அமைந்துள்ளது. இதன் மூலம் அந்த தேசிய சின்னங்களுக்கு எவராலும் இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மேலும் அழியும் தருவாயில் உள்ள விலங்கு, மரம் போன்றவற்றிற்கு வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. இதன் மூலம் இதற்கு பொதுமக்களால் எந்த அழிவும் ஏற்படாமல் காக்கப்படுவதுடன் இதன் வளர்ச்சியும் அதிகப்படுத்தப்படுகிறது. இதைப்போலவே மன்னராட்சியிலும் இந்த காவல் மரம் என்ற கருத்து அமைந்து இருக்கலாம்.

மக்கள் தங்கள் சுயஇலாபத்திற்காக மரங்களை வெட்டுகின்றனர். இதனால் மழைவளம் பாதிக்கப்பட்டு சரியாக மழைப்பொழிவு இல்லை. தற்பொழுது சுற்றுச்சூழல் சிந்தனையால் விழிப்புணர்வு ஏற்பட்டு ‘மரம் வளரப்போம் மழைப்பெறுவோம்’ என்ற வாசகம் முன்மொழியப்பட்டு வருகிறது.

பூமியின் இயற்கை வளஅழிப்பு முயற்சிகள் சுற்றுச்சூழல்சிதைவுக்குக் காரணமாக அமைகின்றன. நீர்வளத்தைச் சுரண்டுதல், நிலவளத்தை அழித்தல், தொழிற்சாலைகள் அமைத்துக் காற்றை மாசுபடுத்துதல், சுற்றுப்புறச்சுகாதரச்சீர்கேட்டை உருவாக்குதல் போன்ற காரணிகளால் இயற்கை இடர்பாடுகள் நாள்தோறும் நடந்துக்கொண்டுவருகிறது.

தனிமனித தேவைகளுக்காகவும் சமூகத்தின் தேவைக்களுக்காகவும் மனிதஇனம் காடுகளையும், புல்வெளிகளையும் மிகப்பெரிய அளவில் அழித்துவருகிறது. காவல் மரம் அல்லது கடிமரம் என்ற போக்கு மரங்களைக் காக்க வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புமுறையாக இருப்பதாகத்தெரிகிறது.

புறநானூறு பாடல்கள் கடம்பமரத்தின் பல்வேறு தன்மைகளைக் கூறுகிறது. கடம்பமரம் அதிக வலிமையுடையது.

மேலும் இதன் பூ அதிக நறுமணம் கொண்டது என்பதை இப்பாடல் கூறுகிறது.

**"களிறு படிந்து உண்டெனக் கலங்கிய துறையும்**

**கார்நறுங் கடம்பின் பாசிலைத்தெரியல்"** (புறம்.23)

அதாவது மழைகாலத்து மணம் கமழும் கடம்பின் பசுமையான இலையோடு கலந்து கட்டிய மாலை என்று கடம்பின் தன்மையை இப்பாடல் கூறுகிறது. மேலும் நீண்ட பிடியுடைய கோடரி வெட்டதலால் நிலை சாய்ந்து வீழும் பூக்கமழும் நெடிய கிளைகள் கொண்ட கடிமரம்.

**"வீகமழ் நெடும்சினை புலம்பக் காவுதொறும்**

**கடிமரம் தடியும் ஓசை தன் ஊர்"** (புறம்.36)

ஒரு மன்னனுக்கு காவல் மரம் எவ்வளவு முக்கித்துவம் வாய்ந்தது என்பதை இப்பாடல் கூறுகிறது. அதாவது ஒரு நாட்டின் வயல்களை கொள்ளையிடினும் இடுக அகன்ற ஊரை எரிக்கினும் எரிக்க. ஆனால் பகைவர் காவல் மரத்தை மட்டும் வெட்டுவதைக் கைவிடுக எனப்புலவர் கூறுகிறார்.

மரங்களின் தன்மையினாலே ஐந்து நிலத்தில் ஒரு நிலமான மருதத்திற்கு மருதம் எனப்பெயர் வந்துள்ளது. அதாவது மருதமரங்கள் அதிகம் காணப்படுவதால் இப்பெயர் பெற்றுள்ளது. மேலும் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு மரம் சிறப்பாக குறிப்பிடுகிறது.

**முல்லை - கொன்றை**

**குறிஞ்சி – வேங்கை**

**மருதம் - மருதம்**

**நெய்தல் - புன்னை**

**பாலை - பாலை**

அனைத்து உயிர்களை விடவும் கூடுதல் அறிவைப் பெற்றுள்ள இனமாக மாந்தர் இனம் அறியப்படுகிறது. இதன் காரணமாக பேராற்றல் மிக்கவனாக மனிதன் உள்ளதால் பிற உயிரினங்களைக் கட்டுப்படுத்தி தன் ஆளுமைக்குள் கொண்டுவர முயல்கிறான். ஐம்பூதங்களான காற்று, மண், பூமி வானம், கடல் எனயாவும் தனது பரப்பெல்லைக்குள் வரவேண்டும் என்று விரும்புகிறான். இந்த பேராசையின் காரணமாக இயற்கை தன் இயல்பிலிருந்து மாற்றம் கண்டு வருகிறது. ஆனால் பழந்தமிழர் இயற்கையுடன் தங்கள் வாழ்வை அமைத்துக்கொண்டதோடு மட்டுமின்றி இயற்கைக்கு ஏற்றாற்போல் தங்களையும் மாற்றிக்கொண்டுள்ளனர்.

ஒரு நாட்டில் உள்ள மரங்கள் அழிந்தால் அந்நாட்டின் அழிவுக்கு அறிகுறியாகும். மரங்களை ஓம்பும்பொருட்டு அறத்தன்மையுடன் கடிமரம் என்னும் காவல் மரத்திற்கு மிகவும் இன்றியமையாத இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

**மேற்கோள் நூல்கள்**


1. இளங்குமரன் - புறநானூறு(2003)
   கோவிலூர் மடாலயம்
   கோவிலூர் 630 307.
2. தனஞ்செயன். ஆ - சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும் (2010)
   நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
   சென்னை 600 098.
3. அரங்க. இராமலிங்கம் - சங்க இலக்கியத்தில் வேந்தர் (1987)
   ஐந்திணைப் பதிப்பகம்
   சென்னை 600 005.

# திருக்குறள் அறவியல் உணர்த்தும் மனநலம்

***ஆ.அடிசன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

கி.மு. முதல் நூற்றாண்டில் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள், அறத்தை வலியுறுத்துவதன் வழி பலவிதமான மனித வாழ்வியலுக்கு பயன்தரக்கூடிய சில முக்கியமான கருத்துக்களை எடுத்துரைக்கின்றது.

அவற்றில் வெளிப்புற காரணிகளும் உட்புற காரணிகளும் அடங்கும். மனிதன் தன் கண்களால் காணக்கூடிய நிகழ்வுகளை வெளிப்புற காரணிகள் என்றும் கண்களால் காண இயலாத மனதால் மட்டுமே உணரக்கூடியவற்றை உட்புற காரணிகள் என்றும் கருதலாம்.

வெளிப்புற காரணிகளை பற்றி பலரும் பேசி இருக்கிற நிலையில் உட்புற காரணியான மனம்சார் கருத்துக்களை வள்ளுவர் போன்று ஒரு சிலர் மட்டுமே பேசியுள்ளனர். அதில் குறிப்பாக வள்ளுவரை எடுத்துக்கொண்டு அவர் கூறியுள்ள மனநலம் பற்றிய சிந்தனைகளை இங்கு ஆராயலாம்.

மனிதனது மனதில் ஏற்படும் நிகழ்வுகளுக்கும் வெளிப்புற நடத்தைக்கும் தொடர்பு உள்ளது என்பதை அன்றே உணர்ந்த வள்ளுவர் தனது நூலின்வழி எத்தகைய அறம் சார் நிகழ்வுகளை நிகழ்த்த எது போன்ற மனநிலை வேண்டும் என்பதை திருக்குறள் பல அதிகார பாடல்களில் விளக்குகிறது.

உள்மன ஊக்கம் இன்றியமையாதது. ஊக்கமே நிரந்தர செல்வம், மற்ற செல்வங்கள் நில்லாமல் நீங்கி போகும் என்று ஒரு குறட்பா மன உறுதியின் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**

**நில்லாது நீங்கி விடும் (குறள் : 572)**

உள்ளம் உடைமை உடைமை ஊக்கம் உடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது பொருள் உடைமை நில்லாது நீங்கி விடும். மற்ற பொருளுடைமை நிலை நில்லாது நீங்கிப்போம்.

ஊக்கமுடைமை எனும் அதிகாரத்தில் உள்ள இந்த குறள் உள்ளத்தின் உறுதியான தன்மையின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. ஊக்கம் இருந்தால் உள்ளமானது சிறப்பான செயல்களைச் செய்ய தூண்டும். அதன் வழியிலே அறமானது நிலைபெறும் என்பதனை வள்ளுவர் புரிந்துணர்த்தியுள்ளார்.

**அடுத்தது காட்டும் பாலிங்குபோல் நெஞ்சம்**

**கடுத்தது காட்டும் முகம் (குறள். 706)**

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல குறள் நெஞ்சத்தின் பிரதிபலிப்பு முகத்தில் தெரிவதை உணர்த்துகிறது. மனதின் செயல்களான சிந்தனை, உணர்தல், பேச்சி மற்றும் செயல்கள் இவை மனதின் இசைவு பெற்றும் சில குறைவு பெறாமலும் உடல் உறுப்புகள் மூலம் வெளிப்படுகின்றன.

மேலும். மற்றொரு குறள் இந்தத் தன்மையை இன்னும் அழகாக சித்தரிக்கிறது.

**மோப்பக் குழையும் அணிச்சம் முகம்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து (குறள். 90)**

ஒருவரின் மனச்செயலை வெளிக்காட்ட இந்தக் குறள் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

மனதில் தீய எண்ணங்கள் இருந்தால் அதை மனம் வெளிக்காட்டிவிடும் அதனால் சமூகத்தில் நமக்கு கிடைக்கக்கூடிய அங்கிகாரங்கள் பாதிப்பிற்கு உள்ளாகும். எனவே அத்தகைய அறமற்ற செயல்களை தவிர்க்க நமது மனதை நன்மை தரும் எண்ணங்கள் கொண்டதாக மாற்றிக்கொள்ள வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

மற்றும் ஒரு குறளில் மனம் கட்டுப்பாடுகளை கடந்து பலவகைப்பட்ட சிந்தனைகளையும் சிந்திக்க கூடியது எனவே அதனை அறிவாற்றல் கொண்டு நன்நெறி பக்கம் திருப்ப வேண்டும் என அறிவுடைமை என்னும் அதிகார குறட்பா ஒலிக்கிறது.

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரிஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு. (குறள். 422)**

இந்தக் குறள் மனம் இயல்பாகவே நன்னமசார் கருத்தாக்கங்களிலிருந்து தீமையான கருத்துக்கள் பக்கம் செல்லக்கூடியது என்பதையும், இருப்பினும் அத்தகைய மனச்செயல்பாட்டை மனதில் உள்ள அறிவாற்றல் கொண்டே கட்டுப்படுத்தவும் இயலும் என்பதையும் குறள் 422. தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்குகிறது.

**மனநலம் மன்னுயிர்க் காக்கும் (குறள். 457)**
**மனநலத்தின் ஆகும் மறுமை (குறள். 459)**

போன்ற செய்யுள் பாக்கள் ஒற்றை வரியில் பெருத்த சிந்தனையை உரைத்துவிட்டு செல்கின்றன.

மனநலம் என்பது மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக உள்ளது என்பதை திருக்குறள் உண்ர்ந்த விதமாகவே இந்த பாடல் அமைவுகள் உள்ளன.

மனிதனுடைய ஆரோக்கியமான மனநிலையையே திருவள்ளுவர் போதிக்கிறார். ஏனெனில் அதுவே தனிமனித அறத்திற்கும் சமூக அறத்திற்கும் அடிப்படையான ஒன்றாக உள்ளது.

ஆரோக்கியமான மனநிலை என்பது எக்காலத்திற்கும் எல்லா மனிதர்களுக்கும் தேவையான ஒன்றாக இருப்பதால்தான் உலகப் பொதுமறை என போற்றப்படும் திருக்குறள் மனநலம் பற்றி பேசுகிறது.

வள்ளுவர் மொழிந்த மனநலம் தற்போது நமது சமூக சூழலில் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. ஏனெனில் அந்த அளவிற்கு மனிதர்களின் மனபோக்கில் சீர்கேடு மலிந்து காணப்படுவதால் அவர்களால் சமூகத்திலும் வன்முறைகளும் ஒழுங்கற்ற சூழலும் நிலவுகின்றது.

**உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னுஞ் செருக்கு (குறள். 598)**

உள்ளத்தில் ஊக்கம் இல்லாதவர் இவ்வுலகில் தாம் வன்மை உடையேம் என்று தம்மை தானே எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடைய மாட்டார் என்பது இந்தக் குறளின் விளக்கம்.

ஆனால், இந்த குறட்பா விரிவான நிலையில் நமக்கு உணர்த்தும் பொருளானது உள்ளத்தில் உள்ள உறுதி தன்மையால் உருவாகக் கூடிய ஊக்கத்தின் தேவையை உரைக்கிறது. ஊக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் உள்ள இந்த செய்யுள் உள்ளத்தில் ஆரோக்கியமான அதாவது நலமிக்க சூழல் நிலவினால் மட்டுமே வாழ்வின் பல இக்கட்டான சூழல்களில் உள்ளத்தின் உதவியுடன் வெற்றிகரமான செயல்களில் ஈடுபட முடியும்.

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு. (குறள். 595)**

நீர்பூக்களின் தாளின் நீலம் அவை நின்ற நீரின் அளவினை பொருத்தே இருக்கும். அதுபோல மக்களின் ஊக்கத்தை அளவை பொருத்தே வாழ்வின் உயர்வும் அமையும் என்று குறள் கூறுகிறது.

இந்த இடத்தில் வெள்ளத் தனைய மலர்நீட்டம் என்ற உவமையை வள்ளுவர் பயன்படுத்த காரணம் நீரில் உள்ள மலரானது அதனுடைய முழுமையான வளர்ச்சிக்கு அடிப்படை ஆதாரமாகப் பயன்படுத்திக் கொள்வது தண்ணீரை மட்டுமே தண்ணீர் இல்லை என்றால் அப்பூவின் வாழ்வானது முடிந்துவிடும். அதுபோல மனிதர்களின் உயர்வுக்கும் அடிப்படை ஆதாரம் மனம்தான் என்பதை வள்ளுவர் உவமை குறிப்பால் உணர்த்துகிறார்.

இவ்வாறு திருவள்ளுவர் பல இடங்களில் எந்த உவமையைப் பயன்படுத்தினால் சொல்லவந்த பொருளை உணர்த்த முடியும் என்று தக்க முறையில் ஆராய்ந்து உவமைகளை கையாளுகின்றார்.

**உடையர் எனப்படுவது ஊக்கம் (குறள். 591)**
**உள்ளம் உடைமை உடைமை (குறள். 592)**

பொருட்பாலில் அரசியல் என்னும் இயலில் அமைந்துள்ள ஊக்கமுடைமை சார்ந்த இந்த குறட்பாக்கள், அரசன் போன்ற தலைமக்களுக்கு மட்டுமே உரியது அன்று மாறாக அனைவருக்கும் முதன்மையாக வேண்டதக்கது என கருத இடமுண்டு.

குறள் 591 ஊக்கம் எனப்படும் உள்ளத்தின் முதன்மையான பண்பையே வள்ளுவர் உடைமை என காண்கிறார். மற்றதை பெற்றிருந்தாலும் அது பயனற்றதாகவே கருதப்படுகிறது என்றும் உரைத்துள்ளார்.

உள்ளம் உடைமை உடைமை என்னும் 592 வது குறட்பா மேலே சொன்ன கூற்றை உறுதியாக உரைப்பதை நம்மால் காண முடிகிறது.

உள்ளம் எனப்படுவதே நிலைத்த உடைமை எனவும் மற்றவை நில்லாது நீங்கிவிடும் தன்மையை உடையது என வள்ளுவர் குறிப்பிடுகிறார். இந்த இரண்டு வரி பல விரிவான உள்ளடக்கங்களை பெற்றது அதிலும் குறிப்பாக உளத் தத்துவம் சார்ந்த விளக்கத்தை பெற்றதாக இந்த குறட்பாக்கள் அமைந்துள்ளது.

உள்ளத்தில் உள்ள உடைமை என்பது அதில் உள்ள உணர்வுகளை அல்லது சிந்தனைகளை குறிப்பதாக கருத இடமுண்டு அவ்வாறெனில் அத்தகைய சிந்தனை உணர்வுகள்தான் நிரந்தரமானவை மற்ற புறவெளியில் காணப்படும் புறப்பொருள்கள் அனைத்தும் நிலைத்த தன்மையை உடையவை அல்ல என குறள் குறிப்பிடுகிறது. இத்தகைய குறள் மொழிக்கான ஆழமான காரணம் பல இருக்கலாம் ஆனால் நமது ஆய்வு கண்ணோட்டத்திற்கு புலப்படுகின்ற பொருளானது குறையுடையதாக இருப்பது போன்ற தோற்றம் காணப்படுகிறது.

மேலும், விருப்பம், வெறுப்பு, மயக்கம் ஆகிய மூன்றின் காரணமாக மனதின் செயல்பாடுகளில் ஏற்படும் கோளாறுகள் பலவிதமான பண்பாட்டு சீரழிவுகளை உருவாக்குகிறது. இதுபோன்ற மனநலமற்ற உணர்வெழுச்சிகளை கட்டுப்படுத்த வேண்டியவைகளாக உள்ளன என்பதை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றின்**

**நூமம் கெடக்கெடும் நோய். (குறள். 360)**

காமம், கோபம், மயக்கம் என்னும் அறியாமை ஆகிய மூன்றும் கெடுமாறு ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் வருகின்ற துன்பமாகிய நோய் கெடும் என்பது குறள் கூறும் விளக்கமாகும்.

ஒரு மனிதனை முற்றிலுமாக ஆட்டி படைத்து அவனது ஆளுமையில் கோளாறை ஏற்படுத்த கூடியவை காமமும் - கோபமும் இந்த இரண்டிலும் மன உந்தலை கட்டுப்படுத்த இயலாத அறியாமை ஆகிய மூன்றும் சேர்ந்து மனிதனுடைய மனதில் நோய்த்தன்மையை உருவாக்குகிறது. அந்த நோய்த்தன்மையானது மனித குலத்தின் அறவாழ்வை சீர்குலைக்க கூடிய ஒன்றாக உள்ளது என்பதை வள்ளுவர் உணர்ந்திருந்ததால் தான் அவர் பல இடங்களில் அறம் வலியுறுத்தும் போக்கில் காமத்தையும் கோபத்தையும் கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறார். இதே நிலையில் மேலும் சில குறட்பாக்களை காணலாம்.

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**

**தவாஅப் பிரப்பீனும் வித்து. (குறள். 361)**

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் ஒழியாமல் வருகின்ற பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து அவா என்று கூறுவர்.

**இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்**

**பண்பினை பாரிக்கும் நோய். (குறள். 851)**

எல்லா உயிர்களுக்கும் மற்ற உயிர்களோடு பொருந்தாமல் வேறுபடுவதாகிய தீய பண்பை வளர்க்கும் நோய் இகல் என்று கூறுவர்.

இந்த இரு குறட்பாக்களும் இதற்கு முன்பு கண்ட குறள் 360இன் தொடர்ச்சியாகவும் அதனுடைய விரிவாகவும் காணமுடிகிறது.

அவா என்ப எல்லா உயிர்க்கும், அதாவது ஆசை அல்லது வேட்கை விருப்பம் என்று தற்போது வரையறை செய்யப்படும் அவாவானது எல்லா உயிர்களுக்கும் இயற்கையான ஒன்று அதனை கட்டுப்படுத்த தவறினால் பிறவித் துன்பம் உண்டாகும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதே நிலையைதான், இகல் என்ப எல்லா உயிர்க்கும் என்ற குறளும் மேலே உள்ள குறளின் பொருண்மையோடு தொடர்புடையதே ஒரு குறளில் அவாவினால் ஏற்படும் துன்ப நிலையினையும் மற்றொரு பக்கம் கோபத்தினால் ஏற்படும் துன்ப நிலையினையும் எடுத்துக்காட்டி அத்தகைய மனோ பிரச்சனை சார்ந்த உந்தல்களிலிருந்து தங்களை காத்துக்கொள்ள வேண்டுமென வள்ளுவ பெருந்தகை மொழிந்துள்ளார்.

அவாவின் கிளை மன உந்தல்களாக, பிறருக்கு பொருள் மற்றும் பிறர் மனைவி மீது ஆசைபடுதல், மது அருந்துததல், புலால் உண்ணுதல், இதுபோன்ற இன்னபிற ஒழுக்கமற்ற செயல்பாடுகளை மனம் செய்ய தூண்டுகிறது.

வெகுளி என்று வள்ளுவரால் குறிப்பிடப்படும் கோபத்தின் காரணமாக, பிற உயிர்களுக்கு இன்னாச் செயல்களைச் செய்தல், கொலைபுரிதல், பேச்சின் மூலமும் பிற செயல்களின் மூலமும் துன்பத்தை விளைவித்தல், பிறர் மீது அன்பு செலுத்தாமல் வெறுத்து ஒதுக்குதல் போன்ற பிறருக்கும் சமூகத்திற்கும் பொருந்தாத செயல்களில் மக்கள் ஈடுபடுகின்றனர்.

மனிதன் கண், காது, நாக்கு, மூக்கு, உடல், பாலியல் மையங்கள் ஆகிய பொறி இடங்களிலிருந்து உந்திய உணர்வுளை கட்டுப்படுத்தியதால் உருவானவை அறங்கள். என ராஜ்கௌதமன் அறம் அதிகாரம் நூலில் பக்கம் 13 இல் குறிப்பிடுகிறார்.

இவர் கூறியவாறு உடல் உறுப்புகளால் ஏற்படும் உணர்வுகள் என்பது மனதில் தோன்றக்கூடியவை எனவேதான் வள்ளுவர் அவரே நேரடியாக பல இடங்களில் மனம், நெஞ்சம். உள்ளம் என்ற வார்த்தைகளை பயன்படுத்திவிடுகிறார்.

அதற்கு காரணம் அறத்தை சரியான முறையில் மேற்கொள்ள முயல்வோர் மனம் சார்ந்த நிகழ்வுகளின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்பதனால்தான்.

மானுட சமுதாயம் வளர வளர அதன் தேவைகள் மாறுகின்றன. தோற்றங்கள் மாறுகின்றன. அதற்கேற்ப பழைய சித்தாந்தங்கள் மாறி புதிய சித்தாந்தங்ள் மலர்கின்றன. அதற்கேற்றவாறே புதிய இலக்கியங்களும் படைக்கப்படுகின்றன. ஆனால் வள்ளுவம் காட்டும் ஒழுக்க நெறி என்பது நமது மண்ணுக்குரியது என்றாலும் அதன் தேவை எல்லா நாட்டிற்கும் எல்லா மக்களுக்கும் தேவையான ஒன்றாகவே உள்ளது.

இன்றைய சூழலில் மனநலம் அல்லது மன ஆரோக்கியம் என்பதும் அனைவருக்கும் பொதுவானதேயாகும். மக்கள் நல்வாழ்வு பெற்று வாழ உடல்நலம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு மனநலமும் முக்கியமானது. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் என்ற குறளை இன்றளவிலும் புரிந்துகொள்ளாத நிலை நமது தமிழ் சூழலில் நிலவிவருகிறது.

வள்ளுவர் மனிதனுடைய மனம் தொடங்கி, உடல், பேச்சு, அரசாட்சி, காதல், இல்லறம் போன்ற எதை பற்றி பேசி இருந்தாலும் அவை அனைத்தும் உலக மாந்தர் அனைவருக்குமான பொது அறமேயாகும்.

அறிவியல் துறையில் நியூட்டன் பருப்பொருள் பற்றி ஒரு கோட்பாடு சொல்லியிருக்கிறார் என்றால் அது எந்த பருப்பொருளுக்கும் பொருந்தும். எந்த நாட்டில் உள்ள பொருளுக்கும் பொருந்தும் எனவே அவரது இயற்பியல் கோட்பாடு உலகம் முழுவதிற்கும் பொதுவானதா இருப்பது போல வள்ளுவரின் குறளும் பொதுவானதாக உள்ளது.

வள்ளுவர் மொழியைப் பற்றி பேசும் இடத்தில் தனது தாய்மொழி உட்பட எந்த நாட்டின் மொழியையும் குறிப்பிட்டிருக்க மாட்டார்.

அதேபோல் அரசாட்சி பற்றி பேசியிருப்பார்.

ஆனால், எந்த நாட்டின் பெயரையோ, அல்லது அரசாங்கத்தையோ குறிப்பிடமாட்டார். இதே நிலையில் மதம், இலக்கண இலக்கிய நூல் பெயர்கள், மக்கள் குணப்பெயர்கள் போன்ற எதையும் குறிப்பாகப் பயன்படுத்தி இருக்க மாட்டார்.

(வாழும் வள்ளுவம் - வா. சே. குழந்தைசாமி, பக்கம் 47, 48 இல் குறிப்பிட்டுள்ளார்)

எல்லா பொருண்மைகளுக்கும் இத்தகைய உலக பொது பண்பை தன்னகத்தே பெற்று திருக்குறள் மனநலம் பற்றி பேசுவதிலும் உலகர் மாந்தர் அனைவருக்குமான பொது கருத்தையே முன்வைக்கிறது.

குறிப்பாக மனித குலம் நல்ல அறவாழ்வை மேற்கொள்ள மனநலம் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து அதை உரைத்துள்ளதை நம்மால் காண முடிகிறது.

**துணைநூல்கள்:**


1. திருக்குறள் பரிமேலழகர் உரை திருமகள் நிலையம், நான்காம் பதிப்பு: ஜூலை 2014, தி.நகர். சென்னை. 17.
2. வாழும் வள்ளுவம், வா.செ. குழந்தைசாமி, எட்டாம் பதிப்பு, ஆகஸ்ட் 2004, பாரதி பதிப்பகம். தி.நகர். சென்னை.17.
3. திருவள்ளுவர் ஒரு மருத்துவர், கு. மோகனராசு, முதல் பதிப்பு ஏப்ரல் 2006, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை – சென்னை 600 108.
4. அறம்/அதிகாரம், ராஜ்கௌதமன், முதல் பதிப்பு அக்டோபர் 1997, விடியல் பதிப்பகம், உப்பிலிபாளையம் - கோயம்புத்தூர் 641 015.